* THE HON. SRI C. SUBRAMANIAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இன்னும் சுமார் 3½ மணி நேரம் விவாதத்திற்கு இருக்கிறது. நாம் 1½ மணி வரையில் உட்காரப்போகிறோம். அதற்குள் அதாவது இந்த 3½ மணி நேரத்திற்குள் விவாதத்தை முடித்து விடலாம். இன்னும் க்ளாஸ் பற்றி விவாதம் வரும் போதும் பேசலாம். அப்பொழுதும் பேசவேண்டியவர்கள் இருப்பார்கள். ஆகையால் 1½ மணிக்கே முடித்து விடலாம். இரவில் வைத்துக்கொள்வதாக இருந்தால் அப்பொழுது பேசுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். அதனால் 1½ மணிக்கே முடித்து விடலாம் என்று தோன்றுகிறது."

MR. SPEAKER :—" The hon. Member Sri Swayamprakasam will now initiate the debate."

* SRI S. SWAYAMPRAKASAM :—" Mr. Speaker, Sir, the importance of this Bill cannot be exaggerated at this juncture. As I said earlier, this measure relates to the economic position of this State. When a similar Bill was originally introduced by the previous ministry, I was saying that the provision to give relief for richer agriculturists was not at all necessary. Anyway, then it was thought fit to give relief to all sorts of agriculturists without considering the nature of the debt. That Act has been in operation for about a year and its result is well known.

" When we were sitting last, the urgent necessity of bringing in a fresh legislation or amendment Bill was put forth and the Government anyhow slept over this matter and towards the end, came to the House with a request that a month more time was necessary. That only shows that the Government are not anxious to prepare this Bill. The time factor is very essential in a matter like this. The original Act expires by the end of this month. The present Bill has to be regarded as a separate one, as it does not have any provision to substitute that Act or to take the place of that Act. The original Act when we come to the end of this month, automatically ceases and this Bill looks as though it takes the place of that one.

" When such a measure is introduced, my own impression is that the Government ought to have been more careful in dealing with the rights and privileges of persons who were affected by the original Act. The previous Act gave relief to certain persons called ' agriculturists ' and the scope of the definition of ' agriculturist ' in the present measure has been restricted, with the result that

22nd February 1955] [Sri S. Swayamprakasam]

certain persons who were able to get relief under the original Act are not getting relief under the present measure. The Government did not think it proper to consider sympathetically the case of those persons who got relief under the original Act and who would be deprived of that relief from 1st March 1955 on account of the coming into force of this measure. Creditors may be classified into three categories—creditors who, in spite of the provisions of the Act, have filed suits and the suits are pending in the court, creditors who though the debt due to them got time-barred did not choose to file a suit and creditors, the debts due to whom get time-barred before the 1st of March 1955, who will have to file suits immediately before the time-bar. The Government have not made it clear to them sufficiently early as to whether they are going to extend the life of the present Act or make any changes so as to enable them to be prepared to meet the possibility of having to file suits. Somehow the original Act created an impression in the minds of creditors and debtors that some relief will be given to them. They were hoping that with that relief, they could devote more attention to the soil. Suddenly people who were benefited by the original Act are deprived of that benefit. On the 1st March 1955, those creditors whose suits have been stayed or the debts due to them got time-barred, will have to find the resources for prosecuting the pending suits or filing new suits. Immediately on the day of filing of the suit, they will have to shell out the money required for the stamp paper. Under the original arrangement, if a debt got time-barred, a suit could be filed on a half-rupee or one-rupee stamp paper. But now a High Court order prohibits such a thing. As regards debtors also, if the Government had told them in time that the original Act would expire by the end of February and that they must find the resources for repaying their debts, they might have been careful enough. The price of paddy and other foodgrains was somewhat higher last year than this year and the agriculturists could have paid a portion of their debt piecemeal. Thinking that the original Act would be extended, even those who were in a position to pay did not repay their debt. On the 1st March 1955, creditors and debtors will have to find the resources for prosecuting suits and this expenditure could have been avoided if only the Government had brought forward the legislation earlier. In that sense, creditors as well as debtors are put to much difficulty. 10-10 p.m.

" In the Bill under discussion, the definition of ' agriculturist ' is very much restricted. No doubt in my previous speech I pleaded for restricting its scope. My present plea is, having commenced to give relief to certain other people also, we should continue to give them relief, considering the present economic position in the State. The Select Committee, instead of improving the Bill, reduced the scope of relief. For instance, the Bill as introduced excluded from its scope small creditors owning property not exceeding Rs. 5,000. No doubt there is the difficulty of proving in a court the value of one's property. Even though that difficulty is there, it is the duty of the Government and the legislators to try

[Sri S. Swayamprakasam] [22nd February 1955

their best to find out a way of giving relief instead of removing altogether the provision giving relief. There may be young widows or other persons who may have no other property and whose only income for eking out their livelihood is the interest on the amount they have lent. What is to be the fate of such persons? We should make provision for giving relief to such persons.

"Further, an agriculturist is defined as 'a person who has an interest other than interest as a simple mortgagee' in any land. Agriculturists can be classified into three categories—persons who own the land, persons who enjoy the land and persons who actually work on the land. Persons who enjoy the land can say that they too have got an interest in the land to the extent they are enjoying it. The labourers may say that they have no other avocation in life except the cultivation of the land and that therefore they too have got an interest. The interpretation of the word 'interest' will lead to complications. The Government must make it clear as to the interest of which of these categories of agriculturists they refer to. My idea is that they must put in a suitable word so as to cover the interest of all the three categories of agriculturists. The Bill has to be improved in this way. In spite of the fact that the lawyer Members in this House may be considered to be a hindrance, I want to submit that lawyers in this House occupy an important position in the sense that they would try to perfect the
10-20 a.m. law so that lawyers may not get good work in Courts. If a bad law is enacted, that means good work for the lawyers. The function of lawyer members is very important in respect of any piece of legislation. Therefore, the suggestions of lawyer Members ought to be given due consideration so that in the end, the object of the Bill itself may not be defeated. The object of the present Bill is to give relief to poor agriculturists who are working on the soil. If we enact a bad law in regard to this matter, in order to find out the relief an agriculturist is entitled to, he may be forced to go up to the High Court. If, in the end, the High Court says that he is not entitled to any relief, then, considering the time and money he would have already spent, it will be a greater hardship to him. So, I request the Government to ponder over the matter and bring in suitable amendments to the Bill."

(Deputy Speaker in the Chair.)

* **Sri C. KANDASAMY** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கடனைத் திருப்பி தவணைகளில் செலுத்துவதற்கு வசதி செய்யும் இந்தச் சட்டத்தைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப் பட்ட பொறுக்குக் கமிட்டியில் அங்கத்தினராக இருந்த மேல் சபை மெம்பர் ஸ்ரீ கே. பாலசுப்ரமணிய அய்யர் தன்னுடைய ஆட்சேபனைக் குறிப்பில் **"The calamitous consequences of the Moratorium Act have been to some extent minimised by the present Bill"** என்று சொல்லியிருக்கிறாரே, அதைப்போன்றதொரு அடிப்படை மனோபாவத்துடன் தான் சர்க்கார் இந்த மசோதாவையே தயாரித்திருக்கிறார்களோ என்றுதான் எல்லோரும் நினைக்க வேண்டியிருக்கிறது.

22nd February 1955] [Sri C. Kandasamy]

"ஏனென்றால் இது இன்றையதினம் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய தொல்லைகளை, கஷ்டங்களை எந்த விதத்திலும் குறைப்பதாக இல்லை. அவர்கள் நன்மை அடையவேண்டுமென்ற கருத்தோடு தயாரிக்கப்படாமல், மோசடியாகக் கடன் கொடுத்துக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு அனுகூலம் அளிப்பதாகவே இருக்கிறது. கடன் கொடுத்து மோசடியாக ஒன்றுக்குப் பத்தாக எழுதி வாங்கியவர்களும், சரிக்குசரி வட்டி வாங்கியவர்களும் 'மாரடோரியம் சட்டம்' கொண்டுவரப்பட்டபோது மிக பயந்துவிட்டார்கள். அதனால் ஏகப்பட்ட ரகளை வேறு செய்து வந்தார்கள். அதற்கெல்லாம் முக்கியமான காரணம் எங்கே சர்க்கார் இதே சாக்கில் கொடுக்கப்பட்டிருக்கும் கடன்களை எல்லாம் பரிசீலனை செய்து, நியாயமான கடன்கள் என்ன, அநியாயமாக, அக்ரமமாக மோசடியாக எழுதி வாங்கப் பட்டிருக்கும் கடன்கள் எல்லாம் என்ன என்று பரிசீலனை செய்ய ஆரம்பித்துவிடுவார்களோ என்ற பயத்தால் தான் அவர்கள் பல கிளர்ச்சிகள் செய்தார்கள். மக்கள் நாணயமாக வாழும் பழக்கத்தையே இந்த மாரடோரியம் சட்டம் ஒழித்துக் கட்டிவிட்டது என்றெல்லாம் கூக்குரல் போட்டார்கள். சர்க்கார் அப்படி எதுவும் செய்யாமல், வாங்கிய கடனை எப்படித் திருப்பித் தருவது என்கின்ற நோக்கத்தோடு மட்டும், வாங்கிய கடன் நியாயமானதா அநியாயமானதா என்கின்ற பிரச்னையையே எடுத்துக் கொள்ளாமல் எப்படிப்பட்ட கடனாக இருந்தாலும் அதை எப்படித் திருப்பிக் கொடுப்பது என்கின்ற நிலைமையை மாத்திரம் வரையறை செய்யக்கூடிய வகையில் இன்றைக்கு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதைக் கண்டு அவர்கள் பூரிப்பு அடைகிறார்கள். இதை கனம் ஸ்ரீ கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய ஆட்சேபக் குறிப்பிலிருந்தே நன்கு நாம் உணர்ந்து கொள்ளலாம்.

"இன்னும் குறிப்பாக இந்த மசோதாவிலே 4ம் ஷரத்து மொத்த கடனையும் மூன்று தவணைக்குள் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 150 ரூபாய், அல்லது அதற்கு மேல் கந்தாயம் கட்டும் விவசாயிகளுக்கு இந்தச் சட்டமே செல்லாது. ஆனால் 150 ரூபாய்க்குள் கந்தாயம் கட்டும் விவசாயிதான் வாங்கியிருக்கும் கடனில் எட்டில் ஒரு பகுதியை இந்த மசோதா சட்டமாக்கப்பட்டு நான்கு மாதங்களுக்குள் கொடுத்துவிட்டு பாக்கியை மூன்று வருஷங்களில் அதாவது மூன்று தவணைகளில் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் இது சாத்தியமாகிற காரியமா என்று பார்க்கவேண்டும். 150 ரூபாய்க்குக் குறைவாகக் கந்தாயம் கட்டுகிறவர்கள் என்றால் அவர்களுக்கு பத்து அல்லது பன்னிரண்டு ஏக்கரா இருக்கலாம். அந்த நிலத்தைப் பயிர் செய்வதற்கு என்ன செலவாகும்? அந்த நிலத்தில் அவனுக்கு என்ன வரும்படி வரும்? இது எல்லாம் சாதாரண விஷயம் அல்ல. தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஒருவருக்கு 12 ஏக்கரா இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அவர் இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதை மூன்று பகுதியாக்கி சுமார் 750 ரூபாய் ஒரு வருஷத்தில் அவர் கட்டவேண்டுமென்று சொன்னால் இது சாத்யமா? இது எல்லாம் பொறுக்குக் கமிட்டியில் எடுத்துக் காட்டியிருக்கக்கூடாதா என்று கேட்கலாம். பொறுக்குக் கமிட்டியில் நானும் ஒரு அங்கத்தினர் தான். அங்கேயே கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு இவற்றையெல்லாம் கொண்டுவந்திருக்கிறேன்.

"அதோடு வாங்கப்பட்ட கடன் நியாயமானதாக இருந்தாலும் பரவாயில்லை. விவசாயிகளுடைய கடன் ஆயிரம், இரண்டாயிரம் என்று விஷம் போல் ஏறியிருக்கிறதென்றால் எப்படி ஏறியது என்றும் பார்க்கவேண்டும். விவசாயிகளுக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்ன? தன் வயிற்றுவலி பொறுக்கமாட்டாமல் ஒருவரிடம் சென்று நாற்பது கொடு, ஐம்பது கொடு என்று கெஞ்சிக்கேட்கிறான். அவன் ஐம்பதைக் கொடுத்துவிட்டு நூறு ரூபாய் கொடுத்ததாக எழுதி வாங்கிக்கொள்கிறான். இப்படியாக அவன் தலையில் ஆயிரக்கணக்கான ரூபாய் கடன் பளு சுமற்றப்பட்டிருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் இந்த மசோதா இப்பொழுது பரிசீலனை செய்யப் போவது கிடையாது என்று சொல்லிவிட்டார் கனம் மந்திரி அவர்கள்.

ஆனால் 150 ரூபாய்க்குக் குறைவாகக் கிஸ்தி கட்டுகின்ற விவசாயிகள் வாங்கிய கடன் நியாயமானதோ, அல்லது அக்கிரமமாகவே அவர்கள் பேரில் கடன் சுமத்தப்பட்டதோ அதைப்பற்றி கவலையில்லை—மூன்று தவணைகளில் கடனைத் திருப்பித் தந்துவிடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது இந்த மசோதாவில். கனம் மந்திரி அவர்களுக்கு ஒரு உண்மை தெரியும், இந்த ராஜ்யத்தில் சர்க்காருக்கு 40 ரூபாய், 50 ரூபாய்க்குக் குறைவாக வரி கட்டக்கூடிய பட்டாதார்கள் தான் நூற்றுக்கு 80 பேர்களுக்கு மேல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும். தங்களுடைய சொந்த உழைப்பினால் குடும்பம் நடத்தக்கூடியவர்கள் அவர்கள். அவர்களால் சாகுபடிச் செலவு, குடும்பச் செலவு போக கடனை மூன்று ஆண்டுக்குள் திருப்பித் தரவேண்டுமென்றால் முடியுமா என்று கேட்கிறேன்.

"நான் முன்பே குறிப்பிட்டேன், கடன் தன்மை என்ன என்பதைப் பற்றியே இப்பொழுது சர்க்கார் பரிசீலனை செய்யப்போவதில்லை. பலயிடங்களிலே நாங்களே சென்று புள்ளிவிவரம் எடுத்திருக்கிறோம். அப்படி நாங்களே சென்று சர்வே எடுத்துப் பார்த்ததில் நூற்றுக்கு அறுபது, எழுபது கேஸ்கள் மோசடியாகக் கடன் எழுதி வாங்கப்பட்டதாக இருக்குமே தவிர நியாயமான கடன்களாகவே இருக்காது. மோசடி செய்யக்கூடிய லேவாதேவிக்காரர்கள் தான் மிக அதிகமாக இருக்கிறார்கள். சர்க்கார் மோசடி செய்கின்றவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் எதுவும் செய்ய உத்தேசிக்கவில்லை. இம்மாதிரியாக மோசடியாக, போர்ஜரியாக எழுதிவாங்கியிருக்கும் லேவாதேவிக்காரர்களை எல்லாம் சிறையில் போடவேண்டுமென்று சொன்னால் கூட மிகையாகாது. திருப்பிக் கடனைக் கொடுக்காமலிருப்பது எப்படி பாவம் என்று சொல்லப்படுகிறதோ, அதைவிட மோசடியாக போர்ஜரியாக எழுதப்படிக்கத் தெரியாத ஏழை எளிய விவசாயிகளை ஏமாற்றி பொய்க்கடன்களைச் சுமத்துவது பலமடங்கு பாவமாகும். அநியாயமாகும். அக்கிரமாகும். பொய்யாக, மோசடியாக லேவாதேவி செய்கின்றவர்களை சர்க்கார் கடுமையாகத் தண்டிக்க முன்வந்தால் தான் இந்த நாட்டில் நாணயம் ஏற்படுவதற்கு வழி ஏற்படும். ஒரு பக்கத்தில் கொள்ளையடிக்கிறவர்களைப் பார்க்காமல் எல்லாம் நல்லதாகவே நடக்கிறது போல் எண்ணிக்கொண்டு, மற்றொரு பக்கத்தில் வருகிற வருமானத்தைக்கொண்டு குடும்பம் நடத்தமுடியாமல், சர்க்காருக்கு கிஸ்தி கட்ட முடியாமல் அவதிபடுகிற விவசாயிகள் தங்களிடமிருந்து பொய்யாக எழுதி வாங்கப்பட்டிருக்கும் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லையென்றால் ஐயோ, நாட்டில் நாணயமே கெட்டுவிடும் போலிருக்கிறது, அவர்களை சட்டப்படி கட்டுப்படுத்தி கடனைத் திருப்பித் தரும்படி செய்யாவிட்டால் இந்த உலகே கெட்டுவிடும் என்று ரகளை செய்வது ரொம்ப நியாயமாக இருக்கிறது. இதையெல்லாம் சர்க்கார் நன்கு பரிசீலனை செய்யாதது ரொம்பவும் வருந்த வேண்டிய விஷயமாகும். இந்தச் சட்டத்தினால் கிராமங்களில் எந்தவிதமான நன்மையும் வந்துவிடப்போவதில்லை. முதல் தவணையை நான்கு மாதங்களுக்குள் கொடுக்கவேண்டுமென்று இதில் கண்டிருக்கிறது. கடன் பட்டிருக்கும்,
10-30 a.m. தொகை ரூ. 2,000 என்று வைத்துக்கொண்டால், ரூ. 600 வரையில் வட்டித் தொகை உட்பட ஜூன் மாதத்திலே கொடுக்கவில்லையென்றால் ரூ. 600-க்கு டிக்ரி நிறைவேற்றி சொத்து பூராவையும் ஏலம் போடக்கூடிய நிலைமை ஏற்படும். ரூ. 600-க்கும் ரூ. 2,000 என்ற பிரச்னை அல்ல. நிலத்தை யார் ஏலத்திற்கு எடுப்பார்கள் ? சொத்து பூராவையும் ஆறு நூறுக்கே ஏலம் கேட்டு கடன் கொடுத்தவர்கள் எடுத்துக்கொண்டு போய் விட நேரிடும். விவசாயிகள் பட்ட கடனுக்கு அவர்களுடைய சொத்து சுதந்திரம் எல்லாம் ஏலம்போட்டு பறிமுதல் செய்துகொண்டு போகக்கூடிய நிலைதான் ஏற்படும்.

"விவசாயிகள் எப்படிக் கடன்பட்டார்கள் என்ற பூர்வ சரித்திரத்தை எடுத்துக்கெண்டால், அனேகமாக குத்தகை பாக்கி, வாடகை பாக்கி, ஆகியவைதான் பெரும்பாலான கடன்கள். மலபார் டெனன்ஸி சட்டத்தின் கீழ் மிராசுதார்களுக்கு 100 பரை நெல் கொடுக்கவேண்டிய இடத்தில் 20 பரை நெல்தான் கொடுக்கப்படவேண்டுமென்றும், 150 தேங்காய்

22nd February 1955] [Sri C. Kandasamy]

கொடுக்கவேண்டுமென்ற இடத்தில் 15 தேங்காய்தான் கொடுக்கவேண்டு மென்றும் ரெண்ட் கோர்ட்டுகள் தீர்ப்பளித்திருக்கின்றன. எங்களுடைய ஆட்சேபனைக் குறிப்புகளில் இவ்விஷயத்தை நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். டெனன்ஸி லெஜிஸ்லேஷன் வராவிட்டால் மிராசுதார்கள் என்ன தொகை கொடுக்கவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்களோ அந்தத் தொகைக்கு கோர்ட்டில் தாவா தொடுத்து விவசாயிகளைப் பல கஷ்டங்களுக்குள்ளாக்கு வார்கள். மலபார் டெனன்ஸி சட்டம் அமுலில் உள்ள இடத்தில் 100 பரைக்கு 20 பரைதான் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பளித்திருக்கிறார்க ளென்றால் மிராசுதார்கள் கேட்பது எவ்வளவு அநீதியானது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மற்ற ஜில்லாக்களில் குடிவாரச் சட்டம் கொண்டுவராமலிருக்கக்கூடிய நிலைமையில் அநியாயமான முறையில் விவசாயிகள் பல கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். குத்தகை பாக்கிக்காக ஏற்பட்டிருக்கும் கடனும் வட்டியும் சேர்ந்து, அதில் ஒரு பகுதியை நான்கு மாதங்களுக்குள் கட்டவேண்டுமென்றால் அது எவ்வளவு அநீதியானது என்பதை சொல்லத் தேவையில்லை. அநீதியான முறையில் விவசாயிகளுடைய கடன் ஏற்றிவைக்கப்பட்டிருக்கிறதைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தச் சட்டத்தினால் கிராமங்களிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தீமையை விளைவிக்கப் போகிறது. லேவாதேவிக் காரர்களுக்குத்தான் இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்குமென்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

" கடனை மூன்று வருஷத் தவணைகளில் திருப்பித் தரவேண்டுமென்பதற்குப் பதிலாக 8 வருஷத் தவணையில் இல்லாவிட்டாலும், ஆறு வருஷ தவணைகளிலாவது திருப்பித்தர வகைசெய்யவேண்டுமென்று நான் செலக்ட் கமிட்டியில் கேட்டுக்கொண்டேன். ஆனால், அந்த யோசனை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனென்றால் ரூ. 2,000-த்தில் நான்கிலொரு பகுதியாகிய ரூ. 500 வரையில் இச்சட்டம் அமுலுக்கு வந்த நான்கு மாதங்களுக்குள் கட்டவேண்டுமென்பது முடியாத காரியம். தயவு தாக்ஷண்யம் காட்டுங்கள், தாராள மனப்பான்மை காட்டுங்கள், குடி முழுகிப் போய்விடாது, விவசாயிகள் சாப்பாட்டுக்கே லாட்டரி போட்டுக்கொண்டிருக்கும்போது பெருந்தொகையை அவர்கள் கட்டமுடியாது, படிப்படியாக வாங்கிக்கொள்ளலாம் என்று நாங்கள் சொன்ன யோசனையை அரசாங்கம் கேட்கத் தயாராயில்லை. விவசாயிகளின் நலனில் அவர்களுக்கு அக்கரை இல்லை. கடன் பட்டவர்களுக்கு, அதுவும் அநீதியான முறையில் கடன் சுமையில் கஷ்டப்படுகிறவர்களுக்கு, அரசாங்கம் நன்மை செய்வதற்குப் பதிலாக, அதாவது சுமார் 8 அல்லது 6 வருஷத் தவணையில் கடனைத் திருப்பி வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக, சமுதாயத்தால் வெறுக்கப்படுபவரும், சமுதாயத்தை சுரண்டக் கூடிய லேவாதேவிக்காரர்களுக்கும் தான் அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கிறது, இந்தச் சட்டத்தின்படி. அதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை என்பது இச்சட்டத்தின் மூலம் தெளிவாகிறது.

" இச்சட்டத்தினால் கிராமங்களில் மிக எக்கச்சக்கமான பிரச்னை ஏற்படப் போகிறது. கிராமங்களில் விவசாயிகள் கடன் வாங்குவதற்கேற்ற சூழ்நிலை கெட்டுவிடும். ஈரோட்டிலே பரீக்ஷை பார்க்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். விவசாயிகளைப்போல நாணயம் உள்ளவர்கள் கிடையாது. லேவாதேவிக்காரர்களிடம் ப்ரோநோட்டுகூட இல்லாமல் கைமாத்தாக வாங்கிய கடனை நாணயத்துடன் வட்டியும் முதலும் கொடுத்துவிடுவான். கோர்ட்டில் கேஸ் போட்டாலும் தான் வாங்கிய கடனை, " நான் வாங்கவில்லை " என்று பொய் சத்தியம் விவசாயி ஒருக்காலும் செய்யமாட்டான். வாங்கிய கடனை திருப்பிக்கொடுப்பதுதான் அவர்களுடைய பண்பே தவிர, திருப்பிக்கொடுக்காமல் ஏமாற்றுவது என்பது அவர்களுடைய பண்பு அல்ல. ஒரு வேளை நிலப்பிரபுக்கள் அம்மாதிரி இருப்பார்களோ என்னவோ. விவசாயி என்ற பெயரில் கடன்வாங்கி, கார், பங்களா, வேட்டை நாய், ரேஸ் குதிரை போன்ற வசதிகளுக்குச் செலவழித்துவிட்டு கடனைத் திருப்பித்தராமல் காலம் கடத்துபவர்கள் நிலப்பிரபுக்களாக இருக்கலாம். செல்வாக்குள்ள நிலபிரப்புக்கள் வக்கீலை வைத்து வழக்காடி கடன் தொகையை எப்படி

[Sri C. Kandasamy] [22nd February 1955

யாவது கொடுக்காமலிருக்கப் பார்க்கலாமேயொழிய, விவசாயிகள் தாங்கள் பட்ட கடனை எப்படியும் திருப்பிக் கொடுக்காமலிருக்கமாட்டார்கள். அதற்காகத்தான் அவர்களுக்கு வசதி செய்தாகவேண்டுமென்று நாங்கள் கோருகிறோம். இவைகளையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நாங்கள் கொடுத்திருக்கும் சில திருத்தங்களை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

“ தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் இன்றைக்கு இச்சட்டம் எந்த முறையில் அவர்களைப் பாதிக்கும் என்று சுருசுருப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்பிரச்னையில் நியாயமான ஒரு பரிகாரம் காண்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். யாருடைய சொத்தையும் பறிமுதல் செய்துவிடவேண்டுமென்றோ, வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்காமல் மோசம் செய்துவிடவேண்டுமென்றோ யாரும் நினைக்கவில்லை. மோசடியாக எழுதி வாங்கப்பட்டிருக்கும் கடன்கள் விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்தி, மோசடியாக எழுதி வாங்கப்பட்ட கடன் எவ்வளவு உண்மையாகவே வாங்கிய கடன் எவ்வளவு என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். மோசடியான கடனை ரத்து செய்யவேண்டுமென்று நாட்டில் விவசாயிகளிடையே பலமான கிளர்ச்சி வலுத்துவருகிறது. விவசாயிகள் பட்டிருக்கும் கடனைப் பரிசீலனை செய்வதற்காக ஜில்லா முன்சீப்புக்கு அதிகாரம் கொடுத்து, ஜில்லா முன்சீப் முன்பாக சாட்சியங்களை வரவழைத்து, சாட்சியங்களின் அடிப்படையில் கடனின் தன்மையை ஆராய்ந்துபார்த்து நியாயம் வழங்கப்படவேண்டும். இதற்கான ஒரு வழி வகையை அரசாங்கம் செய்தால் அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் எவ்வளவோ விதத்தில் நன்மையாக இருக்கும். இந்த ராஜ்யத்தில் பொருளாதார நிலைமையில் தாழ்ந்திருக்கக் கூடிய விவசாயிகளை தூக்கி நிறுத்தியதாகும்.

“ சட்டம் அமுலுக்கு வந்த முதல் நான்கு மாதங்களுக்குள் ஒரு பகுதியையும் மற்ற மூன்று வருஷங்களில் மீதியையும் செலுத்தவேண்டுமென்பது விவசாயிகளால் இயலாத காரியம். ரூ. 150 கிஸ்தி செலுத்தக்கூடியவர்கள், நிலம் வைத்திருப்பவர்கள், ஏதோ வருஷா வருஷம் ஓரளவுக்கு கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலுங்கூட வருஷா வருஷம் ரூ. 500, அல்லது ரூ. 600 குடும்பச் செலவு, சாகுபடி செலவு போக, மீதம் பிடித்து கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது. விவசாயிகள் படும் கஷ்டங்களில் எல்லாச் செலவுகளும்போக பெருந் தொகையை வருஷா வருஷம் சேமித்து கடன் திருப்பிக் கொடுக்க முடியாது. ஆகவே, குறைந்த பட்சம் ஆறு தவணைகளிலாவது தரவேண்டுமென்று திருத்தம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

“ ஜூன் மாதத்தில் எந்த விவசாயினிடத்தில் பணம் இருக்கும் ? சாகுபடி ஆரம்பிக்கப் போகும் காலத்தில் சாகுபடிச் செலவுக்கே வகையில்லாமல் விவசாயி திண்டாடிக்கொண்டிருக்கும் காலத்தில், கடன்பட்ட தொகையில் ஒரு பகுதியைக் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. இம்மாதிரியான ஒரு சட்டம் வரும், அதற்காக நாம் இப்பொழுதிருந்தே பணத்தை சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும், நான்கு மாதத்திற்குள் லேவாதேவிக்காரர்களிடத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் ’ என்று முன்கூட்டியே யோசனை செய்து விவசாயிகள் பணம் இருப்பு கட்டிக்கொண்டிருப்பார்கள் என்ற சர்க்காருடைய வாதம் விவசாயிகளைக் கேலி செய்வதாகத்தான் இருக்கிறது. விவசாயி வறுமையில் வாடிக்கொண்டிக்கிறான். சட்டசபை அவர்கள் பட்டிருக்கும் கடன் விஷயத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப்போகிறதோ என்று அவர்கள் கவலையுடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடியதாக இருக்காதா என்று அவர்கள் ஏங்கிக்கொண்டிருக்கிற நிலைமையில் நான்கு மாதங்களுக்கு முன்னிட்டே விவசாயிகள் கடனைக் கொடுப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று கற்பனை பேசுவது சரியல்ல.”

22nd February 1955] [Sri C. Kandasamy]

“ விவசாயிகள் கையில் பணம் இருக்கக்கூடிய காலம் எதுவென்பதை நிர்ணயம் செய்யவேண்டும். அடுத்த வருஷம் குறுவை அறுவடைக்குப் பிறகு கடன் தொகையின் முதல் தவணையைச் செலுத்தலாம் எனற முறையில் இச்சட்டத்தில் தகுந்த மாறுதலைச் செய்யாவிட்டால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஏதோ சட்டத்தைச் செய்து விட்டோம், அதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டுவிடும் என்று சர்க்கார் சுய திருப்தி அடைந்து விட்டால் அதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டுவிடாது. இச்சட்டத்தில் விவசாயிகளுக்கு அதிகமான நன்மை ஒன்றையும் செய்து விடவில்லை. ஏனென்றால், ஜில்லா முன்சீபுகளே கடன்பட்ட விவசாயிகளுக்கு சில சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறார்கள். அதாவது, கடனை 10 அல்லது 20 தவணைகளிலும்கூட திருப்பிக் கொடுக்க வகைசெய்து கொடுக்கிறார்கள். அப்படி யிருக்கும்போது இச்சட்டத்தின்படி நான்கு தவணைகளில் கடனைத் திருப்பிக்கொடுக்க வழி செய்வதில் என்ன பிரயோஜனம் ? அதனால் அதிக நன்மை ஏற்பட்டு விடப்போவதில்லை. முதலில் கொண்டு வரப்பட்ட கடன் ஒத்திவைப்புச் சட்டமும், இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற தவணைகளில் கடனைத் திருப்பித் தருவதற்கான சட்டமும் விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தீமையைத் தான் விளைவிக்கும் என்று நான் சர்க்காருக்கு தெரிவிக்க வேண்டியிருக்கிறது. கிராமங்களில் விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதில் ஒரு பெரிய குழப்பத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். கிராமப் பொருளாதாரத்தையே அடியோடு ஆட்டி அசைத்து விடும் என்று நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயிகளுக்கு ஏதோ நன்மை செய்யப்போகிறோம் என்ற நினைப்பில் முதலில் ஒரு சட்டமும், அதற்குப் பிறகு இப்பொழுது ஒரு சட்டமும் கொண்டு வந்து விவசாயிகளுக்குத் தொல்லைகளைக் கொடுப்பதற்குப் பதிலாக இவர்கள் சும்மா இருந்திருக்கலாம். “ சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்த ” மாதிரி அரசாங்கத்தின் போக்கு இருக்கிறதென்பதை நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. கிராமப் புறங்களில் இச்சட்டம் பெரிய அளவுக்கு விவசாயிகளை பாதிக்கும், இதனால் விவசாயிகளிடையே பெரியதொரு குழப்பத்தை உண்டுபண்ணும் என்பதையெல்லாம் மந்திரி அவர்கள் சிந்தனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொது விவாதத்தில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.”

* SRI M. NARAYANA KURUP :—“ Mr. Deputy Speaker, Sir, the Bill is so restricted in its scope and the provisions are so simple and innocuous that we did not expect that any revolutionary changes would be made in the Select Committee. The only material change that has been effected is the dropping of the exemption given in favour of persons who do not own property worth more than Rs. 5,000. Some of the previous speakers referred to it and said that it would work as an injustice to certain sections of the people.

“ I concede that if we examine the question on a purely legal basis it is capable of doing such harm. But we must, at the same time, look to the fact that a simple legislation need not be made very complicated in its working because of a certain provision. Therefore, on the ground of simplicity in the working of the Act and the balance of convenience, I welcome the change made in the Select Committee. Otherwise, in every case the Court will have to consider whether the property of a creditor should include or exclude his debts. A simple money suit against an individual will have to be complicated by a roving enquiry into the worth or the assets or the liabilities of one of the parties to the suit. Therefore, considered in this light, it is quite welcome. After all, what is the right or remedy conferred by this legislation? It is not a scaling 10-40 a.m.

down or wiping out of the debts but only a provision for repayment in just instalments. I therefore do not personally find much of an objection to this change and, on the other hand, I welcome this salutary change made by the Select Committee.

"I also want to raise one or two legal points for the consideration of the Government if there is any substance in them. One is that which has been recorded in the minute of dissent of Sri K. Balasubramanya Ayyar. We know that certain categories of debts are taken away from the purview of this legislation. It may be that an individual comes under the definition of 'agriculturist' but, at the same time, he may owe debts to institutions which are excluded by this legislation. It has been provided that any alienation or sale through Court in collusion becomes void or voidable under certain provisions of this legislation. Take for instance a case where an agriculturist owes debts to X and also to some societies, to the Government or has obligations arising under any Chit Fund Scheme. If the creditor X brings the property of the debtor to sale what is the remedy open to the other creditors who are governed by this enactment. In ordinary cases, if it were a money decree all the creditors who have got decrees and who file execution petitions will be entitled to get rateable distribution. Because the creditors governed by this enactment cannot file execution petitions they are at a great disadvantage inasmuch as they will not be entitled to rateable distribution. Suppose a debtor has Rs. 5,000 worth of debts outside the purview of this enactment and a debt of Rs. 10,000 within its purview, and the creditor who is outside the purview of this enactment brings property worth Rs. 5,000 of the debtor to sale. Then he will be entitled to all the Rs. 5,000 and in cases where the debt due to the creditor who is outside the scope of this enactment exceeds the value of the property of the debtor the other creditors who are governed by this legislation get nothing. This is a very important point which requires consideration at the hands of the Government.

"My other point is the difficulty with regard to limitation. It is said that no decree can be executed within four months of the commencement of this Act. It is also said that a decree cannot be executed when the debt is being repaid in instalments. Section 48 of the Civil Procedure Code imposes an absolute prohibition against a decree being executed after the lapse of twelve years. Suppose this period of twelve years lapses within the period of the instalments for repayment provided for in this enactment, what will be the effect? There are decisions of the Madras High Court that in a case where the Court has granted a decree and has also ordered payment by instalments, if the period of twelve years expires before the instalments are paid, the decree cannot be executed in full because Section 48 of the Civil Procedure Code comes in the way. This is also a legal difficulty which I place before the Government."

DEPUTY SPEAKER :—"I fix a time-limit of five minutes for each hon. Member."

22nd February 1955]

* SRI A. SAMBASIVAM :—" மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்நாட்டுக்கும், இந்நாட்டு மக்களுக்கும் தாய்போல் காத்துவருகிறவர்கள் உழவர்கள்தான். உழுவார் உலகத்துக்கு ஆணி, உண்டுகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்ற உண்மையை அடிப்படையாகக்கொண்டு உழவர்களை கடன் தொல்லையிலிருந்து பாதுகாக்கவும் உழவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டுமென்ற கருத்தோடும் நம் அரசாங்கம் இந்த விவசாயிக்கடன் வாய்தா மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியினரும் மனமகிழ்ச்சியோடு இதனை வரவேற்கிறார்கள் என்று பாராட்டி என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த முறையில் அரசாங்கத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நம் சமுதாயத்திற்கே தாய்போன்றிருக்கும் இந்த உழவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கடனால் மிகவும் பாதிக்கப்பட்டு தொல்லைக்குள்ளாகியிருக்கிறார்கள். இவர்கள் கடனுக்குக் காரணம் கிணறு வெட்டுவதற்காக பணம் வாங்க வேண்டியிருக்கிறது. மாடு வாங்கவும் பணம் வேண்டியிருக்கிறது. விவசாயப் பொருள்கள் வாங்குவதற்கும் பணம் தேவைபடுகிறது. இவர்கள் நிலை கடன் பட்டுத்தான் உற்பத்தியை பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய கடன் பகுதியையும் உற்பத்தியால் அடைந்த வருமானப் பகுதியையும் பார்த்தால் கடன் பகுதிதான் பெரும்பகுதியாகயிருக்கும். உழவர்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் பாதிக்கப்படவில்லை. கடன்பட்ட உழவர்கள்தான் தங்களுடைய கடனையும் செலுத்துக்கொண்டு, நில வரியையும் காலாகாலத்தில் செலுத்த வேண்டியவர்களாகயிருக்கிறார்கள். சமுதாயம் மேன்மையுற எந்த அளவுக்கு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்களுக்கு எந்த உதவி தேவையோ அதை அரசாங்கம் செய்யவேண்டும். ஏனென்றால் அவர்கள் கஷ்டப்பட்டு சமுதாயத்திற்கு சோறு போட்டு வருகிறார்கள். ஆதலால் அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நல்ல முறையிலே செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக 150 ரூபாய்க்கு குறைவாக கிஸ்தி செலுத்துபவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. 200 ரூபாய் கந்தாயம் கட்டி வருகிறவர்களுக்கும் சலுகை அளிக்கவேண்டும். சென்ற 10 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு வருமானம் மிகக்குறைவு. பல ஆண்டுகளாக மழையின்மையால் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிலத்தை பராமரிப்பதற்கு ஏராளமாக செலவு செய்திருக்கிறார்கள். வருமானவரி செலுத்துபவர்களை விலக்கியது சரி. இந்த வரிவிதிப்பு அவர்களுடைய வருமானத்திற்கு தகுந்தவாறு இருந்தால் நலமாக இருக்கும். ஆனால் 150 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துகிறவர்கள் விவசாயிகள் அல்ல என்று சொல்லுவதை சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். விவசாயி யார் என்பதை சற்று விஸ்தரித்தால் நலமாகயிருக்கும். தவணைகளை கண்டிப்பாக ஆக்காமல் 10 ஆக நீடிப்பதை சர்க்கார் கவனிக்கவேண்டும். கடன் கொடுக்கிறவர்களும் உழவர்கள் மேன்மையுறச் செய்வதற்குக் காரணமாக இருக்கிறார்கள். நான் இப்படிச் சொல்வதனால் கடன் கொடுத்தவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல.

" முன்பு கடன் வாங்கியவர்கள் எல்லாம் தங்களுடைய விவசாயத்தை 10–50 a.m.
தங்களுடைய உடலுழைப்பினால் செய்வதற்கு வாங்கிய கடன் தான். அவ்விதம் கடன் வாங்கி உழைத்து உற்பத்தையைப் பெருக்க கடன் வாங்கினார்கள். ஆனால் இயற்கையின் கோளாறினால் அவர்களுடைய உழைப்பு வீணாகப் போய்விட்டது. அதனால் விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளானார்கள். அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க இப்பொழுதுதவணை விதிக்கப்படுகிறது. அந்தத் தவணைப்படிகூட அவர்கள் கட்ட முடியாமல் இருப்பார்கள். பத்து வருஷ அல்லது ஐந்து வருஷ தவணை வைத்தாலும் அவர்களால் கட்ட முடியும் என்று தோன்றவில்லை. இதைப் பற்றி சர்க்கார் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். அவர்களுக்குக் கடன் கிடைப்பதற்கு அரசாங்கம் ஏதாகிலும் ஏற்பாடு செய்தும் நாம் உழவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். இப்பொழுது அரசாங்கம்

ஒரு பெரும் நோக்கத்துடன் தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். அதற்காக அரசாங்கத்திற்கு மக்களின் சார்பாகவும் என்னுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.''

* **Sri A. SENAPATHI GOUNDER** :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கடன் ஒத்திவைப்புச் சட்டமானது இப்பொழுது கடனைத் தவணையில் செலுத்தும் சட்டமாக மாறி இருக்கிறது. கடன் கொடுத்தவர்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்றே சொல்லலாம். இன்று விவசாயிகளுடைய நிலை என்ன என்பதை ஆராய்ந்து அவர்களுடைய கடன் பளு எவ்வளவு இருக்கிறது, அவர்களால் அந்தக் கடனை திருப்பிக்கட்ட முடியுமா என்பதையும் கவனித்து ஒரு நல்ல விதமான சட்டத்தைச் செய்திருந்தால் மிகவும் நலமாக இருந்திருக்கும். கடன் கொடுத்தவர்களுககு இந்தச் சட்டம் ஒரு நன்மையான முறையில் அமைந்திருக்கிறதென்றே சொல்லலாம். கடன் பட்ட விவசாயிக்கு இந்தச் சட்டம் ஒரு பெரிய நன்மையைச் செய்து விட்டதாக நினைக்க முடியாது. விவசாயிகளுக்கு எந்த விதமான ஒரு நன்மையும் ஏற்படக்கூடிய வகையில் எந்தச் சட்டமும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். எந்த வரி போட்டாலும் அவைகள் விவசாயிகளை பாதிக்கக்கூடிய வகையில் தான் போடப்படுகிறது. எந்த சட்டம் இயற்றிஞலும் அது விவசாயிகளுக்கு நன்மையைச் செய்யக் கூடிய அளவில் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

" இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டத்தின்படி ரூ. 150 கந்தாயம் செலுத்தக் கூடியவர்களுககுஇந்த சட்டத்தில் சலுகை உணடு மற்றவாகளுக்கு அந்தச் சலுகை இல்லை என்று கண்டிருக்கிறது. விவசாயி எதற்காக கடன வாங்கவேண்டும்? எதற்காக கடன பட்டிருக்கிருர் என்று யோசித்தால் பெரிய பட்டாதார்கள் தங்களுடைய பூமியை அபிவிருத்தி செய்வதற்காகவும் பல சந்தர்ப்பங்களில் தங்களுடைய பூமிகளை வளம்பெறச் செய்வதற்காகவும் தான் அப்படி கடன் வாங்கியிருப்பார்கள். அவர்கள் தங்களுடைய ஆடு, மாடுகளை வாங்கவும், காப்பாற்றவும் கடன் வாங்கியிருக்கிருர்கள். மற்றும் தங்களுடைய குததகைக்காரர்களுக்கு கடன் வாங்கிக் கொடுப்பதற்காகவும் தான அவர்கள கடன வாங்கியிருப்பார்கள். நண்பர் ஒருவர் சொல்லிய மாதிரி அவர்கள் கார் வாங்குவதற்கும் தேர்தல்களில் நிற்பதற்கும் அநதக் கடன்கள் வாங்கப்பட்டது எனபது இல்லை. அவர்களும் விவச..யிகள் என்று விட்டு விடுவதா? எனறும் சொன்ஞர். ரூ. 500 கந்தாயம் செலுததுகிறவாகள் கூட தங்களுடைய பூமியை அபிவ்ருத்தி செய்வதற்குத்தான அப்படி கடன் வாங்கியிருக்கிருர்கள். இந்தச் சட்டத்தின் மூலம விவசாயிகளுக்கு பெரிய சலுகை ஒன்றும் கொடுத்து விடவில்லை. தவணையில் செலுத்தக்கூடிய சலுகைதான் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதஞல் ரூ. 500-க்கு கந்தாயம் கட்டுகிறவர்களையும் இதில் சேர்தது அவர்களுக்கும் சலுகையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முனிசிபல் வரி, வருமான வரி முதலியவைகள் கட்டக் கூடியவர்களும் விவசாயிகள் தான். அவர்கள் ரூ. 500 கந்தாயம் செலுத்திஞலும் அவர்களும் கடன் வாங்கியிருக்கக் கூடும். ஆஞலும் அவர்களுககும் இந்தச் சலுகையைச் கொடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளவில்லை.

" மேலும் இந்தச்சட்டத்தை நாம் இயற்றிவிட்டால் இன்று விவசாயிகள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிருர்கள் என்ருல் விவசாயத்திற்கு வேண்டிய கடனை எப்படி வாங்குவது, இப்பொழுது இருக்கக் கூடிய கடனை எப்படி கட்டுவது என்பதைப்பற்றி அவர்கள் சர்க்காரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். வாங்கய கடனை மூன்று தவணைகளிலும் நான்கு தவணைகளிலும் கட்டிவிடவேண்டும் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இப்பொழுது அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய கடன் வசதி எப்படி இருக்கிறது என்ருல் ஒன்றுக்கு இரண்டாக எழுதி வாங்கிக்கொண்டிருக்கிருாகள். சர்க்கார் ஏதாகிலும் ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அதை

22nd February 1955] [Sri A. Senapathi Gounder]

கவனிக்கச் சொல்ல வேண்டும். அத்துடன் கிராம மக்களுக்கு உழவு காலங்களில் சகாய வட்டி கடன் கிடைக்கும்படியான ஏற்பாட்டையும் சர்க்கார் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்."

* SRI E. T. KUNHAN :—" മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഈ ബില്ല് 10-55 a.m. കൃഷിക്കാരുടെ രക്ഷയെ ഉദ്ദേശിച്ചു കൊണ്ടുവന്നിട്ടുള്ളതാണല്ലോ. എന്നാൽ ഇതു് കൃഷിക്കാർക്ക് രക്ഷ നൽകുന്ന ഒരു ബില്ലല്ലെന്നു ആലോചിച്ചാൽ മനസ്സിലാകും. ഈ ബില്ലനുസരിച്ചു കടമെന്നു പറഞ്ഞാൽ പണമായി വാങ്ങിയിട്ടുള്ള കടങ്ങൾ മാത്രമല്ല, പാട്ടബാക്കിയും ഉൾപ്പെടുന്നുണ്ടു്. സകല കടങ്ങളും പലിശയോടുകൂടി മൂന്നുകൊല്ലംകൊണ്ടു് കൊടുത്തുതീർക്കണമെന്നാണു് പറയുന്നതു്. അതു് നാലു ഗഡുക്കളായിട്ടാണു് കൊടുക്കേണ്ടതു്. മുതലും പലിശയും ഒരു പൈപോലും കുറയ്ക്കാതെ കൊടുക്കണമെന്നാണു് വ്യവസ്ഥ. അതു വച്ചുകൊണ്ടാണു് ഞാൻ പറയുന്നതു് ഈ ബില്ല് കൃഷിക്കാരനു ഗുണംചെയ്യാൻ വേണ്ടിയുള്ളതല്ലെന്നു്. കൃഷിക്കാരനു ഗുണം കിട്ടണമെങ്കിൽ 1953 നു മുമ്പുള്ള എല്ലാ പാട്ടബാക്കികളും റദ്ദ്ചെയ്യേണ്ടതാണു്. അതിനു എന്താണു് ന്യായമെന്നു പരിശോധിച്ചുനോക്കാം. കൃഷിക്കാരൻ ജന്മിയുടെ വീട്ടിൽ കൊണ്ടുചെന്നുവേണം പാട്ടം അളക്കാൻ. അങ്ങനെ കൊണ്ടുചെന്നു പാട്ടം അളന്നുകഴിഞ്ഞാൽ ജന്മി പറയും രശീതി പിന്നെക്കൊടുക്കാമെന്നു്. പിന്നെ കൃഷിക്കാരൻ എത്ര തവണ നടന്നാലും ജന്മി രശീതി കൊടുക്കുകയില്ല. ഇനി ഒന്നോ രണ്ടോ പറ ബാക്കിയുണ്ടായിയെന്നു വയ്ക്കുക. അപ്പോഴും അളന്ന പാട്ടത്തിനു ജന്മി രശീതി കൊടുക്കുകയില്ല. ബാക്കിയുള്ളതു കൂടെ കൊണ്ടുവരൂ, അപ്പോൾ ഒന്നിച്ചു രശീതി തരാം എന്നു അവധി പറഞ്ഞു ഒഴിയും. ഇങ്ങനെ എത്രയോ കൃഷിക്കാർ പാട്ടം അളന്നിട്ടു ജന്മിമാർ രശീതി കൊടുക്കാതെ കടമാക്കി കണക്കുകൂട്ടിവച്ചിട്ടുണ്ടു്. പാട്ടം അളക്കുന്നതുതന്നെ വളരെ അന്യായമായിട്ടാണു്. ഹരിജനങ്ങളായ കൃഷിക്കാർ സവർണ്ണരായ ജന്മിമാരുടെ വീട്ടിൽ നെല്ലു കൊണ്ടുപോയി ചാക്കുകളിൽ അട്ടിവെച്ചുകൊടുത്തിട്ടു പുറത്തു നില്ക്കാമെന്നല്ലാതെ ജന്മി അതു് ശരിയായിട്ടുതന്നെ അളന്നു എടുക്കുന്നുണ്ടോ എന്നു നോക്കാനുള്ള സൌകര്യംപോലുമില്ല. ജന്മിയുടെ കാര്യസ്ഥൻ അയാൾക്കു ഇഷ്ടമുള്ള സമയത്തു തോന്നിയപോലെ നെല്ല് അളന്നെടുക്കും. പലപ്പോഴും പത്തും പതിനഞ്ചും പറ അളവിൽ കുറയ്ക്കും. ഇതാണു് കുടിയാന്മാരുടെ അനുഭവം. ഇതെല്ലാം ജന്മി കണക്കുകൂട്ടി കടമായിട്ടു എഴുതിവയ്ക്കും. അത്തരത്തിലുള്ള കടമാണു് കൃഷിക്കാർക്ക് അധികമായുള്ളതു്. ഈ പരമാർത്ഥങ്ങളെ അടിസ്ഥാനപ്പെടുത്തിയാണു് പാട്ടബാക്കി കടങ്ങളെല്ലാം റദ്ദ്ചെയ്യണമെന്നു് ഞങ്ങൾ പറയുന്നതു്.

"മറ്റൊന്നു പറയാനുള്ളതു് മുതലിന്റെ ഇരട്ടി പലിശ കൊടുത്തു കഴിഞ്ഞിട്ടുള്ള സകല കടങ്ങളും റദ്ദ്ചെയ്യണമെന്നുള്ളതാണു്. നെല്ലിനു വില കുറഞ്ഞിരിക്കുന്ന കാലത്തെ ബാക്കികൾ വില കൂടിയിരിക്കുന്ന കാലത്തെ വില കണക്കാക്കി വസൂലാക്കുന്ന ഒരു സമ്പ്രദായം നാട്ടിൽ നടപ്പുണ്ടു്. ഈ വിധത്തിലെല്ലാമാണു് കൃഷിക്കാരനു ഭാരിച്ച കടം വന്നിട്ടുള്ളതു്. ഇതെല്ലാം നോക്കിയിട്ടാണു് 1953 നു മുമ്പുള്ള പാട്ടബാക്കികളും മുതലിലിരട്ടി പലിശ കൊടുത്തിട്ടുള്ള കടങ്ങളുമെല്ലാം റദ്ദ്ചെയ്യണമെന്നു് ഞങ്ങൾ പറയുന്നതു്. കൂടാതെ കൈത്തൊഴിലാളികളേയും ഈ നിയമത്തിൽ ഉൾപ്പെടുത്തേണ്ടതാവശ്യമാണു്."

* SRI S. C. VIRUPAKSHIAH :—" Mr. Deputy Speaker, I 11 a.m. congratulate the Government on having brought such a measure as the present Bill. This Bill has been fair not only to the debtor, but also to the creditor. This affords facilities to the debtor to liquidate his debts in four instalments. At the same time, it should not be forgotten that there is a provision under clause 4, where discretion is given to the Courts to give as much leniency as possible and as much favourable terms as possible to the debtor to repay his debts. As such, there is not much force in the argument that the instalment prescribed in this Bill is parsimonious.

" I wish to say one or two words about the legal aspects. Some of the previous speakers observed that there is a lacuna in not having provided for rateable distribution of payments. There may

be some debtors who come under the purview of this Bill and if a suit is filed against him by one of the creditors and the property is sold under Court auction, it will leave the other creditors miserable, looking at the debtor helplessly.

" Then, there is mortgage or secured debt solely on the security of house property within the municipal limits or panchayat limits. I do not find any reason why it should not be exempted under this Bill. A similar provision under the Act V of 1938 was there. I wish that similar provision is made here also.

" Under clause 3, it has been said that the creditor will have to bear his own cost if he files a suit after a deposit is made by the debtor. I wish there is another thing also. Not only when a deposit is made but also when notice of such deposit is given to the creditor. Then only the creditor can be deprived of his cost and it will be legitimate.

" I feel that the other provisions of the Bill are very fair and as such I really welcome this measure. Thank you, Sir."

* **Sri M. DHARMALINGAM**:—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சட்டம் நமது பரிசீலனையில் இருக்கிறது. இது விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் என்கின்ற எண்ணத்தில் இதை ஆதரித்துப் புகழ்ந்து பேச நான் கடமைப்பட்டுள்ளேன்.

" முதன் முதலில் இந்த மசோதா விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்குமென்கிற எண்ணத்தோடேயே சர்க்கார் இதைத் தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் " விவசாயிகள் " என்றால் யார் என்பதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். 1952–53-ம் வருஷத்திற்குப் பிறகு எந்த வருஷத்திலாவது 150 ரூபாய்க்கு மேல் சர்க்காருக்கு நிலத் தீர்வை கட்டியுள்ளவர்கள் விவசாயிகள் என்று கருதப்படமாட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் அவர்களுக்கு எவ்விதமான சலுகையும் இந்தச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்படமாட்டாது.

" மேலும் 1952–53-ம் வருஷத்திலிருந்து எந்த வருஷத்திலாவது அரை வருஷத்திற்கு தொழில் வரி கட்டும் கணக்கில் 900 ரூபாய்க்கு மேல் வருமானம் ஒருவருக்கு இருந்தது என்று சொன்னாலும், ஒருவருக்கு மாதம் வாடகை மாத்திரம் 50 ரூபாய்க்கு மேல் வருகிறது என்று சொன்னாலும் அவர் விவசாயியாகக் கருதப்படமாட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுக்கும் எந்த விதமான சலுகையும் இந்தச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்படமாட்டாது. இதிலே இன்னொரு விஷயம். வாஸ்தவத்தில் ஒரு விவசாயி 149 ரூபாய் கிஸ்தி கட்டுகிறான் என்றால் அவன் விவசாயி என்று கருதப்பட்டுவிடுவானா, என்று பார்க்கிறபொழுது இதில் எதுவுமே குறிப்பிடவில்லை. வாஸ்தவத்தில் அவர்களுக்கும் கூட ஒரு திட்டத்தை ஏற்படுத்தினால் நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

" இந்தச் சட்டத்திலுள்ள விதிகளின்படியே ஒருவர் விவசாயி என்று கருதப்பட்டாலும் அவர் கூட்டுறவு ஸ்தாபனங்களிலோ, நில அடமான பாங்கிலோ கடன் வாங்கியிருந்தால் இந்தச் சட்டம் அவருக்குப் பாதுகாப்பு அளிக்காது என்று ஷரத்து 2–ல் உள்ள (பி) (ii) உட்பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதே போல் கோயில்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கட்டாமல் இருந்தாலும் அவர்களுக்கு இந்தச் சட்டம் பாதுகாப்பாக இருக்காது என்று சொல்வது மிக முக்கியமாகும். ஏனென்றால் சிலர் கோயில் சொத்துக்களை ஏலத்தில் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, ஆனால் ஏலத்தில் எடுத்த தொகையைக் கொடுக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் கோவிலுக்குச் சேரவேண்டிய பணம் வராம

22nd February 1955] [Sri M. Dharmalingam]

லேயே இருப்பதால் கோயில்களின் நிர்வாகம் சரிவர நடைபெருமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே எப்படி கூட்டுறவு சொஸைடிகள், நில அடமான பாங்குகள் ஆகியவற்றுக்கு இந்தச் சட்டத்திலிருந்து நாம் விலக்கு அளித்திருக்கிறேமோ அதைப் போலவே கோயில் தேவஸ்தானங் களுக்கும் விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் கோயில் நிர்வாகம் நல்ல முறையில் நடக்க உதவிய தாக ஆகும்.

“அதோடு இந்த மசோதாவின் நான்காவது ஷரத்திலே இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து நான்கு மாதத்திற்குள் மொத்தக் கடனின் எட்டில் ஒரு பங்கோ, அல்லது வட்டியும், முதலுமாகச் சேர்ந் துள்ள மொத்தப் பணத்தின் நாலில் ஒரு பகுதியையோ, இது இரண்டி லும் எது குறைவான தொகையாக வருகிறதோ அதை வேண்டுமானுலும் கொடுக்க வேண்டும், பாக்கியை மூன்று தவணைகளில் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த ‘நான்கு மாதங்களுக்குள்,’ என்று கொடுத்திருப்பது அவ்வளவு சரி யல்ல. நான்கு மாதங்கள் போதவே போதாது. ஆகையால் நான்கு மாதங்கள் என்பதற்கு ஆறு மாதங்கள் என்று திருத்தினுல் ரொம்பவும் நன்ருக இருக்கும், விவசாயிகளுக்கு சௌகர்யமாகவும் இருக்கும். ஆகவே நான்கு மாதங்கள் என்பதை ஆறு மாதங்களாகத் திருத்த வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு இன்னெரு முக்கியமான விஷயத்தை அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

“விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தவர்கள் விவசாயிகள் கடனைத் திருப்பித் தந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் தான் கொடுத்தார் களே தவிர விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பித் தரமாட்டார்கள் என்று எண்ணியிருக்க மாட்டார்கள். ஆனுல் சில விவசாயிகள் ஆயிரக் கணக்கான ரூபாய் கடன் வாங்கியிருக்கலாம். அவர்களை இன்றைக் குத் திடீரென்று நான்கு தவணைகளில் கொடு என்று நிர்ப்பந்தித்தால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட நேரிடும். ஆகவே இந்த விவசாயிகளிட மிருந்து சர்க்கார் பின்னர் கடனை வசூல் பண்ணிக் கொள்ளலாம். அதாவது விவசாயிகளுக்கு சர்க்கார் கடன் கொடுத்தது போல எண்ணிக் கொண்டு, விவசாயிகளுக்கு யார் யார் கடன் கொடுத்திருக்கிருர்களோ அவர்களுக்கு எல்லாம் நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டை வழங்கி விட லாம். அப்படிச் செய்தால் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவும் பலர் தாராளமாக முன் வருவார்கள். அவர்களுக்கு சர்க்கார் உற்சாகம் அளிப் பதாகவும் இருக்கும். இதனுல் விவசாயிகளுடைய கஷ்டமும் ஓரளவு நீங்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.”

*SRI V. SANKARANARAYANA MENON :—“മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഈ സ്റ്റേററിലെ കൃഷിക്കാർക്ക് കടത്തിൽനിന്നു ആശ്വാസം നൽകാൻ കൊണ്ടുവന്നിട്ടുള്ള ഈ ബില്ലുപോലെ ഇത്രയും നിർഗ്ഗുണവും നിർദ്ദോഷവുമായ ഒരു ബില്ല് ഈ അസംബ്ലി മുമ്പാകെ വന്നിട്ടുണ്ടോ എന്നു സംശയമാണ്. ഏതൊരു നിയമനിർമ്മാണവും സംസ്ഥാനത്തിലെ ചില ആളുകൾക്കെങ്കിലും ഗുണവും ദോഷവും ചെയ്യാതിരിക്കയില്ല. ഈ നിയമം കൃഷിക്കാർക്ക് യാതൊരു ഗുണവും ചെയ്യുന്നില്ല. അതേസമയം മററാർക്കും ഒരു ദോഷവും ചെയ്യുന്നില്ല. അതുകൊണ്ടാണ് ഏററവും നിർഗ്ഗുണവും നിർദ്ദോഷവുമായ ഒരു ബില്ലാണിതെന്നു ഞാൻ പറഞ്ഞത്. 11-8 a.m.

“1939-ൽ ഒരു നിയമം കൊണ്ടുവന്നു ഈ നാട്ടിലെ കടം കുറെയൊക്കെ റദ്ദ് ചെയ്യുകയും വെട്ടിച്ചുരുക്കുകയും ചെയ്തു. അതു കഴിഞ്ഞിട്ടു ഇപ്പോൾ 12 കൊല്ലത്തിനു മേലായി. ഇന്നു ഈ സംസ്ഥാനത്തിലെ കൃഷിക്കാർക്ക് 150 കോടി ഉറുപ്പികയിലധികം കടമുണ്ടെന്നാണ് കാണുന്നത്. ഈ കടം വെട്ടിച്ചുരുക്കിയതുകൊണ്ടോ ഗഡുക്കളായി കൊടുത്തു തീർക്കാൻ അനുവദിച്ചതുകൊണ്ടോ മാത്രം കൃഷിക്കാർക്ക് കടത്തിൽനിന്നു മോചനം ലഭിക്കാൻ പോകുന്നില്ല. പരസ്പരസഹായസംഘങ്ങളോ റൂറൽ ബാങ്കുകളോ ഏർപ്പെടുത്തി കൃഷിക്കാർക്ക് കടം കിട്ടാനുള്ള സൌകര്യമുണ്ടാക്കിക്കൊടുത്താൽ ഈ കടമെല്ലാം തീരുമെന്ന അഭിപ്രായവും അത്ര ശരിയല്ല.

" കൃഷിക്കാരന്നു മുഴുവൻ സമയവും പ്രവൃത്തിയില്ല, അവന്റെ വരുമാനം വളരെ തുച്ഛമാണു്. അതാണു് കൃഷിക്കാരന്റെ മൌലികമായ പ്രശ്നം. ഒരു കൊല്ലത്തിൽ കൃഷിക്കാരന്നു വളരെ കുറച്ചു കാലം മാത്രമേ കൃഷിപ്പണിയുള്ളു. പണിയില്ലാത്ത ഒഴിവുകാലങ്ങളിൽ മററു പ്രവൃത്തികളിലേർപ്പെട്ടു വരുമാനം വർദ്ധിപ്പിക്കാനുതകുന്ന ഗ്രാമവ്യവസായങ്ങൾ ഈ നാട്ടിൽ ഏർപ്പെടുത്തിക്കൊടുത്താലല്ലാതെ കൃഷിക്കാരന്റെ ഋണഭാരം കുറയ്ക്കാനോ നിശ്ശേഷം ഇല്ലാതാക്കാനോ സാദ്ധ്യമല്ല. അതിന്നുള്ള പദ്ധതികളൊന്നും ഗവർമ്മേണ്ടിന്നില്ല. ഈ ബില്ലിലും അതിനെപ്പററി യാതൊന്നും പറയുന്നില്ല. അതുകൊണ്ടാണു് കൃഷിക്കാരെ സംബന്ധിച്ചിടത്തോളം ഈ ബില്ല് നിർഗ്ഗുണമാണെന്നു് ഞാൻ പറഞ്ഞതു്.

" ഇനി കടം കൊടുത്തിട്ടുള്ള ആളുകളെ സംബന്ധിച്ചാണെങ്കിൽ ഈ ബില്ല് നിർദ്ദോഷവുമാണു്. കടം കൊടുത്തിട്ടുള്ളവർക്കു്, നാട്ടിലെ ഇന്നത്തെ സ്ഥിതി വെച്ചു നോക്കിയാൽ, അവരുടെ പണം നാലു തവണയായിട്ടല്ല ആറു തവണയായിട്ടു കിട്ടിയാലും അവർ സംതൃപ്തരാണു്. അതുകൊണ്ടാണു് കടംകൊടുത്തവരെ സംബന്ധിച്ചിടത്തോളം ഈ ബില്ല് നിർദ്ദോഷമാണെന്നും ഞാൻ പറഞ്ഞതു്. ഈ ബില്ല് ആദ്യം അവതരിപ്പിച്ചപ്പോൾ ഉണ്ടായിരുന്ന ചില്ലറ ദോഷങ്ങൾ സെലക്ട് കമ്മിററിയിൽവെച്ചു പരിഹരിക്കപ്പെട്ടിട്ടുണ്ടു്. അയ്യായിരം ഉറുപ്പികയിലധികം സ്വത്തില്ലാത്ത ആളുകളെ ആദ്യം ഇതിൽനിന്നും ഒഴിവാക്കിയിരുന്നു. സ്വത്തിനെപ്പററി തർക്കമുണ്ടായി വെറുതെ കോടതിയിൽ പോകാനുള്ള ഒരു വഴിയായിരുന്നു അതു്. അതു് എടുത്തുകളഞ്ഞില്ലെങ്കിൽ ഈ നാട്ടിലെ കൃഷിക്കാർക്കു വലിയ ആപത്തുണ്ടാകുമായിരുന്നു. ആ കുഴപ്പമെല്ലാം സെലക്ട് കമ്മിററി പരിഹരിച്ചിട്ടുണ്ടു്. എങ്കിലും ഈ നാട്ടിലെ കൃഷിക്കാർക്കു ആശ്വാസം നല്കാൻ ഈ ബില്ല് പര്യാപ്തമല്ലെന്നാണു് എനിക്കു ചൂണ്ടിക്കാണിക്കുവാനുള്ളതു് കൃഷിക്കാരന്നു ഒഴിവുസമയങ്ങളിൽ പ്രവൃത്തിയെടുത്തു വരുമാനം വർദ്ധിപ്പിക്കാനുള്ള സൌകര്യം ഉണ്ടാക്കിക്കൊടുക്കുകയാണു് കൃഷിക്കാരനെ കടത്തിൽനിന്നു രക്ഷിക്കാനുള്ള ഏകമാർഗ്ഗം. അക്കാര്യത്തിൽ ഇനിയെങ്കിലും ഗവർമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധ പതിയുമെന്നു വിശ്വസിച്ചുകൊണ്ടു് ഞാൻ അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു."

11-12 a.m.

* SRI V. R. NAGARAJAN :—" Sir, I support this Bill. This Bill is a small and simple one. The basic object of it is to enable agriculturists to repay their debts in easy instalments. It is not as if this Bill is intended as a sovereign remedy for all the ills confronting the agriculturists. Time factor is the most important thing in a legislation like this. We are now bent upon giving some aid to agriculturists not for all time but only for the duration of the period of the crisis with which they are now faced. Viewed in that aspect, I think the sponsors of the Bill and the Select Committee have embodied in this Bill certain very reasonable provisions. On the suggestion of the Members, the Select Committee has amended clause 2 (*a*) which defines the term ' agriculturist '. With regard to agriculturists who own houses, a provision very favourable to them is incorporated in clause 2 (*a*) (iii). It is said in this clause that the term ' agriculturist ' shall include any person assessed in any half-year to house tax on an annual rental value of not more than six hundred rupees and the building in which he lives is excluded for this purpose. This is a great concession shown to agriculturists who own houses. This concession was given in deference to the wish of some Members. Agriculturists who are assessed to profession tax on income derived from a profession other than agriculture on a half-yearly income of nine hundred rupees or less get the relief conferred by this Act. Agriculturists who pay land revenue of one hundred and fifty rupees or less per annum also get the relief conferred by this Act. These are salutary provisions which give relief to certain classes of agriculturists.

22nd February 1955] [Sri V. R. Nagarajan]

" In the definition of ' debt ', certain changes have been made by the Select Committee. Liabilities arising under any Chit Fund Scheme are excluded from the scope of that definition. This exclusion was not there in the original Bill. Certain organizations and individuals represented that Chit Fund organizations, like co-operative societies, provided credit facilities to poor people and that they should be exempted from this Act. That was why Chit Funds were excluded. Clause 2 (*b*) (vi) of the original Bill excluded from the purview of the Act any liability due to a person the value of whose property, including the principal amount of the debt or debts, did not exceed five thousand rupees. There was an overwhelming majority of Members in the Select Committee who felt that this provision would lead to all sorts of complications. Creditors who come under this limitation may be well off otherwise and those who have borrowed from them need not be denied the benefit of this Act.

" The important clauses of this Bill are clauses 3 and 4. It is provided in clause 3 that no suit for recovery of a debt shall be filed before the expiry of four months from the commencement of this Act. It is provided in clause 4 that an agriculturist can pay within four months of the commencement of this Act the interest due up to the commencement of this Act and one-eighth of the principal or one-fourth of the total amount outstanding, whichever is less. The balance of the debt is allowed to be paid in three equal annual instalments. This provision was made in response to the suggestion made by one of the Members belonging to the Opposition Party. The four month respite will save the agriculturists from being flooded with suits for the recovery of debts due by them. The three annual instalments provided for clearing the debt is not absolute. Three is only the minimum number of instalments that a court can give. It is open to a court to allow more instalments having regard to the poverty and the circumstances of the debtor. This is a point that has to be borne in mind. It is not as if the Government do not want to give more time than what is provided for in this Bill."

Sri A. K. SUBBAIAH :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்தில் இருக்கக்கூடிய கடன் வாய்தா சட்ட சம்பந்தமாக சில யோசனைகளைச் சொல்வதற்கு விரும்புகிறேன். விவசாயிகளிடமிருந்து கடனைத் திருப்பி வசூலிக்கக்கூடிய ஒரு சட்டமாக இது இருக்கிறதேயொழிய விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடியதாக அமையவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

" கடந்த பல வருஷங்களாக இந்நாட்டிலுள்ள விவசாயிகள் கடன் நிவாரணம் வேண்டுமென்று பெரிய கிளர்ச்சியைச் செய்து கொண்டு வந்தார்கள். விவசாயிகளின் கிளர்ச்சியை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அவர்களுடைய கிளர்ச்சியை ஏற்றுக்கொண்டும்கூட சட்டத்தைக் கொண்டுவரும்போது விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் அது அமைந்திருக்கிறதா என்று பார்த்தால், அந்த முறையில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறது.

[Sri A. K. Subbaiah] [22nd February 1955

"பண்ணையாட்களும், விவசாயக் கூலிகளும் 'விவசாயிகள்" என்ற பதத்தில் சேர்க்கப்படாமலிருக்கிறார்கள். அவர்களும் இந்தச்சட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அவர்களும் கடன்காரர்களாக இருக்கிறார்கள். எப்படியென்றால், கடன் வாங்கியதன் மூலமாகத்தான் விவசாயிகள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள். ஒரு விவசாயி தனக்குப் பணம் வேண்டுமென்றால் ஒரு மிராசுதாரிடமோ அல்லது கடன் கொடுத்து லேவாதேவி செய்யக்கூடியவர்களிடமிருந்தோ கடன் வாங்குகிறான். ரூ. 100 கடன் வாங்கவேண்டுமென்றால் அவன் ரூ. 200-க்கு "ப்ரோநோட்டு" எழுதிக்கொடுத்துத்தான் கடன் வாங்குகிறான். கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாத காரணத்தினால் அவனும் அவனுடைய குடும்பத்தார்களும் கடன் கொடுத்த மிராசுதாரிடத்தில் அடிமைகளாக வேலை செய்துவரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கடன் திருப்பிக் கொடுக்கும் வரை மிராசுதார் என்னென்ன நிபந்தனை விதிக்கிறார்களோ அதற்கெல்லாம் கடன் பட்ட விவசாயி உட்பட்டு நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

11-20 a.m. "இந்த விவசாயி என்ற பதத்தில் கூலி விவசாயி, பண்ணை விவசாயி என்று சேர்த்துக்கொள்ளலாம். இவர்களுக்கு எந்த விதமான நிவாரணமும் அளிக்கப்படவில்லை. அவரவர்கள் கடன்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். எந்தவிதமான சுதந்திரமும் இல்லாமல் அடிமையாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக பண உதவி அளித்து 20 வருஷத் தவணையில் வாங்கிய பணத்தை திருப்பிக்கொடுக்கும் படியாகச் செய்யவேண்டும். தஞ்சை ஜில்லாவில் கடன் கொடுத்து கடன் வாங்கினவர் இறந்து போன பின் இன்னொருவரிடமிருந்து பணம் வசூலித்து வருகிறார்கள். கோவில்களிலும், மடங்களிலும் குத்தகை விஷயமாக விவசாயிகள் பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லையென்றால் அதனால் ஒன்றும் பாதகம் ஏற்பட்டுவிடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கோவில்களுக்கும் மடங்களுக்கும் கொடுக்கக்கூடிய கடன்கள் விவசாயிகள் குத்தகை வாரங்களுக்கு நெல் அளக்கமுடியாததால்தான் ஏற்பட்டது. வருஷம் 30 கலம், 40 கலம் என்று மொத்தமாக ஏழை விவசாயிகளிடமிருந்து வாங்கி வருகிறார்கள். ஆதலால் கோவில், மடங்களுக்கு கொடுக்கவேண்டிய பணத்தை ரத்துசெய்யவேண்டுமென்று அந்த முறையிலேதான் சட்டமாக இருக்கவேண்டும என்பது என்னுடைய அபிப்பிராயம். பண்ணை விவசாயிகளையும் கூலி விவசாயிகளையும் இந்தச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

*SRI S. R. ARUMUGAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் பட்ட கடனைத் திருப்பி கொடுப்பது சம்பந்தமாக வந்திருக்கக்கூடிய இம் மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். பொதுவாகவே மாரடோரியம் சட்டம் வந்த பிறகு சர்க்கார் கடன்பட்ட விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்கப் போகிறது என்று அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதற்குத் தகுந்த மாதிரி இந்தச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூன்று வருஷ தவணைகளில் கடனை திருப்பி கொடுக்க வேண்டுமென்று இருப்பது மிக நியாயமானது. இதில் சில மாறுதலை செய்து இச்சட்டத்தை திருத்தினால் மிகவும் நலமாயிருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

"உதாரணமாக செக்ஷன் 2-ல் யார் யார் விவசாயிகள் அல்லாதார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முனிசிபாலிடிகளில் உத்தியோக வரி விதிக்கப்படுகிறது. மேஜர் பஞ்சாயத்துகளிலும் கூட 100 ரூபாய் சம்பளம் வாங்குபவரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோக வரி விதிக்கப்படுவது கிடையாது. அவர்களுக்கு பூமி சொந்தமாக இருந்தாலும் விவசாயிகள் என்ற முறையில் சட்டம் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. மேஜர் பஞ்சாயத்துகளிலும் மைனர் பஞ்சாயத்துக்களிலும் வசிக்கக்கூடியவர்கள் 100 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கிக்கொண்டு இருப்பவர்கள் விவசாயிகள் அல்ல என்ற நிபந்தனை விதித்தால் நன்றாக இருக்கும்.

22nd February 1955] [Sri S. R. Arumugam]

"அடுத்தபடியாக கடனைத்திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று 4-வது செக்ஷனில் இருக்கிறது. அது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக மூன்று வருஷ தவணைகளில் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. கடன் கொடுத்து கடன் வாங்குவதையே சிலர் தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பல்லடம் தாலுக்காவில் 30 வட்டி கடைகள் இருக்கின்றன. 10,000 ரூபாய்க இருந்த மூலதனம் 10 லட்சம் வரையிலும் உயர்ந்திருக்கிறது. விவசாயிகளுக்குக கொடுக்கக்கூடிய கடன்களை அதிக வட்டிக்குக் கொடுத்து இம்மாதிரி அவர்கள் மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். 1951-ம் வருஷத்திய பேமெண்டு ஆப் டெட் இன்ஸ்டால்மெண்ட் சட்டத்தின்படி 1951-ம் வருஷத்தில் புதிப்பிக்கப்பட்ட எல்லா பிராமிசரி நோட்டுகளுக்குள்ள வட்டியைத் தள்ளிக்கொடுப்பது மிகவும் அவசியம். சர்க்கார் இதை கவனித்து 1951-ம் வருஷத்தில் புதிப்பிக்கப்பட்ட கடன்களுக்கு எல்லா வட்டியையும் ரத்து செய்து முதலை பின்னால் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று சட்டத்தின் கீழ் கொண்டு வருவது மிகவும் அவசியம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"கடன் கொடுத்தவர்கள் இரண்டு தரப்பினர். கடன் கொடுத்து வட்டி வாங்குவதே தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் ஒரு சாரார். பாங்கின் மூலமாக கடன் கொடுக்கப்படுகிறது. அதைத் தவிர விவசாயிகளுக்குள்ளேயே கை பணத்தை மற்றவர்களுக்கு கடன் கொடுத்து திருப்பி வாங்கிக் கொண்டு வரும் பழக்கம் இருக்கிறது. இவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணங்களை மூன்று வருஷத் தவணைகளில் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று இருப்பதற்குப் பதிலாக யார் வட்டியை வருஷா வருஷம் ஒழுங்காக செலுத்துகிறார்களோ அப்படிப்பட்டவர்கள் 5 வருஷத் தவணைகளிலும் மற்றவர்கள் மூன்று வருஷத் தவணைகளிலும் கடனைக் கொடுத்து விடவேண்டும் என்ற முறையில் சட்டம் கொண்டுவந்தால், அதிகமான விவசாயிகளுக்கு பிரயோஜனப்படும் என்பதை நான் சர்க்காருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். தனிப்பட்ட முறையில் கடன் கொடுத்து கடன் வாங்கும்போது ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் மூலமாக பதிவு செய்துகொள்ளவேண்டும் என்ற முறையை ஏற்படுத்தினால் நியாயமான வட்டிக்கு கடன் கிடைக்கவும் பிற்காலத்தில் கடன் விஷயமாக மசோதா ஏதாவது கொண்டு வரவேண்டுமானால் சர்க்காருக்கு உதவியாகவும் இருக்கும். இந்தச் சட்டத்தை முழு மனதுடன் ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்."

* **Sri N. RATHINA GOUNDER** :—"மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று செலக்ட் கமிட்டிக்கு சென்று பிரேரேபித்து மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று விவசாயிகளின் நிலை எவ்வாறு இருக்கிறது? அவர்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். நான் சொல்லக்கூடிய குறைகளை கூர்ந்து கவனித்து கனம் ரெவின்யூ மந்திரி அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயப் பெரும் குடியில் பிறந்து வளர்ந்த கனம் மந்திரி அவர்களுக்கும் மற்ற அங்கத்தினர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், விவசாயிகள்தான் சர்க்காரினுடைய முதுகெலும்புகள், காமதேனுக்கள், வாயில்லாப்பூச்சிகள். ஆனால் அவர்கள் கடன் வாங்க வேண்டிய நிலைமை எதனால் ஏற்பட்டது? மழையின்மை, அதனால் விளைவு இல்லை, வருவாயில்லை. கவர்ன்மெண்டு மூலமாக, வெள்ளக் கஷ்ட நிவாரணம் போன்ற எந்தவித நன்கொடை கொடுத்தாலும் அவை விவசாயிகளிடமிருந்தே வசூலிக்கப்படுகிறது. ஜில்லா கலெக்டர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், தாசில்தார் போன்றவர்கள் இந்த விவசாயிகளின் தலையில் கையை வைத்துத்தான் ஏராளமான தொகை வசூலிக்கிறார்கள். 11-28 a.m.

"இப்பொழுது என்.ஜி.ஓ.க்கள் சம்பள உயர்வுக்காக பாடுபடுகிறார்கள். தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் ஆரம்பிக்கிறார்கள். எதற்காக? அவர்களுடைய கூலியை அதிகப்படுத்தவேண்டும் என்பதற்காக. ஆனால் அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவி புரிய முன் வரவில்லை. விவசாயிகள் துன்பங்களை அரசாங்கம் ஆராயவில்லை. அதனால் விவசாயிகள் மிகவும்

கஷ்டப்படுகிறார்கள். தங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுங்கள் என்று வேண்டிக்கொள்கிறார்கள். அவர்கள் மூன்று வருஷங்கள் என்றிருப்பதை இருபது வருஷங்கள் என்று கேட்கவில்லை. ஐந்தாறு வருஷங்கள் தான் அவர்கள் கேட்கிறார்கள். அதற்குக் காரணம் மழை இல்லை, பிறகு மழை பெய்தும் கூட விலைவாசிகள் குறைவாக இருப்பதால் விளை பொருள்களுக்கு விலை இல்லை. அதனால் விவசாயிகள் தங்களுடைய பூமியை விற்று கடனை கொடுக்கலாம் என்றால் அவர்களுடைய பூமியை வாங்குவதற்கும் ஆள் இல்லை. இப்பொழுது நிலங்களை பிரித்துக்கொடுக்கப்படும் திட்டம் வரப்போகிறது என்ற ஒரு மனப்பான்மை மக்களிடத்தில் நிலவி வருவதால் நிலங்களை வாங்குவதற்கு யாரும் முன் வருவதாகவே இல்லை. அதனால் நிலத்தை விற்றாலும் அதை வாங்குவதற்கு கேட்பாரற்று கிடக்கிறது.

"ரூ. 250 கிஸ்தி செலுத்துகிறவர்களையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று செலெக்ட் கமிட்டியில் தெரிவித்தும் அவர்களை இதில் சேர்த்துக்கொள்ளவில்லை. நான் மந்திரி அவர்களை ஒன்று கேட்கிறேன். ரூ. 100 கிஸ்தி கட்டும் விவசாயிகளுடன் ரூ. 250 கிஸ்தி கட்டும் பெரும் நிலக்காரர்களும் அந்தப் பிராந்தியத்தில் இருப்பார்கள். அவர்களும்தான் விவசாயம் செய்கிறார்கள். இவர்கள் பெரிய பண்ணை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். அவர்களிடத்தில் ஆடு மாடு முதலான கால்நடைகள் இருக்கின்றன. இவைகளை திடீரென்று விற்றுவிட முடியாது. ஆகவே சிறிய விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய கஷ்டம் பெரியவர்களுக்கும் இருக்கிறது. அவர்களுக்கு ஒரு விதமான கஷ்டம். இவர்களுக்கு பல விதத்தில் பல விதமான கஷ்டங்கள். பெரிய நிலச்சுவாந்தார்களுக்கு இரண்டு வழிகளில் கஷ்டம் ஏற்படுகின்றன. இவர்களுக்கு கிடைக்க வேண்டிய கடனை இவர்கள் வாங்க முடியாது. இவர்கள் கொடுக்க வேண்டிய கடனுக்கு வாய்தா கிடையாது. கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

"அது மாத்திரமல்ல. நாலு மாதங்களுக்குள் அசலில் ஒரு பகுதியும் வட்டியும் சேர்த்துக் கட்ட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறில் ஒரு பங்கைக் கட்டும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"இப்பொழுது வருமானம் கிடையாது. தானிய விலைகளும் குறைந்துவிட்டன. மற்ற வழிகளில் சம்பாதிப்பதற்குத் தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள். அத்துடன் விவசாயிகள் ரூ. 100 கடன் வாங்கியிருந்தால் அவர்களிடமிருந்து ரூ. 200-க்கு எழுதி வாங்கியிருக்கிறார்கள். அதற்கு இந்த சட்டத்தில் ஒன்றும் இல்லை. ஒன்று அதைப்பற்றி இந்தச் சட்டத்தில் குறிப்பிடவேண்டும். இல்லாவிட்டால் அதை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும். அதைக்கண்டு பிடிக்க அரசாங்கம் ஏதாகிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

"கடைசியாக ஒரு வார்த்தை. எந்த உத்தியோகஸ்தர் ஸ்ட்ரைக் செய்தாலும், எந்த தொழிலாளர் ஸ்ட்ரைக் செய்தாலும் அரசாங்கத்தார் பயப்படுகிறார்கள். ஆனால் அரசாங்கம் விவசாயிகளைப்பற்றி கவலைப்படுவதில்லை. விவசாயிகள் ஸ்ட்ரைக் செய்தால் என்னவாகும் என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். இப்பொழுது விவசாயிகளிடத்தில் ஒருவிதமான திட்டம் உருவாகி வருகிறது. விவசாயிகள் அவரவர்களுடைய குடும்பத்திற்கு மட்டும் உணவு உற்பத்தி செய்து கொண்டு விட்டு மற்றவர்களுக்கு உற்பத்தி செய்யாமல் இருக்கப் போவதாகத் தெரிய வருகிறது. அப்படி உற்பத்தி செய்யா விட்டால் பட்டணங்களில் வாழ்ந்து வருகிறவர்களுடைய பாடு திண்டாட்டம்தான். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி தங்களுக்கு மட்டும் உணவு செய்துகொண்டுவிட்டு மற்றவர்களுக்கு செய்யாமலிருந்துவிட்டால் பட்டணங்களில் பெரிய உணவு நெருக்கடி ஏற்படும். அப்பொழுது என்னைப்போன்றவர்கள் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இதை இப்பொழுது நான் சொல்லிக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை.

22nd February 1955] [Sri N. Rathina Gounder]

கவர்ண்மெண்ட் கண்டிப்பாக இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு விவசாயிகளின் குறை தீர ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

* SRI M. MANICKASUNDARAM :—" மன்ற உதவி தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து தவணை முறையில் கடனை வசூலிப்பதற்கு பல விதிகளை நியமித்திருக்கிறார்கள். இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் கடன் கொடுத்தவரும் கடன் வாங்கியவரும் அவரவர்களுடைய நிலைமை பாதிக்கப்படாமலும் அவரவர்களுடைய நலன் கள் கெடாமல் இருக்கவேண்டிய ஒரு சூழ் நிலையை அனுசரித்துச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. பொதுவாக கடனைக் கொடுத்தபோது அந்தக் கடன் வாங்கியவர்கள் அழியவேண்டுமென்றோ அல்லது வாங்கியக் கடனை திருப்பி கொடுக்க கூடாது என்றோ நினைத்தவர்கள் அல்ல. விவசாயி களுடைய பிற்கால நிலையும் விலைவாசி குறைவும் பல இன்னல்களை அவர்களுக்கு விளைவித்திருக்கிறது. விவசாயிகள் கடன் வாங்கிய பின் வாங்கிய கடனைக் கொடுக்க முயலும் காலத்தில் பருவ மாறுதல் ஏற்பட்டு மழை சரியாக பெய்யாமல் வாங்கிய கடனை காலத்தில் திருப்பிக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. அதனால்தான் இப்படிப்பட்ட சட்டத்தை இயற் றும்படியான நிலைமை ஏற்படுகிறது. ஆகையினால் இந்த சட்டத்தைப் பற்றி விவாதிக்கும்போது எல்லாவற்றையும் கவனிக்கவேண்டியதாக இருக்கிறது.

" இந்த சட்டத்தில் விவசாயிகள் என்ற விதியில் சிலவற்றை விளக்கி யிருக்கிறார்கள். பொதுவாக இதை பெரும் எண்ணத்துடன் நோக்கினால் மிகவும் நன்றாக இருக்கும். இதில் கிஸ்தி உச்சளவு ரூ. 150 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதை ரூ. 250-க்கு உயர்த்த வேண்டும். வியாதியுள்ளவன் ஒரு மருத்துவ னிடத்தில் செல்லும் காலத்தில் மருத்துவன் அந்த வியாதிக்காரனை கவனிக்கிறான். வியாதியாக உள்ளவன் பணம் படைத்தவனா பண வசதி யுள்ளவனா என்ற நிலைமையை கவனித்து அந்த வியாதியஸ்தனை புறக் கணிக்கக்கூடிய நிலைமையை ஒத்திருக்கிறது இந்த விதிகள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தவணை முறையை ஏற்படுத்துவதால் கடன் கொடுத்தவர்களுடைய தொகை பூராவும் அதாவது வட்டி அசல் பூராவும் கிடைத்து விடுகிறது. ஆகையினால் இதில் பெரும் நோக்கத்துடன் கவனிக்க வேண்டும் என்று ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்வதுடன் அவர்களுடைய கட்சிக்காரர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக வீட்டு வரி செலுத்தும் விவசாயிகளை வீட்டு வரி செலுத்தும் தொகை மீது புறக்கணிக்கப்படும் சில விஷயங்களை கவனிக்கும் போது சாதாரணமாக ஒரு வீட்டு வரி செலுத்தக் கூடியவன் அவன் வாடகைக்கு விட்டு வருமானம் உண்டா என்று நிர்ணயித்து விலக்களித் திருப்பது ஏற்கக்கூடியதே. ஆனால் செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கும் ரூ. 50-ஐ ரூ. 100-க்கு உயர்த்த வேண்டும் என்ற யோசனையை இங்கு கவனிக்க வேண்டும். இதையும் பெரும் எண்ணத்தோடு கவனிக்கவேண் டும். இந்தச் சட்டத்தை இயற்றும்போது கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதற்கு கடனை குறைக்க வேண்டுமா அல்லது கடனை பல வகைகளில் திருப்பிக் கொடுக்க கூடியவர்கள் யார் என்பவை அல்ல. கடன் வாங்கியவன் திருப்பிக்கொடுக்கும்போது வருங் காலத்தையும் விலை வாசியையும் அனுசரித்து நாம் அவனுக்கு சாதகமாகவும் கடன் கொடுத்த வருக்கு பூர்ண பலன் அடையும்படியான நிலைமையையும் உண்டு பண்ண வேண்டும். இம்மாதிரி செய்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும்.

" யுத்த காலத்தில் விவசாயிகளை சர்க்கார் கொடுமையாகவே நடத்தி வந்திருக்கிறார்கள். அப்பொழுது விவசாயிகளால் உற்பத்தி செய்ய முடி யாமலிருந்தது. அதற்கு வேண்டிய சௌகர்யங்களை அவனுக்குச் செய்து கொடுக்கவில்லை. அவனுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து கொடுக் காமல் விலைவாசிகளை சர்க்கார் கட்டுப்படுத்தி விட்டார்கள். அதனால் விவசாயி களால் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ள முடியாமல் போய் விட்டது அதனால் இப்பொழுது கஷ்டப்படும்படியான நிலைமையும் ஏற்பட்டுவிட்டது

அவர்கள் நசுக்கப்படாமல் பாதுகாக்க அவர்களுக்கு சலுகைகளைக் காட்டினால் அவர்கள் நன்மை அடைய முடியும். தவணையில் கொடுப்பதை நான்கு தவணைகளில் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது போதாது, அது ஆறு தவணைகள் என்றிருக்கவேண்டும். வட்டி அசல் உள்பட முதலில் நாலில் ஒரு பங்கு முதலில் கட்டவேண்டும் என்றிருக்கிறது. ஆறில் ஒரு பங்கு கட்ட வேண்டும் என்று மாற்றிக்கொள்ள வேண்டும். வணக்கம்."

*SRI P. G. KARUTHIRUMAN :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும்படியான இந்த மசோதா கடனை வாய்தா முறையில் திருப்பிக் கொடுக்கும்படியான சட்டம் மிகவும் நல்ல முறையில் இருப்பதைப்பற்றி பாராட்டுகிறேன். இப்பொழுது இருக்கும்படியான நிலைமையைப் பார்க்கும்போது நம் நண்பர்களிடத்தில் பலவிதமான குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடன் குறைப்பு, கடன் ஒத்திவைப்பு என்பது வேறு கடன் வாய்தா என்பது வெவ்வேருவைய. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தச் சட்டத்தை எதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை யோசிக்கவேண்டும். கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை போன வருஷம் கொண்டுவந்தபோது அப்பொழுது இருந்த நிலைமை என்னவென்றால் 4, 5 வருஷம் பருவ மழை தவறியதன் காரணமாக விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்து பிறகு மழை வந்தவுடன் விவசாயம் செய்து விளை பொருள்களை விற்கும் காலத்தில் அவர்கள் சௌகர்யம் அடைவார்கள் அப்பொழுது அவர்களுக்குக் கடன் கொடுத்த கடன்காரர்கள் அவர்களை கஷ்டத்திற்கு உள்ளாக்கக் கூடாது என்பதற்காக கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த சமயத்தில் அந்த கடன்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஒத்திவைப்புக் கொடுத்தால் அவர்களுடைய விவசாயம் அடுத்த வருஷம் நல்ல முறையில் நடக்கும் அதன் மூலம் உற்பத்தியை நல்ல முறையில் பெருக்குவதற்கும் முடியும், அதற்கு ஒரு வசதியும் ஏற்படும் என்று இப்படிப்பட்ட ஒரு ஒத்தி வைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதுவும் பெரிய பலனை அளித்தது. அதனால் விவசாயிகள்
11-40 a.m. எல்லாம் மிகுந்த உற்சாகத்தோடு விவசாயம் செய்து அதிகமாக விளைபொருள்களை உற்பத்தி செய்தார்கள். அதனால் விவசாயிகளுடைய நிலைமையும் வெகுவாக உயர்ந்துவிட்டது. ஆகவே அதற்குப் பிறகும் அதை நீடிக்க வேண்டுமா என்கின்ற பிரச்னை எழுந்தது. அதை நீடிக்கவேண்டாம் என்கின்ற அபிப்பிராயம் வெகுவாக எல்லோரிடத்திலும் இருந்தது என்றாலும் அதை நீடிக்கவேண்டுமென்று ஒரு சிலரால் சொல்லப்பட்டும் வந்தது. அதனால் அவ் விஷயத்தில் அபிப்பிராய பேதம் இருந்துகொண்டேயிருந்ததே தவிர சரியான முடிவுக்கு வருவது கஷ்டமாக இருந்தது. ஆகவே சர்க்கார் இவ் விஷயங்களை எல்லாம் நன்கு பரிசீலனை செய்து உண்மையாக விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வாங்கியிருக்கும் கடனை நியாயமான முறையில் திருப்பித் தருவதற்கு வசதி செய்வதே இந்த மசோதாவின் நோக்கமாகும். நான்கு தவணைகளில் திருப்பித் தரலாமென்று சொல்லப்பட்டிருப்பதால் அவர்கள் சுலபமாக, எளிதாக கடனைத் திருப்பித்தர சௌகர்யமாக இருக்கும்.

"ஆனால் கடன் ஒத்திவைப்பு மசோதாவினால் பலன் அடைந்தவர்கள் ஒரு சிலர் இருந்திருக்கிறார்கள் என்றாலும்கூட அதனால் மோசடி செய்ய முயற்சித்தவர்கள்தான் மிக அதிகப் பேர்களாகும். பட்டிணத்தில் உள்ள ஒருவன் ஏராளமாகக் கடன் வாங்கிவிட்டு கிராமத்திலுள்ள சிறிய நிலத்தை காட்டி 'நான் ஒரு விவசாயி' ஆகவே நான் வாங்கியிருக்கும் கடனுக்கு என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்ல ஆரம்பித்துவிட்டான். எப்படியாவது வாங்கிய கடனை மோசம் செய்ய வேண்டுமென்றே நாணயமற்ற தன்மை ஜனங்களிடம் வெகுவாக அந்தச் சட்டத்தினால் வளர்ந்துவிட்டது. இதைப் பல இடங்களில் நிதர்சனமாகப் எல்லோரும் பார்த்திருக்கலாம். அதனால் பாக்கியிருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச பேர்களும் விவசாயிகளுக்கு உதவி செய்வதை பின்னர் நிறுத்திக்கொண்டு

விட்டார்கள். ஆகவே கிராமங்களில் விவசாயிக்கு இருந்து கொண்டிருந்த கடன் வசதியும் அடியோடு போய்விட்டதால் அவர்களினுல் சரியாக விவசாயமே செய்யமுடியாமல் போய்விட்டது. ஆகவே தான் சர்க்கார் அவர்களுக்கு கடனும் கிடைக்க வேண்டும், அதே சமயத்தில் அதனுல் அவர்களுக்குத் துன்பமும் இருக்கக்கூடாது என்கின்ற எண்ணத்தில் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிருர்கள். இந்த மசோதாவிலேயே எதிர்க்கட்சிக்காரர்கள் கடனையே ரத்து செய்துவிட வழி செய்யவேண்டுமென்று சொல்வது அவ்வளவும் சரியாகாது.''

SRI N. K. PALANISAMY :—'' பின் எதற்காக இந்த மசோதா கொண்டுவரப்படவேண்டுமென்று கனம் அங்கத்தினரைக் கேட்க விரும்புகிறேன்.''

* SRI P. G. KARUTHIRUMAN :—'' நண்பர் மசோதாவை படித்துப் பார்க்கட்டும், வாங்கிய கடனைத் தவணைகளில் திருப்பித் தரவேண்டுமென்பதற்காகவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது கடன் நிவாரண மசோதா இல்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனுல் அவர்கள் தான் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

'' ஏற்கெனவேயே கிராமப்புறங்களில் அந்தக் கட்சியினர் வற்புறுத்திச் சொன்னதாலேயே சர்க்கார் மாரடோரியம் பில்லைக்கொண்டு வந்ததாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிருர்கள். அதோடு அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு 75 ஹரிஜனங்களைக் கூட்டமாகக் கூட்டிக்கொண்டு என் வீட்டிற்கே வந்து நான் சட்டசபையில் மாரடோரியம் பில்லை நீடிக்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். மக்களுக்கு எது நன்மை பயக்குமோ அதை நான் நிச்சயமாக சபையில் வற்புறுத்துவேன் என்கின்ற உறுதியை மட்டும் கொடுத்துஅவர்களை அனுப்பிவிட்டேன். அதற்குப்பிறகும் கூட அவர்கள் பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு கிராமங்களிலுள்ள மக்களை ஏமாற்றிக்கொண்டு வருகிருர்கள். நிச்சயமாக நாங்கள் இந்த மாரடோரியம் பில்லேயே நீடிக்க வைக்கிறேம் என்று அவர்கள் கொடுத்திருக்கும் வாக்குறுதி எல்லாம் இந்த மசோதாவினுல் அடிபட்டுப் போகிறதே என்கின்ற ஏமாற்றத்தில் தான் அவர்கள் இப்படிச் சொல்கிருர்கள் என்பதும் எனக்குத் தெரியும். எப்பொழுதும் அவர்கள் சமய சந்தர்ப்பவாதிகள். இவர்களை ஏமாற்றவேண்டும், தாங்கள் தான் இதைச் செய்தோம் என்று கம்யூனிஸ்டுகள் பெருமை அடித்துக் கொள்ள வசதி இருக்கக்கூடாது என்பதற்காகவே நமது தலைவர் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் கவர்னர் ஆர்டினன்ஸ் மூலமாக இதைக் கொண்டு வந்தார்கள். முதலில் ஆர்டினன்ஸ் செய்துவிட்டு பின்னர் சட்டம் செய்ய சபையின் அனுமதி கோரிவந்தார்கள். அதனுலும் அப்பொழுது அவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிருர்கள். அவர்களுடைய எண்ணம் பலிக்கவேயில்லையென்பதற்காக இந்தக் கடன் திருப்பித் தர வசதி செய்யும் மசோதாவையும் எதிர்க்கிருர்களே தவிர மசோதாவை ஆழ்ந்து கவனித்தால் இது தான் உண்மையில் விவசாயிகளுக்கு அதிக நன்மையை அளிக்கும் என்பது நம் எல்லோருக்கும் நன்ருகத் தெரியவரும். ஆகவேதான் இதை மனப்பூர்வமாக நான் வரவேற்கிறேன்.''

* SRI V. BALAKRISHNAN :—'' கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்ற வாரம் அசல் மசோதா சபையின் விவாதத்திற்கு வந்த காலத்தில் அதிலுள்ள குறைகளையும், குற்றங்களையும் நான் எடுத்துச் சொல்லி அவற்றை சரியான முறையில் கூட்டுப் பொறுக்குக் கமிட்டியானது திருத்த வேண்டுமென்பதாகவும் கேட்டுக்கொண்டேன். ஆனுல் இந்த மசோதாவில் கூட்டுப் பொறுக்குக் கமிட்டியானது நான் சொன்ன யோசனைகள் எதையுமே கவனித்ததாகத் தெரியவில்லை. அந்தக் கூட்டுப்பொறுக்குக் கமிட்டியில் 24 அங்கத்தினர்கள் இருந்திருக்கிருர்கள். அவற்றில் பன்னிரண்டு பேர்கள் வக்கீல்கள். அசல் விவசாயிகளாக இருக்கக்கூடியவர்கள் மூன்று நான்கு பேர்கள் தான். பாக்கிப் பேர்கள் பணக்காரர்கள். 11-4 a.m.

மாடிவீட்டு உல்லாசவாசிகள். அவர்களுக்கு எல்லாம் ஏழை எளிய விவசாயிகளின் கஷ்ட நிலைமை எங்கே தெரியப்போகிறது. ஆகவே அசல விவசாயிகளாக உள்ளவர்கள் கொடுத்த குரலெல்லாம் கூட்டுப் பொறுக்கு கமிட்டியாரால் செவிசாய்க்கப்படவில்லை. அவர்களுடைய யோசனைகளும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. அதைபோலவே இந்தச் சபையிலுள்ள விவசாயிகளுடைய ஏக்கக் குரல்களும் புறக்கணிக்கப்படுகின்றன. சர்க்கார் ஏனோ நம்முடைய சமுதாயத்தில் நூற்றுக்கு இரண்டு மூன்று பேர்களுக்குமேல் இல்லாத வக்கீல் வர்க்கத்தினருக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறது. சர்க்கார் ஏனோ நம்முடைய சமுதாயத்தில் அடித்தளத்தில் நூற்றுக்கு 80 பேர்களுக்கு மேலுள்ள சிறிய சிறிய பட்டதார்களான விவசாயிகளுக்கு மட்டும் பாதுகாப்பு கொடுத்துவிட்டு பெரிய விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க முன்வருவதற்கு அஞ்சுகிறது ! இதற்கெல்லாம் காரணம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஒரு குடும்பத்தில் தாய் தகப்பன் இருப்பார்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் இரண்டையும் வெவ்வேறாகக் கருதி ஒரு குழந்தைக்கு ஒரு தனிச் சலுகையும், மற்றதற்கு அந்தச் சலுகை கொடுக்காமலும், அவர்கள் இருப்பார்களா ? அப்படியிருந்தால் தாய் தாயாகக் கருதப்படமாட்டாள். தகப்பன் தகப்பனாகக் கருதப்படமாட்டான். அதைப்போலவே தான் இந்த ராஜ்யத்திலுள்ள மக்களை வேறுபடுத்தாது எல்லோருக்கும் ஒரேவிதமான சலுகையை அளிக்கவேண்டிய நம் சர்க்கார் இந்த மசோதாவில் விவசாயிகளையே இரண்டு விதமாகப் பிரித்திருப்பது ரொம்பவும் வருந்தவேண்டிய விஷயம். 150 ரூபாய்க்கு மேல் கிஸ்தி கட்டக்கூடியவர்களை விவசாயியாகக் கருத முடியாது என்றும், அவர்களுக்கு இந்தச் சட்டம் பாதுகாப்பு அளிக்காது என்றும் சொல்லப்பட்டிருப்பது ரொம்பவும் வருந்தவேண்டிய ஆட்சேபிக்க வேண்டிய விஷயமாகும். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் நீராரம்பப் பிரதேசத்திலுள்ள ஒரு விவசாயி 150 ரூபாய்க்கு மேல் கிஸ்தி கட்டினுர் என்றால் அவருக்கு இந்தச் சட்டத்தினால் பாதுகாப்பு இருக்காது என்று சொன்னாலும்கூட ஒப்புக்கொள்ளலாம். ஆனால் காடாரம்பப் பிரதேசத்திலுள்ள ஒரு விவசாயியின் நிலைமை அப்படி அல்ல. சொட்டுத் தண்ணீருக்குக் கஷ்டப்படும் வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து தான் கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே அவரைத்தான் நான் கேட்கிறேன். அந்த வரண்ட ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயி 200 ரூபாய் கிஸ்தி கட்டுகிறான் என்று வைத்துக்கொண்டாலும்கூட அவனுக்கு என்ன வருமானம் வரும் ? அதே சமயத்தில் தஞ்சை ஜில்லாவில் 125 ரூபாய் கிஸ்தி கட்டும் ஒரு விவசாயியின் வருமானம் என்னவாக இருக்கும் ? இதை கனம் மந்திரி அவர்கள் நன்கு யோசித்து ஒப்பிட்டுப் பார்த்தார்களா ?

"தஞ்சாவூர் ஜில்லாவில் 150 ரூபாய் ஒருவர் கிஸ்தி கட்டுகிறார் என்றால் அவருக்குக் கிட்டத்தட்ட பத்து ஏக்கரா நஞ்சை நிலமாவது இருக்கும். அதிலிருந்து அவருக்கு குறைந்தது 125 நெல் மூட்டையாவது கிடைக்கும். ஆனால் தென்னாற்காடு, வட ஆற்காடு ஜில்லா வாசிகள் 200, 300 ரூபாய் கிஸ்தி கட்டுகிறார்கள் என்றால் அவர்களுக்குக் குறைந்தது 50 ஏக்கரா நிலமாவது இருக்கும். ஆனால் அதிலிருந்து அவர்களுக்கு 50 மூட்டைகளாவது வருமென்று கனம் ரெவினியூ அல்லது நிதி மந்திரி அவர்கள் நிச்சயமாகச் சொல்லமுடியுமா ? தொன்றுதொட்ட காலம் முதற்கொண்டே அந்தக் காடாரம்பப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள் என்பதை எல்லோருக்கும் நன்கு தெரியும். உண்மையான பெரிய விவசாயிகளுக்கு அதாவது அந்த வரண்ட பிரதேசத்தில் பல காலமாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு எந்த விதமான நிவாரணமும் இந்த மசோதாவில் கொடுக்கப்படவில்லை. 1938-ம் வருஷத்திலே ஒரு கடன் நிவாரணச் சட்டம் சர்க்கார் கொண்டுவந்தார்கள். அதிலேகூட 150 ரூபாய்கள் கிஸ்தி கட்டும் விவசாயி, அதற்கு மேல் கிஸ்தி கட்டும் விவசாயி என்று பிரித்து எந்தவிதமான பாரபட்சமும் காட்டவில்லை. 'டெட் கன்சிலியேஷன் ஆக்ட்', கொண்டுவந்தார்கள். அதிலும் இந்தவிதமான வித்யாசம் கிடையாது. சென்ற ஆண்டில்

கொண்டுவரப்பட்ட மாரடோரியம் கூட்டத்திலும் எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது. ஆனல் இந்தச் சட்டத்தில் அதுவும் உலகம் முழுவதும் சமத்துவம் என்று கோஷமிடப்பட்டுவரும் 1955-ம் ஆண்டில் கொண்டுவரப்படும் சட்டத்தில் விவசாயிகளேயே இரண்டுவிதமாகப் பிரிக்கிறோம். இது ரொம்பவும் அநீதியாகும்.

" அதைத் தவிர பொறுக்குக் கமிட்டியில் வேறொரு அநீதியும் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது அசல் மசோதாவில் மொத்த மூலதனம் 5,000 ரூபாய் மாத்திரமேயுள்ளவர்கள் கடன் கொடுத்திருந்தால் அவர்கள் பாதிக்கப்படாமலிருக்கவேண்டுமென்பதற்கு விலக்கு அளித்திருந்தோம். அந்தப் பிரிவே இதில் விலக்கப்பட்டிருக்கிறது. இது ரொம்பவும் அநீதியாகும். இதைப் பார்க்கும்போது எனக்கு விதவை அம்மாக்களைப்பற்றிய ஞாபகமே வருகிறது. விதவை அம்மாக்களுக்கு அவன் புருஷன் இறந்துபோனபோது விட்டுச் சென்ற சொத்தே நாலாயிரம், ஐயாயிரம் ரூபாய்தான் ஆஸ்தியாக விட்டுப்போயிருந்து அந்த அம்மாக்கள் அந்தப் பணத்தைக் கடன் கொடுத்திருந்தால் அந்தப் பணத்தை உடனடியாக வேணும்போது வாங்கமுடியாது.

" ஆனல், அந்த விதவை அம்மாளினுடைய பெண்ணின் கல்யாணத்திற்கோ, அந்த அம்மாளினுடைய பையனின் உயதரப் படிப்பிற்கோ பணம் மொத்தமாக வேண்டுமென்றல் அதை வாங்குவதற்கு இடமில்லை. அவள் கொடுத்த கடன் பணத்தை நம்பித்தான் அவனுடைய கடமைகளை நிறைவேற்றவேண்டிய நிலையில் இருக்கிறள். பெண்ணின் கலியாணத்தை தகுந்த வரன் கிடைக்கும்போது நடத்துவதற்கு அந்த அம்மாள் ஆசைப்படும்போது கடன் கொடுத்த தொகை அவளுக்குக் கிடைக்க அரசாங்கம் வழி செய்திருக்கிறதா ? இம் மசோதாவின்படி மூன்று வருஷத் தவணைகளில் தான் அவள் கொடுத்திருக்கும் கடன் திருப்பிக் கொடுக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதால், அவளுடைய பெண்ணின் கல்யாணத்தையல்லவா அரசாங்கம் தடை செய்கிருர்கள், கல்யாணம் மூன்று ஆண்டு காத்திருக்க முடியுமா ? அந்த அம்மாளின் மூத்த பையன் உயர்தரக் கல்லூரிப் படிப்புக்குப் போகவேண்டுமென்று விரும்பினல் அதற்கும் இம் மசோதா இடைஞ்சல் செய்வதாக அல்லவா இருக்கிறது ? ஆகவே, இம் மசோதாவானது அநீதியான முறையில் செய்யப்பட்டிருக்கிறது. 11-5 a.m.

" அவசரம் அவசரமாக இப்படிப்பட்ட ஒரு மசோதா கொண்டுவரப்படுவதற்கு என்ன அவசியம் இருக்கிறதென்று நான் கேட்கிறேன் ? இன்னும் பதினைந்து தினங்களுக்குள் கோர்ட்டுகள் மூடப்படும். மே மாதக் கடைசியில்தான் கோர்ட்டுகள் திறக்கப்படும். கடன் பட்டவர்கள் ஜூன் மீ 1வக்குள் கடன் கொடுத்தவர்களிடம் நேரடியாகச் சென்று 'கோர்ட்டில் பிராது போட்டுவிடாதீர்கள், நான் இப்பொழுது கொஞ்சம் தொகை கொடுத்துவிடுகிறேன்' என்று கெஞ்சிக் கேட்டு நிவாரணம் பெறலாம். கடன் கொடுத்தவர்களுக்கே யார் யார் ரூ. 150-க்கு மேல் கிஸ்தி கட்டி வருகிருர்கள். ரூ. 150-க்கு கீழ் கிஸ்தி கட்டுகிருர்களென்பது தெரிந்து கொள்ளுவதற்கும் அவகாசமில்லை. சுமுகமான முறையில் கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக இச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வந்த மறுநாள் 150-க்கு மேல் உள்ளவர்கள்பேரில் தலைக்கு மேல் கத்தியைக்காட்டி, கடனைத் திருப்பிக் கொடுக்கப் போகிருயா ? இல்லையா ? என்ன சொல்லுகிருய் ? என்று பயமுறுத்தக் கூடிய நிலைமையை கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். பொறுக்கு கமிட்டியின் வேலைக்கு ரெவினியூ மந்திரி அவர்களையோ பொறுக்குக் கமிட்டியினரையோ நான் பாராட்டத் தயாராயில்லை."

* **Sri K. MADHAVAN NAMBIAR** :—" മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സാർ, ഈ ബില്ല് സെലക്ട് കമ്മിററിക്കയയ്ക്കുമ്പോൾ കാര്യമായ ചില മാററങ്ങളോടുകൂടി തിരിച്ചു വരുമെന്നാണ് ഞങ്ങൾ പ്രതീക്ഷിച്ചിരുന്നത്. പക്ഷെ അത്യാവശ്യമായ മാററങ്ങളൊന്നുംതന്നെ ഇതിൽ വരുത്തിക്കാണാത്തതിൽ പരിതപിക്കേണ്ടിയിരിക്കുന്നു. ഈ ബില്ലിന്നു പേരുകൊടുത്തിരിക്കുന്നത് കാർഷികാശ്വാസനിയമം എന്നാണ്. പക്ഷെ ഫലത്തിൽ ഉത്തമർണ്ണനെ സഹായിക്കുന്ന ഒരു ബില്ലാണിത്. അതായത്, ഉത്തമർണ്ണന്മാർ

കൊടുത്തിട്ടുള്ള മുതലിന്നും അതിന്റെ പലിശയ്ക്കും യാതൊരു ഹാനിയും വരുന്നതല്ലെന്നു ഉറപ്പു കൊടുക്കുന്ന ഒരു ബില്ലാണിതു്. യഥാർത്ഥത്തിൽ ഋണഭാരംകൊണ്ടു വിഷമിക്കുന്ന കൃഷിക്കാരെ ഇതു് ഏതു വിധത്തിലെങ്കിലും സഹായിക്കുന്നുണ്ടോ എന്നു ചോദിച്ചാൽ ഇല്ലെന്നു തീർത്തുപറയാം. ഇന്നത്തെ ഋണഭാരത്തെ സംബന്ധിച്ചു സൂക്ഷ്മമായ ഒരു പരിശോധന നടത്തി കുറെയെല്ലാം വെട്ടിച്ചുരുക്കാതെ കൃഷിക്കാരന്നു രക്ഷയില്ല. ഇന്നുള്ള കടങ്ങളുടെ സ്വഭാവം പരിശോധിച്ചാൽ മിക്കവാറും കേസ്സുകളിലെല്ലാം മുതലിന്റെ ഇരട്ടി പലിശ തന്നെ കൊടുത്തിട്ടുണ്ടെന്നു കാണാൻ കഴിയും. അതല്ലെങ്കിൽ 300 ക.യ്ക്കു പ്രമാണം എഴുതി വാങ്ങിയിട്ടു വെറും 100 ക.യോ 150 ക.യോ മാത്രം കൊടുത്തിട്ടുള്ളതായിരിക്കും. അതെല്ലാം ശരിയായി പരിശോധിച്ചു വെട്ടിച്ചുരുക്കുന്നില്ലെങ്കിൽ കൃഷിക്കാരെ കൊള്ളചെയ്യുന്ന പണമിടപാടുകാർക്കും ജന്മിമാർക്കും ഇഷ്ടംപോലെ കൊള്ള നടത്തിക്കൊള്ളാനുള്ള സൌകര്യം കൊടുക്കുകയല്ലേ എന്നു ഞാൻ ചോദിക്കുന്നു.

"ഇന്നു കാർഷികോല്പന്നങ്ങൾക്കു വമ്പിച്ച വിലയിടിവാണു്. നാലായിരം ഉറുപ്പിക വിലയുണ്ടായിരുന്ന കുരുമുളകിന്നു 1,000 ക.ക്കു താഴെയേ വിലയുള്ളൂ. കുരുമുളകിന്നു 4,000 ക. വിലയുണ്ടായിരുന്ന സമയത്തു കടമാണെങ്കിൽ 1,000 ക. മാത്രമുള്ളപ്പോൾ അതു് എങ്ങിനെ വീട്ടാൻ സാധിക്കും? ആദ്യത്തെ തവണ അടയ്ക്കാൻ നാലു മാസമാണു് കാലാവധി നിശ്ചയിച്ചിരിക്കുന്നതു്. ഈ നാലു മാസം എന്നു പറഞ്ഞാൽ മലബാറിലെല്ലാം പട്ടിണിക്കാലമാണു്. അതുകൊണ്ടു് ഈ കാലാവധി നീട്ടിക്കൊടുത്തില്ലെങ്കിൽ അധികം കൃഷിക്കാരുടേയും ഭൂമി മുഴുവൻ ലേലത്തിൽ പോകുന്ന വ്യസനകരമായ കാഴ്ചയാണു് നമുക്കു കാണാനിരിക്കുന്നതു്.

"പിന്നെ പാട്ടക്കാരുടെ കാര്യം. ഈ പാട്ടം വെട്ടിച്ചുരുക്കണമെന്നു പറയുന്നതിന്റെ ന്യായമെന്താണു്? മലബാറിലെ പാട്ടക്കോടതികൾ പുറപ്പെടുവിച്ച തീർപ്പുകൾ പരിശോധിച്ചാൽ അതു വ്യക്തമാകുന്നതാണു്. അമിതമായി ജന്മിമാർ പിരിച്ചുപോന്നിരുന്ന പാട്ടം എത്രയോ അധികം വെട്ടിച്ചുരുക്കിക്കൊണ്ടാണു് പാട്ടക്കോടതികളിൽ തീർപ്പുകൾ ഉണ്ടായിട്ടുള്ളതു്. നാല്പത്തിയഞ്ചുറുപ്പിക പാട്ടം നിശ്ചയിച്ചിരുന്ന ഒരു കേസ്സിൽ വെറും 15 നാളികേരം മാത്രം കൊടുത്താൽ മതിയെന്നു ഒരു പാട്ടക്കോടതി വിധിച്ചിട്ടുണ്ടു്. ഇത്ര വമ്പിച്ച പാട്ടം കൊടുക്കണമെന്നുണ്ടായിരുന്നതുകൊണ്ടല്ലേ കൃഷിക്കാരെല്ലാം കടക്കാരായിട്ടുള്ളതു് എന്നു ഒന്നു പരിശോധിക്കേണ്ടതാണു്. പാട്ടബാക്കികൾ വെട്ടിച്ചുരുക്കിയില്ലെങ്കിൽ നിരവധി കൃഷിക്കാർക്കു് അവരുടെ ഭൂമികൾ നഷ്ടപ്പെടേണ്ടി വരുമെന്നുള്ളതിന്നു സംശയമില്ല. ഒന്നോ രണ്ടോ കൊല്ലത്തെ പാട്ടമൊഴിച്ചു ബാക്കിയുള്ളതെല്ലാം റദ്ദ്ചെയ്തുകൊണ്ടുള്ള ഒരു വകുപ്പു് ഈ ബില്ലിൽ ഉൾക്കൊള്ളിക്കുന്നില്ലെങ്കിൽ കൃഷിക്കാർക്കു യാതൊരാശ്വാസവും ഈ നിയമംകൊണ്ടു് കിട്ടുവാൻപോകുന്നില്ല.

"മൂന്നുകൊല്ലംകൊണ്ടു് കടമെല്ലാം ഗഡുക്കളായി കൊടുത്തുതീർക്കണമെന്നുള്ള വ്യവസ്ഥയെപ്പററിയാണു് ഇനി ഒന്നു പറയുവാനുള്ളതു്. ഈ കാലാവധിയും ഗഡുക്കളും വർദ്ധിപ്പിക്കേണ്ടതു് അത്യാവശ്യമാണു്. കൃഷിക്കാരന്നു കടം കിട്ടാനുള്ള ഏർപ്പാടുകളൊന്നും ഗവമ്മേണ്ടു് ചെയ്തിട്ടില്ലാത്ത സ്ഥിതിക്കു ഈ തവണ അടയ്ക്കാനുള്ള പണം കൃഷിക്കാരൻ എങ്ങനെ ഉണ്ടാക്കാനാണു്? എട്ടു വാർഷിക ഗഡുക്കളായി കടം മുഴുവൻ വീട്ടുന്നതിന്നുള്ള സൌകര്യമുണ്ടാക്കിക്കൊടുക്കണമെന്നാണു് ഞാൻ പറയുന്നതു്. ഈ മൂന്നു കൊല്ലംകൊണ്ടു കൃഷിക്കാരന്നു അവന്റെ കടം വീട്ടാൻ സാദ്ധ്യമല്ലെന്നുള്ളതു് തർക്കമററ സംഗതിയാണു്.

"കൃഷിക്കാരെ പററിനില്ക്കുന്ന കർഷകത്തൊഴിലാളികളെ ഈ ബില്ലിൽ ഉൾപ്പെടുത്തിയിട്ടില്ലെന്നു കാണുന്നതു് പരിതാപകരമാണു്. കർഷകത്തൊഴിലാളികളും കടത്തിൽ കുടുങ്ങിയിരിക്കയാണു്. കൃഷിയേയും കൃഷിക്കാരേയും മാത്രം ആശ്രയിച്ചു കഴിയുന്നവരാണു് അവർ. കൃഷിക്കാർക്കു കടം വീട്ടാനാവില്ലെങ്കിൽ, കർഷകത്തൊഴിലാളികൾക്കു എങ്ങനെയാണു് കടം വീട്ടാൻ സാധിക്കുക? അവർക്കു സ്വന്തമായി കൃഷിയും കൃഷിഭൂമിയുമില്ലെന്നുള്ളതുകൊണ്ടു മാത്രം അവരെ ഒഴിച്ചുനിറുത്തുന്നതു് ശരിയല്ല. ഈ നിയമത്തിൽ അവരേയും ഉൾപ്പെടുത്തണം. അവരുടെ കടങ്ങളും വെട്ടിച്ചുരുക്കണം. ഇത്ര മാത്രമേ എനിക്കു ഈ സന്ദർഭത്തിൽ പറയാനുള്ളൂ."

* SRI P. SELVARAJ :—" Mr. Deputy Speaker Sir, it is an oft-repeated truth that a majority of the agriculturists are born in debt, live in debt, die in debt and bequeath debt. This axiom is

more applicable to the present day agriculturists. After having experienced the pangs of famine for over six years, the agriculturists were able to reap some harvest only last year. When such is the case, it is the bounden duty of the Government to rehabilitate the agriculturists. In the matter of rehabilitation of agriculturists, the consideration of the Government should be to lessen the burden of the actual debts that the agriculturists owe to the creditors by affording suitable relief. I am sorry to say that this Bill does not afford any relief to the poor agriculturists. These people are already over-burdened with having to pay land revenue. The Government should have at least wiped off the interest that these agriculturists had to pay to their creditors up to the 1st of October 1953. If such a thing had been provided for in the Bill, it would have been welcomed by all. But, all the same, I have to congratulate the Government that they have been magnanimous enough to provide for repayment of loans in four instalments.

" Another duty of the Government is not only to rehabilitate them, but also to safeguard their interests in future. I have been pressing this all along in my Budget and other speeches and urging that a Rural Credit Bank should be started to advance money to the agriculturists. So, I would suggest here that out of the four instalments the agriculturist is bound to pay to the creditors, at least the third or the fourth instalment should be paid by the Government in the shape of Government bonds and the amount thus realized should become the nucleus to float these Rural Credit Banks. 12 noon

" Some legal lacunae and difficulties were pointed out by hon. Members, that a creditor, decree-holder, who was able to get a decree after 1953 is able to get a prior right over the other creditor who has already obtained a decree. The Government, I think, will be able to consider this and give some relief to the prior creditor also.

" With these words, I close my speech. Thank you, Sir."

***Sri M. P. Subramaniyam** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்திலிருக்கும் கடனைத் தவணைகளில் திருப்பிக் கொடுக்கும் சட்டம் அவசியமே இல்லை என்று சொல்லக்கூடிய நல்லவர்கள் இந்தச் சபையிலும் வெளியிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு இப்பொழுது இடமில்லை. இந்தச் சட்டம் அவசியம் என்ற நிலைமாறி, பயனடையக்கூடிய மக்கள் யாராக இருக்கவேண்டுமென்று முடிவுகட்டும் நிலையில் நாம் இருக்கிறோமென்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" இந்தச் சட்டம் கொண்டுவந்த சந்தர்ப்பத்திலும் ஒரு ஆண்டுக்கு முன்பு கடன் ஒத்திவைப்புச் சட்டம் ஏற்பட்ட நேரத்திலும் விவசாயிகள் இந்தச் சட்டங்களினால் நன்மை அடையவேண்டுமென்ற கருத்தில்தான் சட்டம் அப்பொழுதும் இப்பொழுதும் கொண்டுவரப்பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். மற்ற துறைகளிலெ ஈடுபட்டுள்ள மக்களைவிட விவசாயத்திலே ஈடுபட்டுள்ள மனித சக்திக்கு அப்பாலுள்ள இயற்கையை நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. ஏழு ஆண்டுகளுக்குள் ஐந்து ஆண்டுகள் விவசாயம் பொய்த்துவிடுகிறது. அடிக்கடி இம்மாதிரி தொல்லையைத்தீர்க்க வேண்டியதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறதென்பதையும் நாம் மறக்கக்கூடாது. மற்ற தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களைவிட விவசாயத்தில்

ஈடுபட்டவர்களுக்கு உதவி அவசியம், என்ற அடிப்படையில்தான் ஓர் ஆண்டுக்கு முன்பு கொண்டுவந்த கடன் ஒத்திவைப்பு சட்டமும் இப்பொழுது கொண்டுவந்த மசோதாவும் அனுகப்பட்டிருக்கிறது என்பதை முதலில் நாம் உணரவேண்டும்.

"ஆனால், விவசாயி என்று கூறும்போது வரையறை கூடாதென்று எங்களில் சிலர் உணர்கிறோம். விவசாயி என்று கூறும்போது நேரடியாக விவசாயம் செய்கின்றவன் 10 அல்லது 100 ஏக்கர் அதற்குத் தக்க அளவுக்கு அங்கே செலவு செய்யவேண்டியிருக்கிறது. அதற்காக பல சந்தர்ப்பங்களில் வெளியில் கடன் வாங்கவேண்டிய அவசியம் இருக்கிறது. குறைந்த நிலத்தை வைத்திருக்கும் விவசாயியும் அதிக நிலம் வைத்திருக்கும் விவசாயியும் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. பெரிய பணக்காரர்கள் என்று கூறுவதைவிட இந்த விஷயத்தில் பெரிய நிலத்தை உடையவர்கள் என்று கூறுவதுதான் பொருந்தும். 1938-லே கடன் நிவாரண மசோதா கொண்டுவந்த காலத்தில் பெரிய நிலச்சுவாந்தார்களுக்கு அதிகப்படியான நிலமுடையவர்களுக்கு இந்தச் சட்டத்தினால் பாதுகாப்பு கூடாதென்று பல உறுப்பினர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பிய காலத்தில் அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்து ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கீழ்க்கண்ட வாக்கியத்தைக் கூறியிருக்கிறார். அதை நான் சபையின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

'The intention of the legislation is to distinguish the agricultural classes from those following occupations other than agriculture. . .

The agriculturist who is paying, say, for instance thousand rupees land revenue is indebted in the same manner as an agriculturist who pays a land revenue of Rs. 50. Therefore if we want to distinguish agriculture, they must go by professions.'

(Sri P. G. **Karuthiruman**, Temporary Chairman, in the Chair.)

"இந்தக் கருத்தைத்தான் அவர் அப்பொழுது கூறியிருக்கிறார். விவசாயி என்று கூறும்போது பெரிய விவசாயி சிறிய விவசாயி என்று கூறுவதற்குப் பதிலாக விவசாயி அல்லது விவசாயி அல்லாதவன் என்று பாகுபடுத்திச் சொல்வது சிறந்தது. ரூ. 50 நிலவரி செலுத்துபவனுக்கு கடன் எப்படி இருக்கிறதோ அதேபோல்தான் ஆயிரம் ரூபாய் நிலவரி செலுத்துபவனுக்கும் அந்த அளவுக்குக் கடன் இருக்கிறது என்று அவர் கூறியிருக்கிறார்.

"இப்பொழுது கொண்டுவந்திருக்கும் சட்டத்தில், விவசாயி அல்லாதவன் யார் என்று சொல்லும்போது, வருமான வரி செலுத்துபவன், வருமான வரி செலுத்தாதவன் என்ற இம்மாதிரி குறிப்பிடுகின்ற காரணத்தால் ரூ. 150 என்ற வரம்புக்குப் பதிலாக ரூ. 250 வரை கிஸ்தி செலுத்துவோருக்காவது இம்மசோதா வசதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

12-05 p.m. * **Sri T. S. ARDHANARI** :—"கனம் சேர்மன் அவர்களே, கடன் மசோதா சம்பந்தமாக நம்முடைய மாகாணத்திலே, விவசாயிகள் பூராவும் இன்றைக்கு நடக்கும் சட்டசபை கூட்டத்தில் செய்யப்படும் முடிவை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். மூன்று வருஷகாலமாக இந்தச் சட்டசபையிலே விவசாயிகள் கடன் சம்பந்தமாக எல்லா அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள் அதற்கான அபிப்பிராயங்களையும் சொல்லி இருக்கிறார்கள். அந்த அபிப்பிராயங்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மந்திரிகள் இப்பொழுது இம்மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக இம் மசோதா சம்பந்தமாக விவசாயிகள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால், இக்கடனைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவணைகளில் கட்டுவதுதான் சுலபம் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் விவசாயிகளுடைய இந்த நல்ல உணர்ச்சியைச் சர்க்கார் தங்களுடைய வர்க்க நலனுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு முயற்சி செய்வதைப் பார்த்தால், உண்மையிலே வருந்தாமல் இருக்க முடியாது.

22nd February 1955] [Sri T. S. Ardhanari]

" விவசாயிகள், கடனை தவணைகளில் கட்டுவது என்று சொல்லுவதில் இருக்கக்கூடிய கருத்து எனனவென்றால் கடன் கொடுத்தவன், கடன் வாங்கினவன் ஆகிய இரண்டு பேரையும் பாதிக்கக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த நல்ல எண்ணம் நிறைவேற வேண்டுமானால் விவசாயிகள் வருஷத்தில் கிடைக்கின்ற உபரி வருமானத்திலிருந்து தவணை முறையில் கட்டுவதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தால்தான் இந்தப் புனிதமான எண்ணம் நிறைவேறுமே ஒழிய வேறு முறையில் முடியாதென்பதை சர்க்கார் தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

" கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கினவர்கள் ஆகிய இருவருக்குமுள்ள பிரச்னைமட்டும் அல்ல. இது நம்முடைய மாகாணத்தினுடைய பொருளாதாரப் பிரச்னையாகும். விவசாயிகளுடைய பூரா வருமானமும், அதற்குமேலும் கடன்காரர்களுக்குப் போய்விட்டால் அவர்களுடைய வாங்கும் சக்தி மிகப் பெரிய அளவிற்கு வீழ்ந்து விடுகிறது. ஆகவே, எல்லா தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. நம்முடைய மாகாண மக்களுடைய பொருளாதாரப் பிரச்னையாகக் கடன் இருக்கிறதென்பதும், சர்க்காருக்குத் தெரியும் தெரிந்திருந்தும் இம்மாதிரி சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

"சட்டத்தை நாம் பரிசீலனை செய்து பார்த்தால், வெங்காயத்தின் தோலை உரிக்க மேலும் மேலும் தோல்தான் காணப்படுகிறது. அதைப் போலத்தான் இம்மசோதா அமைந்திருக்கிறது என்ற முடிவுக்கு நாங்கள் வர வேண்டியிருக்கிறது. கடன் வாங்கிய முறையிலே இருக்கக்கூடிய பாகுபாடுகளையும், பித்தலாட்டங்களையும் பரிசீலனை செய்ய முடியாது என்று சர்க்கார் சொல்லிவிட்டது. உபரி வருமானத்திலிருந்து கடனைக் கட்ட வேண்டுமென்ற முறையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. வருகின்ற ஜூலை மாதத்திற்குள் கடனின் முதல் தவணையைக் கட்டுவதற்கு ஆரம்பிக்கவேண்டுமென்று இம்மசோதாவில் சொல்லுவது விசித்தரமாக இருக்கிறது. விவசாயிகளுடைய நிலைமையைப்பற்றி அதிகமாகத் தெரிந்த மந்திரிகளே இவ்வித ஒரு நிலையை உண்டாக்கி இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது இந்நிலையில் வருத்தப்படாமலிருக்க முடியாது ஜூலை மாதம் விதைபோடும் காலம். இந்த காலத்தில் விவசாயத்திற்கு வேண்டிய விதை முதலியவைகளுக்குக் கடன் வாங்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள் விவசாயிகள். அப்படி இருக்கும்போது ஜூலையில் எப்படி முதல் தவணைகளைக் கொடுப்பார்கள். இந்த ஒன்றரை வருஷ காலத்தில் விவசாயிகள் பணம் சேர்த்து வைத்திருக்கலாம், அதை அவர்கள் கட்டிவிடுவார்கள் என்ற முறையில் மந்திரி அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால், உண்மையிலேயே விவசாயிகளுடைய நிலைமையைப் புரிந்துகொண்டுதான் மந்திரி அப்படி நினைக்கிறார்களா ? இல்லையா ? என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது. புள்ளி விவரங்கள் உண்மையான நிலையை எடுத்துக் காட்டும் என்று நினைக்கிறேன். சென்ற வருஷம் பருத்தி ஒரு பொதி ரூ. 100 முதல் 140 வரை விற்றுக்கொண்டிருந்தது. ஆனால் இன்றைக்கு ரூ. 70 லிருந்து 90 ரூபாய் வரைதான் விற்கிறது. அதேமாதிரி நிலகடலை மூட்டை சென்ற வருஷம் மூட்டை ரூ. 20 முதல் ரூ. 23 வரை விற்று வந்தது, இப்பொழுது 14 லிருந்து 15க்குக் குறைந்திருக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். விவசாயிகளுக்குச் சாதகமான முறையில் நலல்தொரு சட்டம் வரும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதின் மனிதப் பண்பைப்பற்றி அங்கத்தினர்கள் பேசினார்கள். ஆனால் காங்கிரஸ் பல வருஷ காலங்களாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவிற்குக் கடைப் பிடித்திருக்கிறார்கள், இது எவ்வளவு மனிதப் பண்பு என்பதைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI L. C. PAIS :—" Mr. Chairman, Sir, I wish to make only a few observations. I must say at the outset that in spite of the fact that the Bill was considered by the Government in all its 12-10 p.m.

aspects and also scrutinised by a Select Committee, it still contains certain defects, certain ambiguities and certain imperfections which it is our duty to remove when we present a Bill of this kind to the public. I will refer to only a few of them. On the motion for referring the Bill to a Select Committee, I raised two points and there has not been any clarification on them so far. I refer to clause 4 (1), which provides that notwithstanding any law to the contrary, an agriculturist shall be entitled to pay the dues in certain instalments. I wish to ask whether this provision will apply to a case of this kind, viz. : Suppose a property is brought to sale in execution of a decree. Under the Civil Procedure Code, the sale can be set aside if the payment is made within a particular time. That time has expired. Under clause 4, is it still open to a debtor to deposit the amount and get the sale set aside? The doubt arises because clause 4 (1) begins with the words ' Notwithstanding any law, custom, contract, or decree of court to the contrary' In spite of the provisions of the Civil Procedure Code, is it open to a debtor to have the sale set aside? I would like to have clarification on this point.

" The definition of the term ' agriculturist ' is as vague as ever. I am referring to the wording ' not being a land appurtenant to a residential building '. The Bill does not define what is meant by ' appurtenant '. The courts are taking divergent views of the expression ' appurtenant ' to a building. The object of all legislation is to minimise litigation as much as possible. Therefore should we not define the word instead of leaving it to the courts to interpret it?

" I will refer to two more points and both of them are raised in one of the Minutes of Dissent. The Bill does not apply to debts contracted after 1st October 1953. If the property of an agriculturist debtor is sold, this Bill does not provide any remedy to creditors who lent prior to 1st October 1953. When one set of creditors are allowed to realize the amount due to them, the other set of creditors also should be enabled to realize their dues. Both sets of creditors should be enabled to get rateable distribution of the assets realized by the sale of the debtor's property. The other point is about limitation. These points have to be clarified. When we pass a legislation, it should be free from ambiguities and imperfections.

" The existing Act and the proposed Act that we are discussing do confer substantial benefit on agriculturist debtors. But unless the Government come to their aid by providing them with credit facilities by some other method, the relief that is given will not carry them far and they will not be in a position to repay their debt. The little money that they had must have been spent away during the one-year respite that they had. I have nothing more to say."

12–15 p.m. * **SRI K. R. NALLASIVAM** :—"கனம் தலைவர்களே, இப்போது சோஷயலிஸ் அடிப்படையிலே சமூகத்தை மாற்றி அமைப்பதுபற்றிய விஷயங்களை இப்போதைய காங்கிரஸ் சர்க்கார் பிரஸ்தாபித்துக்கொண்டிருக்கிறது.

22nd February 1955] [Sri K. R. Nallaṣivam]

சர்க்கார் இன்றைக்கு கொண்டுவந்திருக்கக்கூடிய கடன் வாய்தா மசோதா அடிப்படையில் பார்த்தால் சந்தேகம் ஏற்படக்கூடியதாகத்தான் இருக்கிறது லட்சியம். நிலச்சீர்த்திருத்தம் கொண்டு வருவதன்முன் விவசாயிகளுக்கு நேரடியான ஒரு நிலைமையை ஏற்படுத்தியாகவேண்டும். கிராமாந்திரங்களிலே பார்த்தால் பலவிதக் கடன்தொல்லையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியானபடி இன்னும் நிவாரணம் அளிக்கப்படவில்லை. அந்த முறையிலே பார்த்தால் இது ஒரு நல்ல சட்டமாக இருக்குமென்று நம்பக்கூடியதாயில்லை. மாஜி முதல் மந்திரி போட்ட முடிச்சிலிருந்து, பொறுப்பிலிருந்து தப்பவே இந்த மந்திரி சபை பார்க்கிறது என்று சொல்லவேண்டும். அரசாங்கம் விவசாயிகள் விஷயத்தில் ஒரு திட்டவட்டமான முறையைக்கையாளவேண்டும். இன்றைக்கு கடன் கொடுப்பதை ஒரு வருஷம் இரண்டு வருஷம் என்று ஒத்திவைப்பதில் ஒருவிதமான லாபமும் கிடையாது. அவர்கள் மேலும் மேலும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இப்பொழுது கொண்டுவந்திருக்கும் மசோதாவைப்பார்த்தால் இது சட்டமாக்கப்படுவது கடன் கொடுத்தவர்களைப் பாதுகாக்கவா அல்லது கடன் வாங்கியவர்களைப்பாதுகாக்கவா என்று புரிந்துக்கொள்ளமுடியவில்லை.

(The Deputy Speaker in the Chair.)

" 1952-ம் வருஷம் கடன் வாங்கும்போது விலைவாசிகளின் நிலைமை ஒரு காலத்தில் மூன்று மடங்காக அதிகரித்தது, ஆனால் அதன் பின் 100 ரூபாயாக இருந்தது இன்றைக்கு 30 ரூபாய் அளவுக்கு இறங்கியிருக்கிறது. பணக்காரரிடமிருந்து கடன் வாங்கும்போது 150 ரூபாய் இருந்தது பொதி நெல்லின் விலை. அவர்கள் இன்றைக்கு கடனைத்திருப்பிக் கொடுக்கும்போது முன்பு வாங்கியதைவிட பணமதிப்பு உயர்ந்திருக்கிறது. பொருளுடைய மதிப்பு குறைந்துவிட்டது. ஆதலால் அவர்கள் கொடுக்கவேண்டியது இன்றைக்கு மூன்றில் ஒரு பங்காக குறைக்கப்படவேண்டும். நஞ்சை புஞ்சை பூராவும் மதிப்பு பெரும்பாலும் குறைந்திருக்கிறது. ஆதலால் இதையெல்லாம் அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு கடன் வாங்கியவர்கள் நஷ்டம் அடையாதபடி 1952-ல் இருந்ததற்கும் தற்போதுள்ள விலைவாசிகட்கும் தகுந்தபடி கடனைக் குறைத்து, கழித்துவிட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

" இதையெல்லாம் கருத்தில் கொண்டு சட்டத்தைத் திருத்தாவிட்டால் கடன் வாங்கியவர்கள் அழிந்துவிடுவர். அதனால் பெரும் பாதகத்தையும் குழப்பத்தையும் உண்டுபண்ணும் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

* **Sri N. K. PALANISAMY** :—" யானை குட்டி போடப்போகிறது, குட்டி போடப்போகிறது என்று மூன்று வருஷ காலமாகப் பார்த்து கடைசியில் யானை குட்டி போடாமல் அதற்கு பதிலாக லத்திதான் போட்டிருக்கிறது. விவசாயிகளும் குத்தகைக்காரர்களும் தங்களுடைய நிலங்கள் கடன் கொடுத்தவர்களுடைய கைக்குபோகக் கூடாது என்பதற்காக சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வரும் என்று எதிர் பார்த்து கடைசியில் ஏமாந்தார்கள். இது கடன் வாய்தா சட்டம் அல்ல. மாரடோரியம் அல்ல. கடன் கொடுத்தவன் தான் கொடுத்த கடனை ஒழுங்காக மூன்று தவணைகளில் வாங்குவதற்கு வசதி அளிக்கக்கூடிய ஒரு சட்டம் இது என்றுதான் சொல்ல முடியும். வருஷத்திற்கு 125 கோடி ரூபாய் வருமான வரியிலிருந்து வரக்கூடிய பணம் வராமல் போய்க்கொண்டிருக்கிறது என்று வருமான வரி கமிஷன் தன் ரிப்போர்ட்டிலேயே தெரிவித்திருக்கிறது. அதில் எட்டுகோடி ரூபாய்தான் வசூல் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ரூ. 125 கோடியைத்தவிர இன்னும் ஏராளமான பணம் வருமான வரி மூலமாக வரவேண்டியதாக இருக்கிறது அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக பிர்லாவைப்பற்றிகூட வங்காள சட்டசபையில் விளக்கம் தெரிவிக்கப்பட்டது. அவர் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இப்படி இருந்தும் எவ்வளவு பேர்களை சர்க்கார் கோர்ட்டில் இழுத்திருக்கிறார்கள்? எவ்வளவு பேர்களை தண்டித்து ஜெயிலில் போட்டிருக்கிறார்கள்? ஆனால்

விவசாயி விஷயத்தில் என்ன செய்திருக்கிறார்கள். வாங்கிய கடனை மூன்று தவணைகளில் கட்டியாக வேண்டும். அப்படி கட்டா விட்டால் விவசாயி களுடைய நிலம் எல்லாம் பரிமுதல் செய்யப்படும் என்ற தோரணையில் இருக்கிறது இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த சட்டம். அப்படி வருமான வரியை கட்டாமல் இருக்கிறவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது போல் விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கக்கூடாதா? ஒருவர் வரு மான வரி ஐந்து லட்சம் கட்டவேண்டியதாக இருந்தால் அவரிடம் போய் குறைந்தது இரண்டு லட்சமாவது தயவு செய்து கட்டச் சொல்லும்படி தங்க ளுடைய அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்தரவு போடுகிறார்கள். அவர் மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றுகூட அதிகாரி களிடத்தில் தெரிவிக்கிறார்கள். அப்படி ஒரு விவசாயி இந்த மாதிரி கொடுக்க முடியவில்லை என்று சொன்னால் அவனுக்கு பாதுகாப்பு அளிப்ப தற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. 10 அல்லது 5 என்று கட்டுகிறேன் என்று சொன்னாலும் அவனுக்கு பாதுகாப்பு அளிப்பதாக இல்லை. ஆனால் இப்பொழுது சோஷலிஸ்ட்டிக் முறையை அனுசரிக்கப்போவதாக தெரிய வருகிறது.

"இப்பொழுது உண்மையான நிலைமை என்ன? மூன்று வருஷ காலத்திற்கு ஒத்தி வைப்பு வேண்டும் என்று அவ்வளவு பேர்களும் மகாநாடுகள் நடத்தி, மந்திரிகள் உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறார்கள். அப்பொழுது ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டபோது நாலு மாதங்களுக்கு ஒத்தி வைத் தார்கள். கடன் வாங்கியதை இப்பொழுது கொடுக்க முடியாமல் இருப் பதற்கு இரண்டு காரணங்கள் இருப்பதைப் பார்க்க வேண்டும். தேசத்தி லுள்ள பகுதிகளை இரண்டு பகுதிகளாக பிரிக்க வேண்டும். ஒன்று மழை யில்லாமல் இருக்கக் கூடிய மதுரை, கோயம்பத்தூர் ஜில்லாக்களைப் போன்ற பிரதேசங்கள் ஒரு பகுதி, பாக்கி இருக்கும் பிரதேசங்களை மற்றொரு பகுதியாகவும் பிரித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் எல்லோரும் உண வுக்காக கடன் வாங்கி இருக்கிறார்கள். அவ்விதம் கடன் வாங்கி அவர்கள் தங்களுடைய குடும்பங்களை நடத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட குடும்பங் கள் மூன்று நான்கு மாதங்களில் ஒரு பகுதியாவது கட்ட வேண்டும் என்றிருந்தால் அதில் எவ்வளவு நியாயம் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பல மாநாடுகளில் என்ன தீர்மானம் செய்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். இம்மாதிரி இருக்கக்கூடிய அநியாயக் கடனையெல்லாம் ரத்து செய்ய வேண்டும் என்று தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான கடன்தான் விவசாயிகளுக்கு இருக்கும். ரூ. 15-க்குக் குறைவாக இருக்கும் கடனை எல்லாம் அதாவது மணி லெண்டரிடம் வாங்கியிருந்தால் அப்படிப்பட்ட கடனை ரத்து செய்ய வேண்டும். நில அடமான பாங்குகள் மூலமாக விவசாயிகள் கடன் வாங் கியிருந்தாலும் அவர்கள் ரூ. 15 கந்தாயம் கட்டுகிறவர்களாக இருந்தால் அவர்களுடைய கடனை எல்லாம் ரத்து செய்து விடவேண்டும். காரணம் இன்றைய விலைவாசிப்படி ஏக்கர் விலை ஆயிரத்தி ஐந்நூறு அல்லது இரண் டாயிரமாகத்தான் இருக்கும். அவர்களால் வாங்கிய கடனை கட்டவே முடி யாது. 6 பர்செண்ட் என்று கடன் வாங்கி வட்டி செலுத்தியபிறகும் அதே பணம் கடனாக காட்டப்பட்டால் அந்தக் கடனை ரத்து செய்து விடவேண்டும். அப்படி இல்லாமல் இந்த முறையில் சட்டம் கொண்டு வரக்கூடாது.

"இப்பொழுது சட்டத்தில் மூன்று தவணைகளில் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. ஒரு தவணை கூட கட்ட முடியவில்லை என்றால் அவனுடைய பூமி எல்லாவற்றையும் பரிமுதல் செய்யப்படும் என்று தோன்றுகிறது. உண்மையான கடன் வாங்கியிருக்கிறானா என்று பார்க்க வேண்டும். கணக் கில் மட்டும் கடனைக் காட்டியிருக்கலாம். கட்டப்பட்டிருக்கும் வட்டியையும் சர்க்கார் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பிர யோசனம் இல்லை. பணம் கொடுக்காமல் கடனை வாங்கி எழுதியிருக்கிறார் களா என்பதைப் பார்க்க ஒரு கமிட்டியை ஏற்படுத்தலாம். அதற்காக சர்க்கார் ஒரு பிரக்காவிற்கு ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதை கவனிக்கும் படிச் செய்யலாம். அந்தக் கமிட்டியில் அந்தத் தொகுதி ரிவினியூ இன்ஸ்

22nd February 1955] [Sri N. K. Palanisamy]

பெக்டரையும், சப்-ரிஜிஸ்தராரையும் சேர்த்துக் கொண்டு எது நியாயமான கடன் எது அநியாயமான கடன் என்பதை பரிசிலனைச் செய்யச் சொல்ல வேண்டும். கொடுத்த கடன் அநியாய கடன் என்று தெரிய வந்தால் அவனை கோர்ட்டுக்குத் துரத்தவேண்டும். இதற்கு சர்க்கார் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

" 1953-ம் வருஷத்திற்குப் பிறகு ஏற்பட்ட கடனெல்லாம் இதில் வருவதில்லை. சாதாரணமாக கிராமங்களில் பார்த்தால் பாண்டுகள் காலம் கழிந்து விட்டால் மறுபடியும் கண்டிப்பாக எழுதிக் கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் கண்டிப்பாக கோர்ட்டுக்குப் போவேன் என்று சொல்லி மிரட்டி புது பாண்டுகளை எழுதி வாங்கி இருப்பார்கள். 1940-க்கு பிறகு ஏற்பட்ட கடனையும் அப்படி மறுபடியும் எழுதி வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு விதிவிலக்கு கொடுக்கக் கூடாதா என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன்."

* SRI S. THINAKARASAMI THEVAR :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாகாணத்தின் ஜீவநாடிகளான விவசாயிகளின் நன்மைகளைக் குறித்து இந்த சர்க்கார் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவை நான் மிகவும் பாராட்டுகிறேன். இம்மாதிரி மசோதாக்கள் உண்மையிலேயே இந்த மாகாணத்தினுடைய விவசாயிகளை பலப்படுத்தும் முக்கிய அம்சங்களாகும். உண்மையிலேயே இந்த தேசத்திலுள்ள விவசாயிகளின் நிலையை உணர்ந்து அதற்கு வேண்டிய மசோதாக்களை இந்த சர்க்கார் கொண்டு வந்து அவைகளையும் நிறைவேற்றுகிறார்கள். அப்பொழுதுதான் இந்த தேசத்தின் உண்மையான சுபிட்சத்தின் அறிகுறியைக் காணமுடியும். அந்த அறிகுறி நம் மாகாணத்தில் இன்று ஏற்பட்டிருக்கிறது. அதிலும் முக்கியமாக விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதைப்பற்றியும் இந்த மசோதாவைப்பற்றியும் இந்த மாகாணத்திலுள்ள எல்லா விவசாயிகளும் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சட்டசபை இந்த சட்டத்தை எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்கள், என்ன சலுகைகளைக் கொடுக்கப் போகிறார்கள். விவசாயிகளுக்கு என்ன அனுகூலங்கள் வரப்போகின்றன, என்ன அனுகூலங்களை அடைய முடியும் என்பதைப் பற்றி எல்லா விவசாயிகளும் இதை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இந்த மசோதாவை நாம் நிறைவேற்றப் போகிறோம். உண்மையில் இந்த மசோதாவை பாராட்ட வேண்டியதுதான். ஆனால் இந்த மசோதாவைப் பொறுத்த அளவில் சர்க்கார் இன்னும் கொஞ்சம் தாராள மனப்பான்மையைக் காட்டலாம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஒரு உதாரணத்தைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

" என்னுடைய பகுதியில் ஒரு பெரிய விவசாயி இருக்கிறார். அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். இந்த விவசாயி ஒரு புராதனமான நேர்மையான விவசாயி. அவர் சுமார் 20 ஏர் வைத்து விவசாயம் செய்கிறார். அவர் உலக விவகாரங்களில் கவனம் செலுத்துவதில்லை. அரசியல் துறையில் என்ன நடக்கிறது என்பது பற்றியும் பத்திரிகையில் என்ன வருகிறது என்பது பற்றியும் அவருக்குத் தெரியாது. நாகரீக வாழ்க்கை என்ன என்பதும் அவருக்குத் தெரியாது. அதைப்பற்றியே அவர் கேட்டிருக்க மாட்டார். அவருடைய குடும்பம் பெரிய குடும்பம், ஆண் பெண்கள் உள்பட சுமார் 40 பேர்கள் இருப்பார்கள். அந்த 40 பேர்களும் சதாகாலமும் விவசாயத் தொழிலிலேயே விசேஷ கவனம் செலுத்துபவர்கள். விவசாயத்திலேயே அவர்கள் நாள் முழுவதும் உழைத்து வருகிறார்கள். உலகத்தைப் பற்றியே அவர்களுக்குக் கவலை இல்லை. தன்னுடைய தொழிலிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அவர்களுடைய சாதாரணமான உணவு கம்பம் கூழ்தான். அதைத் தான் அவர்கள் சாப்பிடுவார்கள். சாதாரண ஆடைதான் உடுத்திக் கொள்வார்கள் ஆடம்பர ஆடைகளை அவர்கள் கண்ணால்கூட பார்த்திருக்கமாட்டார்கள். தேர்தல் முதலிய விஷயங்களில் அவர்கள் ஈடுபடாமல் விவசாய தொழிலையே அவர்கள் நடத்தி வந்தார்கள்.

கடந்த பத்து வருஷ காலத்தில் இவர்கள் விவசாய முன்னேற்றத்திற்காக பல புதிய நிலங்களை அச்சுப்போட்டு சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள்.

12-30 p.m. "கிணறு வெட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் குடும்பத்தின் நிலைமை இன்றைக்கு என்ன ? கடந்த பத்து வருஷ காலத்திலே அவர்களுக்கு அதாவது அந்தக் குடும்பத்தார்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கடன் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் வீணாக செலவுகளை எதுவுமே செய்யாதவர்கள் என்றும் நான் முன்பே சொன்னேன். அப்படியிருந்தும் அவர்களுக்கு எப்படி 50 ஆயிரம் ரூபாய் கடன் ஏற்பட்டது என்று விசாரித்தபொழுது ஒரு உண்மை புலனாயிற்று. அதாவது அவர்களுடைய நிலங்கள் மானாவாரி பிரதேசத்தில் இருக்கிறது. நீர்ப்பாசன வசதியுள்ள பிரதேசத்தில் இல்லை. அந்த பிரதேசங்களில் பலவருஷகாலமாக நல்ல விலைச்சலே கிடையாது. அவற்றை சிர்திருத்தம் செய்ய கடன் வாங்கி பெரும் பாடு பட்டும் மழையில்லாது போய்விட்டதால் சாகுபடி எல்லாம் அடியோடு விரயமாகிவிட்டது. ஆகவே அந்தக் குடும்பம் மேலும் மேலும் கடன்படும்படி ஆகிவிட்டதே தவிர அவர்கள் கடனைதிரும்ப கட்டுவதற்கு ஏது எதுவும் ஏற்படவில்லை. அநியாயமாகக் கடனைவாங்கி பணத்தை துர்வினியோகம் செய்துவிடவில்லை. இப்படி கண்யமாக நேர்மையாக விவசாயம் தவிர வேறு எதுவுமே தெரியாமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிற விவசாயிகள் கூட இன்றைய தினம் விவசாயத்தில் நஷ்டப்பட்டு கஷ்டப்படும்படியான நிலைமையிலேயே இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதனைக் குறிப்பிட்டேன். ஆகவே அந்தக் குடும்பம் 150 ரூபாய்க்கு மேல் கிஸ்தி கட்டுகிறதென்று சொன்னாலும் கூட, இன்றைய தினம் இந்த மசோதாவினால் அந்த விவசாய குடும்பத்திற்கு எவ்வித மான பயனும் இல்லையென்றால் என்ன ஏற்படும் என்று பாருங்கள். அதற்காகவே இவ்விஷயத்தை நான் குறிப்பிட்டேன்."

"அடுத்தபடியாக அந்தப் பிரதேசங்களில் இன்றைய தினம் விவசாயப் பொருள்களின் விலைவாசி ஒரேயடியாக சரிந்து கொண்டிருக்கிறது. ஆகவே தான் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் ஒரு தவணை கொடுக்கவேண்டுமென்று சொல்வதற்குப் பதிலாக 6 மாதங்களுக்குள் முதல் தவணையைக் கொடுத்துவிடவேண்டுமென்று சொன்னால் விவசாயிகளுக்கு மிகவும் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். அதோடு பாக்கியிருக்கக்கூடிய கடனை மூன்று தவணைகளில் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கார் இதிலும் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு விவசாயிகளுக்கு நன்மை ஏற்படவேண்டுமென்ற கருத்தோடு கொஞ்சம் நடந்து கொண்டால் நலமாக இருக்குமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

"குறிப்பாக நீர்ப்பாசன வசதியுள்ள பிரதேசங்களுக்கு சர்க்கார் இப்பொழுது கொடுத்திருக்கும் சலுகை போதுமானதாக இருந்தாலும் மானாவாரிப் பிரதேசங்களைப் பொருத்த மட்டில் மூன்று வருஷங்களில் கொடுத்துவிட வேண்டுமென்பதற்கு ஐந்து வருஷத்தில் ஐந்து தவணைகளில் கொடுத்து விடலாமென்று சொன்னால் மிக நலமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

"கடைசியாக நான் கூறியவற்றையெல்லாம் கவனித்து விவசாயிகளுக்கு எப்படிச் செய்தால் நன்மை ஏற்படுமோ அப்படி எல்லா விஷயங்களிலும் கவனம் செலுத்திச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்."

12-34 p.m. *SRI K. R. VISWANATHAN :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்துள்ள கடனை திருப்பித் தர வசதி செய்யும் மசோதாவை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

"இந்த மசோதா, எப்படி முன்பு கடன் ஒத்திவைப்பு மசோதா சர்க்காரால் கொண்டுவரப்பட்டபொழுது எல்லோராலும் வரவேற்கப்பட்டதோ அதைப்போலவே, இதுவும் எல்லோராலும் ஒருமுகமாக வரவேற்கக் கூடியதாக இருக்கிறதென்பது என்னுடைய அபிப்பிராயம். இருந்தாலும்

22nd February 1955] [Sri K. R. Viswanathan]

கூட இதில் இன்னும் கடன் வாங்கியவர் தாராளமனப்பான்மையுடன் நன்மை அளிக்க கூடிய வகையில் சில திருத்தங்கள் செய்ய இடம் இருக்கிறது. அதைப்பற்றி மாத்திரம் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

"விவசாயிகள் தாங்கள் வாங்கியிருக்கும் கடனை நான்கு தவணைகளில் அதாவது முதல் தவணையில் மொத்தக்கடனில் எட்டில் ஒரு பகுதியோடு வட்டி முழுவதையும் அல்லது கடன் தொகை, வட்டி ஆகிய எல்லாவற்றிலும் நான்கில் ஒரு பகுதியையோ திருப்பித் தந்துவிடவேண்டுமென்றும், பாக்கியை மூன்று தவணைகளில் திருப்பித் தரவேண்டுமென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது மொத்த கடனை நான்கு தவணைகளில் திருப்பித் தரலாமென்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியினரால் அமைக்கப்பட்ட கூட்டுக்கமிட்டியில் 5 ஆண்டுகளில் திருப்பித் தரும்படியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்பதாகச் சொல்லப் பட்டிருந்தது. ஆனல் ஐந்தாண்டுத் தவணை என்பது எப்படி நான்காண்டுத் தவணையாக மாறியிருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஐந்தாண்டுத் தவணைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்பதே என் வேண்டுகோள். 1953-ம் ஆண்டு ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடேயே கடன் ஒத்தி வைப்பு மசோதாவை நாம் கொண்டு வந்தோம். அதனல் கடன் கொடுக்கிறவர்கள் என்ன ஆகுமோ என்று பயந்து மேலும் கடன் கொடுப்பதையே நிறுத்திக் கொண்டு விட்டார்கள். அதைப்போலவே கடன் வாங்கியவர்களும் சர்க்கார் ஒருக்கால் கடன் நிவாரணச் சட்டமே கொண்டுவந்தாலும் வரலாம் என்கின்ற எண்ணத்திலும் உண்மையிலேயே கொடுக்க வசதியில்லாமையாலும் கடனைக் கொடுக்காமல் இருந்தார்கள். ஆகவே இப்பொழுது வாங்கிய கடனைத் திருப்பித் தரவேண்டுமென்பதற்காக நாம் இந்த மசோதாவைக் கொண்டு வரும்பொழுது கடன் வாங்கியவர்கட்கும் கடன் கொடுத்தவர்கட்கும் எப்படியோ பகைமை, வேறுபாடு வளர்ந்திருக்கிறது என்பதை நினைவில் வைக்கவேண்டும். ரூ.100 கடன் பெற்றிருந்தால் ரூ. 200-க்கு பாண்டு எழுதிக் கொடுத்திருக்கிருர்கள். இதை பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். நூற்றுக்கு 99 பேர்களுக்குச் குறையாது இப்படித் தான் எழுதிக்கொடுத்துள்ளார்கள். ஆகவேதான் விவசாயிகளுடைய நன்மையில் அக்கறைகொண்டுள்ள சர்க்கார் அவர்கள் கடன் சுமையை உணராத வகையில் தவணைகளை கொஞ்ச அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக ஐந்து தவணைகளில் கட்டிவிடலாம் என்று செய்வதே நல்லதென்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். முதல் தடவை தவிர மூன்று தவணைகள் என்பதை ஐந்து தவணைகள் என்று திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக தங்களுக்குச் சேரவண்டிய பணத்திற்காகக் கடன் கொடுத்தவர்கள் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்தால் அதன்மூலமாக விவசாயிகளுக்கு மிகவும் அத்யாவசியமான பொருள்களின் மீது எந்த விதமான வழக்கும் எடுக்கக் கூடாதென்பது என் அபிப்பிராயம். முன்பு கோர்ட் நடவடிக்கை எடுக்கும்போது உழவுத் தொழில் செய்கின்றவர்களுடைய அத்யாவச்யமான சொத்துக்களின் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாதென்று சொல்லப்பட்டிருந்தது. அத்தகைய நிபந்தனை எதுவும் இந்தச் சட்டத்தில் இல்லை என்று நினைக்கிறேன். உதாரணமாக ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன். ஒருவருக்கு கால்காணி நிலம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அவரிடம் ஒரு ஜதை மாடு இருக்கலாம். அவர் ஒருவரிடத்தில் 200 ரூபாய் கடன் வாங்கியிருக்கிருர் என்றுல் கடன் கொடுத்தவர் இவர் பேரில் கோர்ட் நடவடிக்கை எடுத்து அந்த ஒரு ஜோடி மாடுகளை ஏலத்தில் கொண்டு வந்துவிடமுடியும். அல்லது அந்தக் கால் காணி நிலத்தை ஏலத்திற்குக் கொண்டு வந்துவிடமுடியும். இது இரண்டும் விவசாயிகளுக்கும் மிகவும் அத்யாவசியமானவையாதலால் இம்மாதிரி நடவடிக்கை எடுக்காமலிருக்கும்படி இந்தச் சட்டத்திலேயே ஒரு நிபந்தனை போடுவது மிகவும் நல்லதாகும். குறைந்த பட்சம் ஒரு விவசாயியின் அத்யாவசியமான பொருள்களின் மீது கடனுக்காக எந்த விதமான நட

வடிக்கையும் எடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டால் அதனுல் நன்மை ஏற்படும் என்று சொல்லிச் கொண்டு இந்த மசோதாவை வரவேற்கி றேன்.''

12–40 p.m. SRI M. PALANIYANDI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இம்மசோதாவைக் கடன் தவணை கொடுக்கும் மசோதா என்றுதான் சொல்ல முடியும். சென்ற ஆண்டில் கொண்டுவந்த கடன் ஒத்திவைப்பு மசோதாவும், இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் தவணை களில் கடனைத் திருப்பிக்கொடுப்பதற்கான மசோதாவும் விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக என்று சொன்ன போதிலுங்கூட உண்மையிலேயே விவசாயிகள் நல்ல நிலைமைக்கு வரவில்லை.

" கடன் ஒத்திவைப்பு மசோதா சென்ற ஆண்டு கொண்டுவரப்பட்ட போது சில காரணங்கள் சொல்லப்பட்டது. "ஐந்தாறு ஆண்டுகளாக மழை இல்லாமல் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. விவசாயிகள் மிகவும் பாதிக் கப்பட்டிருந்தார்கள். சென்ற ஆண்டு மழை பெய்ததால் ஒரு அளவுக்கு விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. கடன் கொடுத்த லேவாதேவிக்காரர்கள் விவ சாயிகளின் குரல்வளையைப் பிடிக்கிருர்கள்'' என்றெல்லாம் சொல்லப்பட் டது வாஸ்தவந்தான்.

" ஆனுல், இப்பொழுது இம்மசோதாவைக் கொண்டு வரும் காலத்தில் மழை பெய்து ஓரளவில் விவசாயம் நடந்து வந்தாலுங்கூட விலை வாசி கீழே இறங்கிக்கொண்டிருக்கிறது. கடனின் எட்டிலொரு பகுதியும், பூரா வட்டியும் இச்சட்டம் அமுலுக்கு வந்து நான்கு மாதங்களுக்குள் கட்டி விட்டு பாக்கியை மூன்று வருஷத் தவணைகளில் கட்டவேண்டுமென்ருல் அது விவசாயிகளுக்கு மிகவும் தொல்லை கொடுக்கக்கூடிய விஷயமாகும்.

" எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத் தினர்களும் இம்மசோதாவை ஆதரித்தார்கள். காங்கிரஸ் கட்சியினர் இதை முதலில் ஆதரித்து அதற்குப் பிறகு 'ஆனுல்' என்று சேர்த்து தங்களுடைய குறைகளை அழகாக எடுத்துக் கூறியிருக்கிருர்கள். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் இம்மசோதாவை பொதுவாக வரவேற்ருலும், அவர்களும் விவசாயிகளுடைய நிலைமையைப் பார்த்திருப்பதினுல் அவர் களுடைய குறைகளை எடுத்துக் கூறுகிருர்களே தவிர வேறென்றுமில்லை. அவர்கள் சொல்லுவதையும் நன்ருகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

" கடன்பட்டவர்களுக்கு வேண்டிய வசதியை ஜில்லா முன்சீப் கூட அளிக்கமுடியும். அதாவது 4 அல்லது 5 வருஷத் தவணைகளில் கடன் பட்டவர்கள் கடனைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேம் என்று சொன்னுல், ஜில்லா முன்சீப் அனுமதியளிக்கிருர்கள். விவசாயிகளுக்கு ஏற்கெனவேயே சலுகைகள் இருப்பதைப் பார்த்தால், இச்சட்டம் முற்போக்கானது என்று சொல்ல முடியாது. ஆகவே, மூன்று வருஷங்களில் கடனைத் திருப்பித் தரவேண்டுமென்றிருப்பதற்குப் பதிலாக இன்னும் சில ஆண்டு களுக்கு நீடித்து கடனைப் பல தவணைகளில் திருப்பிக் கொடுக்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

" நாடு விடுதலை அடைந்து எழு ஆண்டுகளாகிவிட்டன. இன்னும் விவசாயிகளுடைய நிலைமை உயர்ந்தபாடில்லை. சென்ற பல வருஷங் களில் மழையின்மை, அப்பொழுது ஏற்பட்டிருக்கும் கடன் தொல்லை ஆகியவற்றையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து விவசாயிகளுக்குவேண் டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. இம் மாதிரி சிறு சிறு சட்டங்களினுல் நிச்சயமாக விளைச்சலைப் பெருக்கமுடியாது, விவசாயிகளுடைய வாழ்வும் முன்னேற முடியாது.

" கடன் ஒத்திவைப்புச் சட்டம் அமுலுக்கு வந்திருந்த ஒரு ஆண்டுக்குப் பிறகும் விவசாயிகள் பொருளாதாரத்தில் முன்னேறவில்லை. அதற்குக் காரணம் விவசாயப் பொருள்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது தான். விலைவாசிகளின் வீழ்ச்சி, கடன் தொல்லை ஆகியவைகள் சேர்ந்து விவசாயிகள் பல தொல்லைகளுக்கு உள்ளாகியிருக்கிருர்கள். அரசாங்கம்

உடனடியாகச் செய்யவேண்டுவதென்னவென்றால், விவசாயிகளுடைய கடன் நிலைமையை ஆராய்ந்து, அநியாயமாக எழுதி வாங்கப்பட்டிருக்கும் கடன்கள் தள்ளுபடி செய்யப்படவேண்டும். விவசாயிகள் எப்படிக் கடன் பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி ஆட்சேபணைக் குறிப்புகளில் கண்டிருக்கிறது. ரூ. 100 கடன் வாங்கியிருந்தால் ரூ. 200-க்கு பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். கடன் கொடுத்த எல்லோருமே கடன்பட்டவர்களைக் கசக்கிப் பிழிகிறார்கள் என்று நான் சொல்ல முன் வரவில்லை. அநியாயமாக அதிகப் பணத்திற்குப் பத்திரத்தை எழுதி வாங்கிக்கொண்டிருந்தவர்கள், கொஞ்சங் கொஞ்சமாக கடன் பட்டவர்களின் நிலத்தைக் கூட எடுத்துக்கொள்வதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். கடனும் வட்டியும் சேர்ந்து தொகை பெருகியிருப்பதன் காரணமாக, விவசாயிகள் கடனைத் திருப்பித் கொடுக்க சக்தியில்லாமல் தன்னுடைய சொத்தையே இழந்துவிடக்கூடிய நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள்.

"கடன் ஒத்திவைப்புச் சட்டம் எப்பொழுது முடியும் என்று கடன் கொடுத்தவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டம் வந்த பிறகு கூட கடன் கொடுத்தவர்கள் 100-க்கு 200 என்றும், ஐநூறுக்கு ஆயிரம் என்றும் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டுதான் கடன் கொடுக்கிறார்கள். இந்த விஷயங்களையெல்லாம் சர்க்கார் மனதில் வைத்துக்கொண்டு, விவசாயிகள் அநியாயமான முறையில் கடன் பட்டிருக்கும் தொகையைக் குறைப்பதற்கு நல்லதொரு இயந்திரத்தை சர்க்கார் அமைக்கவேண்டும். அதற்காக ஒரு கமிட்டியை அமைத்து அங்கத்தினர்கள் இங்கு சொல்லக் கூடியவைகளை யெல்லாம் நன்கு பரிசீலனை செய்யவேண்டும். ஏதோ தவணைகளில் கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் என்று சொல்வதுமட்டும் போதாது. விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு சர்க்கார் முன் வரவேண்டும். கடனை ஒத்திவைப்பதினாலும், அல்லது சில தவணைகளில் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று சொல்வதினாலும் விவசாயிகளுக்கு அதிக நன்மை கிடைத்துவிடாது. விவசாயிகளுக்கு கடன வசதி செய்து தரவேண்டியது அவசியம். விவசாயம் செய்யக்கூடிய காலங்களில் அவர்களுக்கு 100, 200 ரூபாய் கடன் கிடைப்பதற்கு சர்க்கார் வழி செய்தால்தான் விவசாயிகளுக்கு உண்மையாகவே நன்மை அளிப்பதாக இருக்குமேயொழிய, இம்மாதிரி கடனைப் பல தவணைகளில் திருப்பிக் கொடுக்க அனுமதிப்பதால் அதிக நன்மை கிடைக்காது.

"ஆகையால், அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்றால் விவசாயிகள் அநியாயமாக எழுதிக்கொடுத்திருக்கும் கடன்கள் ஒரு கமிட்டியினரால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, அநியாயக் கடன்கள் நீக்கப்படவேண்டும். விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து தரப்படவேண்டும். முக்கியமாக காடாரம்பப் பகுதிகளில் விவசாயிகள் மிகவும் தொல்லைப்படுகிறார்கள். இதைப் பற்றி காடாரம்பப் பகுதிகளிலிருந்து வந்திருக்கும் அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மழை பெய்திருந்தாலுங்கூட அங்கு விளைச்சல் பெருகாமலிருப்பதற்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும். இம்மசோதாவை நான் ஆதரித்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்."

* **SRI N. MOUNAGURUSAMI NAIDU** :—"கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இம்மசோதாவை நான் வரவேற்கிறேன். இம்மசோதாவைப் பரிசீலிக்கும்முன் இதன் அடிப்படையான நோக்கமென்னவென்பதை நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. இச்சட்டம் விவசாயிகளுக்கு கடன் சம்பந்தமாக பூர்த்தியான நிரந்தரமான நிவாரணம் அளிக்கும் முறையில் கொண்டுவரப்படவில்லை. ஏழை விவசாயிகள் தாங்கள் பட்ட கடனை எளிய தவணைகளில் மூன்று வருஷ காலத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று அவர்களுக்குத் தாற்காலிகமாக ஒரு சௌகரியத்தைச் செய்து கொடுத்திருக்கிறது. மூன்று வருஷ காலத்திற்குள் அவர்கள் பேரில் கடன் கொடுத்தவர்கள் கோர்ட்டு நடவடிக்கை தொடராமல் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதே இந்தச் சட்டத்தின் அடிப்படையான நோக்கம். ஆகவே, கொஞ்சம் சௌகரியமாக இருக்கும் விவ 12-48 p.m.

சாயிகள் சம்பந்தமாக இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, லேவாதேவி சம்பந்தமாக சர்க்கார் சட்டங்கள் கொண்டு வரும்போது மிக ஜாக்கிருதையாக இருக்கவேண்டும். நாணயம், நம்பிக்கை இவைகளின் அடிப்படையில் லேவாதேவி ஏற்படுகிறது. கடன் கொடுப்பவனுக்கு, தான் கொடுக்கும் கடன் திரும்பி வரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் தான் கடன் கொடுப்பான். இந்த நம்பிக்கையை பாதிக்கு மாறு நாம் எந்த விதமான சட்டமும் கொண்டுவரக்கூடாது.

“1937-ம் வருஷத்தில் கொண்டுவரப்பட்ட கடன் நிவாரண சட்டம் ஓரளவு விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தபோதிலும்கூட, லேவாதேவியைப் பெரிய அளவுக்கு பாதித்தது. கடன் கொடுப்பவர்களில் மனதில் ஒரு பயம் ஏற்பட்டு, கொடுக்கல் வாங்கல் பெரிய அளவுக்கு நின்றுவிட்டது. முன்பு யோக்கியத்தின் பேரில் கடன் கொடுத்தவர்கள் கிட்டத்தட்ட 30 வருஷங்களில் சட்டப்படி அவர்களுடைய கடன் தீர்ந்து போகும் என்று பயந்துகொண்டு கிரயம் எழுதி வைத்தால் தான் கடன் கொடுப்போம் என்று ஆரம்பித்து அம்மாதிரி நடந்து வருகிறது.

“வட்டி குறைக்கப்பட்டதினால் கடன் கொடுத்தவர்கள் ரூ. 50-க்கு ரூ. 100 ஆக ப்ரோநோட் எழுதி வாங்கிக்கொண்டு கடன் கொடுக்கிறார்கள். ஏழை விவசாயிகள் தங்களுடைய விவசாயச் செலவுகளுக்கு அத்தியாவசியமாக கடன்கள் வாங்கித்தான் ஆகவேண்டும். அவர்களுக்கு பாங்கிகளில் கடன் கிடைப்பதில்லை. கூட்டுறவு சங்கங்கள் கொடுக்கும் கடன்கள் போதிய அளவுக்கு அவர்களுக்கு உதவியாக இல்லை. ஆகையால், கிராமங்களில் பணக்காரர்களிடம் அவர்கள் கடன் வாங்கித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அந்த நிலைமையில் நாம் ஏற்படுத்தும் சட்டங்களினால் அவர்களுக்குப் ஓரளவு நன்மை விளையாவிட்டாலும்கூட அதிக அளவுக்கு பாதகம்தான் ஏற்பட்டு வருகிறதென்பதை நாம் கவனிக்கவேண்டும்.

“1953-ம் வருஷத்தில் விவசாயக் கடன் சம்பந்தமாக சட்டம் கொண்டு வந்தபோது அந்தப் பயம் மேலும் அதிகரித்தது. தற்போது கிராமங்களில் விவசாயிகளுக்குக் கடன்கள் கிடைப்பதே ரொம்ப கஷ்டமாகப் போய் விட்டது. அதுவும் தற்சமயத்தில் விலைவாசிகள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு போகும்போது ஏழை விவசாயிகளுக்குத் தங்களுடைய விவசாயத்தின் சம்பந்தமாக ஏற்படும் செலவுகளுக்கு கொஞ்ச நஞ்சமும் கடன் கிடைப்பது மிகவும் கஷ்டமாகி வருகிறது.

“சாசுவதமாக நாம் ஏதாவது விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால் ரிசர்வ் பாங்கு மூலமாகவோ அல்லது சர்க்காருடைய நிதியிலிருந்தோ ஏராளமான பணத்தைக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்து, அந்த சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்கு எளிய வட்டியில் தங்களுடைய தேவைக்கு அளவான தொகை கிடைக்கும்படி ஏற்பாடு செய்தால்தான் நாம் அவர்களுக்கு நிவாரணம் அளித்ததாக ஏற்படுமே யொழிய, இம்மாதிரி சட்டங்களினால் அவர்களுக்கு நாம் நிரந்தரமான பலன் எதுவும் அளிக்க முடியாது. ஆகையால், இந்த வகையில் சர்க்கார் மேற்கொண்டு கவனம் செலுத்தி ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகின்றேன். எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்து பேச அனுமதித்த உதவி சபா நாயகருக்கு என்னுடைய வந்தனத்தை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.”

12-50 p.m. * DR. K. B. MENON :—“ Mr. Deputy Speaker, I rise to invite the attention of the Government once again to a few hardships in the Bill which have been pointed out to me in the repeated representations I have been receiving from the small debtors. I wish to invite the attention of the Government to the following points, namely, the instalment payments, the time of the payments and the manner in which the payments are to be made.

22nd February 1955] [Dr. K. B. Menon]

" The Bill has certainly come out more chastened from the Select Committee. The provision made in the Select Committee that the debtor may be permitted to pay either interest plus $\frac{1}{8}$th of the principal amount or one-fourth of the total amount outstanding whichever is less is certainly a welcome improvement. But even that may bear hard upon the small debtor who has no assets to his credit at all. The hardship is made greater by the time of payment suggested in the Bill. The period of three months has been extended by another month. Payments from the debtors will be due on the 1st of July and speaking particularly from the point of view of Malabar, that will be the time when the debtor will have no grains in the granary nor will he have any bank balance left on hand. The hardships will be very great. The period will have to be extended. From the point of the whole State, perhaps, the end of the year may be most convenient. I hope the Government will consider the question of extending the time till after October if it is possible. Another point is the manner of payment. I suggest payments in kind. In a steep falling market, it is very difficult for the debtor to pay in cash unless some adjustment is made on the price-index basis. Perhaps, that such payments in kind may be allowed by courts is possible. But if cases for repayment of these debts are taken to the court it will mean an additional burden on the debtor and in order to avoid that, a provision, if made, will be more convenient.

" Another point to which I would like to invite the attention of the Government is with reference to clauses 3 and 4 dealing with rateable distribution of the proceeds among the decree-holders. It is a technical legal point which also requires serious attention and which, I hope, the Government will pay to the matter.

" Before I close, I would like to make one more submission because I may not have another opportunity to speak on the Bill. I realise that this is a temporary measure. This measure is primarily intended to render some relief to the small debtor. The credit problem is a very serious problem and I hope that the Government just as they have appointed a committee for Education should appoint a committee for going into the credit problem and circulate a questionnaire and allow an opportunity for the Members of this House to express their opinion as well as give an opportunity to the public to say what they have got to say about the credit problem. The credit problem is a very very serious one and that seriousness has been brought to the notice of the Government by the Gorewalla Committee Report. I hope the Government will give an opportunity to the public and the Members of this House to express their opinion on the subject and effect such changes as the situation demands."

* **SRI T. C. NARAYANAN NAMBIAR** :—" മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, 12.55
സർ, നാട്ടിൽ നടക്കുന്ന യാഥാർത്ഥ്യങ്ങളെ തീരെ അവഗണിച്ചുകൊണ്ടാണ് ഗവണ്മെണ്ട് p.m.
ഈ ബില്ല് അവതരിപ്പിച്ചിട്ടുള്ളത്. അതു വളരെ പ്രതിഷേധാർഹമാണെന്നു പറയാതെ
തരമില്ല. സെലക്ട് കമ്മിററിയിൽവച്ചു ഈ ബില്ലിന്റെ മിക്ക വകുപ്പുകൾക്കും ഞങ്ങൾ

വളരെ കാര്യക്ഷമവും നീതിപൂർവ്വകവുമായ ഭേദഗതികൾ അവതരിപ്പിക്കുകയുണ്ടായി. എന്നാൽ ദൌർഭാഗ്യമെന്നു പറയട്ടെ, മുൻകൂട്ടി തീർച്ചപ്പെടുത്തി വന്നിട്ടുള്ളപോലെ ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിമാർ വളരെ ന്യായമായ ഭേദഗതികൾപോലും സ്വീകരിക്കാനുള്ള ഒരു മനോഭാവം പ്രദർശിപ്പിച്ചില്ല. ശക്തിയായി പ്രതിഷേധിക്കേണ്ട ഒരു നിലപാടാണ് മന്ത്രിമാർ കൈക്കൊണ്ടതു്. സെലക്ട് കമ്മിററിയംഗങ്ങളിൽപ്പെട്ട ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ശ്രീ ബാലസുബ്രഹ്മണ്യയ്യർ പറഞ്ഞിട്ടുള്ളതുപോലെ താല്ക്കാലികമായി കടം തിരിച്ചടയ്ക്കൽ നിറുത്തിവെച്ചുകൊണ്ടുള്ള പഴയ നിയമത്തിൻെറ ദൂഷ്യഫലങ്ങളെ ഈ ബിൽ കുറച്ചെങ്കിലും കഴിവാക്കുന്നുവെന്നതാണ് ഗവമ്മേണ്ടിൻേറയും ആശ്വാസം. ഈ ബില്ല് കൂടുതൽ മെച്ചമായ ഒരു നിയമമാണെന്ന അഭിപ്രായം ഗവമ്മേണ്ടിന്നുണ്ടു്. കാരണം, അതു സ്ഥാപിതതാല്പയ്യത്തെ സഹായിക്കുന്നു. എന്നാൽ കൃഷിക്കാരെ ഈ ബില്ല് എങ്ങനെ ബാധിക്കുന്നുവെന്ന് ആലോചിക്കുമ്പോൾ ഈ ബില്ലിനെ ഒരു തരത്തിലും ഒരു നല്ല ബില്ലാണെന്നു പറയാൻ വഴികാണുന്നില്ല. ഗവമ്മേണ്ടിനെ ചുററിപ്പററി നില്ക്കുന്ന ഉണ്ടികക്കച്ചവടക്കാക്കും പിന്തിരിപ്പൻ ജന്മിമാക്കും ആശ്വാസം നൽകുന്ന ഒരു ബില്ലാണിതെന്നു പറയുകയായിരിക്കും ശരി. ഈ ജൂലായി 1-ാംതിയ്യതി മുതൽ നമ്മുടെ നാട്ടിലുള്ള കോടതികളെല്ലാം കേസ്സുകൾകൊണ്ടു നിറയുവാൻ പോവുകയാണ്. ജൂലായി 1-ാംതിയ്യതിക്കു എത്രയായിരം കേസ്സുകളാണ് ഈ രാജ്യത്തെ കോടതികളിൽ ഫയലാക്കാൻ പോകുന്നതെന്നു എനിക്കു പറയാൻ സാദ്ധ്യമല്ല. ആകെയുള്ള കടത്തിൻെറ മുതലും പലിശയും ചേർത്തു കണക്കാക്കി അതിൻെറ നാലിലൊരു ഭാഗം, അല്ലെങ്കിൽ ഇതുവരെയുള്ള പലിശയും മുതലിൻെറ എട്ടിലൊന്നും നാലുമാസത്തിനകം കൊടുക്കണം എന്നൊരു സുഗ്രീവാജ്ഞ കൊടുത്തിരിക്കയാണ്. എവിടെനിന്നു കൃഷിക്കാരൻ ഈ പണമുണ്ടാക്കും എന്നാണ് ഞാൻ ചോദിക്കുന്നതു്. ഡോക്ടർ ബി. വി. നാരായണസ്വാമി നായിഡു ഈ രാജ്യത്തിലെ കാർഷിക കടങ്ങളെ സംബന്ധിച്ചു വിപുലവും കാര്യക്ഷമവുമായ ഒരന്വേഷണം നടത്തി ഗവമ്മേണ്ടിലേക്കു ഒരു റിപ്പോർട്ട് സമർപ്പിച്ചിട്ടുണ്ടു്. അദ്ദേഹം റൂറൽ ക്രെഡിററിനെ സംബന്ധിച്ച ആ റിപ്പോർട്ടിൽ ഇങ്ങനെ പറയുന്നു—

'The majority of agriculturists are leading a hand to mouth existence without any financial reserve. For every little operation in cultivation, the ryot stands in need of credit. The central figure in the agricultural credit mechanism is still the private money-lender who may be a sowcar, a grain merchant or an affluent big ryot. The system of money-lending is the same whether the creditor is a non-agriculturist or a land-holder. In the post-depression year, the money-lenders came in for a great deal of criticism. They were accused of charging usurious rates of interest, keeping accounts in a fraudulent manner and of machinations to drive the debtor to the wall. Whether these charges were applicable to all the money-lenders or not, legislation was invoked to protect the indebted agriculturist from exorbitant rates of interest and extortion. The outcome of such legislative activity was the fixation of a maximum rate of interest and scaling down of debts according to certain fixed principles. These measures have led to the contraction of credit and/or evasion of law.'

"സർ, നാലു മാസത്തിന്നുള്ളിൽ ഋണബാധിതരായ കൃഷിക്കാർക്കു 40 കോടിയോളം ഉറുപ്പിക ഉണ്ടാക്കുവാൻ കഴിയുമെന്നു ധരിക്കുന്നവരുടെ രോഗം ഭയങ്കരമാണ്. 1939-ാലെ പലിശ ചുരുക്കിക്കൊണ്ടുള്ള നിയമത്തേക്കാൾ മോശമാണ് ഈ നിയമമെന്നു പറയാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. നൂറുറുപ്പിക കടം ആവശ്യപ്പെട്ടാൽ 50 ക. മുൻകൂറായിത്തന്നെ പലിശ കണക്കാക്കി കൈയിലടുത്തുംകൊണ്ടു് 50 ക. മാത്രംകൊടുത്തു 100 ക.ക്കു പ്രമാണം എഴുതി വാങ്ങുകയെന്നുള്ളതു് നാട്ടിൻപുറങ്ങളിലെല്ലാം നടപ്പുള്ള ഒരു പതിവാണ്. അതിന്നും പുറമെ ആ കടത്തിന്നുവേണ്ടി കൃഷിക്കാരൻ തൻെറ സകല സ്വത്തുക്കളും ജാമ്യമായി എഴുതിവച്ചിട്ടുണ്ടാകും. ഇതു് പറയുമ്പോൾ പക്ഷെ ചോദിച്ചേക്കും ഈ അക്രമമായ വ്യവസ്ഥകൾക്കെല്ലാം വഴിപ്പെട്ട കൃഷിക്കാരൻ എന്തിനു കടം വാങ്ങിച്ചുവെന്നു്. ജീവിക്കാൻ നിവൃത്തിയില്ലാതെ, കൃഷിചെയ്യാൻ മാർഗ്ഗമില്ലാതെ, പാട്ടം കൊടുക്കാൻ നിവൃത്തിയില്ലാതെ, നികുതികെട്ടാൻ മാർഗ്ഗമില്ലാതെ മുട്ടിയുഴലുന്ന കൃഷിക്കാരൻ എന്തിനു കടം വാങ്ങുന്നുവെന്നു ചോദിക്കുകയാണെങ്കിൽ കടം വാങ്ങുന്ന കൃഷിക്കാരല്ല, അവരോടു എന്തിനു വാങ്ങുന്നുവെന്നു ചോദിക്കുന്ന ഗവമ്മേണ്ടാണ് തെററു് ചെയ്യുന്നതെന്നു ഞാൻ പറയും. ഈ നിയമം കൃഷിക്കാക്കു ദോഷമേ ചെയ്യുകയുള്ളുവെന്നാണ് ഞാൻ കാണുന്നതു്. ഡോക്ടർ നാരായണസ്വാമി നായിഡുവിൻെറ റിപ്പോർട്ടിൽ ഇന്നത്തെ മദിരാശി സംസ്ഥാനത്തിന്നുമാത്രമായിട്ടുള്ള കണക്കുകൾകൊടുത്തിട്ടില്ലെങ്കിലും അതിൽനിന്നു നമുക്കു ഉദ്ദേശമായിട്ടു കണക്കാക്കാൻ സാധിക്കും. ആന്ധ്ര കൂടെ ഉൾപ്പെടുത്തിയിട്ടുള്ള കണക്കുകളാണ് ഇതിൽ

കൊടുത്തിട്ടുള്ളതു്. ആന്ധ്ര ഒഴിച്ചാൽ ബാക്കിയുള്ള മദിരാശി സംസ്ഥാനത്തു മാത്രം 150 കോടി ഉറുപ്പിക കടമുണ്ടായിരുന്നുവെന്നു കണക്കാക്കാം. അന്നത്തേതിൽനിന്നു് ആ സംഖ്യ ഇന്നു എത്രയോ വർദ്ധിച്ചിട്ടുണ്ടാകും. തല്ക്കാലം ആ 150 കോടി മാത്രമേ ഇപ്പോഴും കടമുള്ളുവെന്നു സങ്കല്പിക്കുക. എന്നാൽതന്നെയും ഈ ജൂലായി മാസത്തിനകം കൃഷിക്കാർ 35–40 കോടി ഉറുപ്പിക ഉണ്ടാക്കേണ്ടിയിരിക്കുന്നു. ഞാൻ വളരെ ഗൌരവമായി ചോദിക്കുന്നു ഇവിടത്തെ ഏതെങ്കിലും മന്ത്രിപുരന്ധ്രൻ ഇതു സാദ്ധ്യമാണെന്നു കരുതുന്നുണ്ടോ എന്നു്. ഒരു തരത്തിലും സാദ്ധ്യമല്ല. അപ്പോൾ പിന്നെ എന്തായിരിക്കും ഈ ബില്ലിൻെറ ഫലം? ഇന്നു കൃഷിക്കാരൻെറ കൈയിൽ ശേഷിച്ചിട്ടുള്ള സ്വത്തുക്കൾ കൂടി കടക്കാർ വിററുകൊണ്ടുപോവുകയായിരിക്കും ഫലം. കൃഷിക്കാരനെ സംബന്ധിച്ചിടത്തോളം ഭയങ്കരമായ ഒരു പ്രശ്നമാണു് ഈ ബില്ലു് സൃഷ്ടിക്കുന്നതു്. അവൻെറ കുഴപ്പം വർദ്ധിക്കാൻ പോവുകയാണു്. അവൻെറ ദുരിതം പതിന്മടങ്ങു് വർദ്ധിക്കാൻ പോവുകയാണു്. കൃഷിക്കാരൻെറ സൈ്വരജീവിതം നശിപ്പിക്കാനുതകുന്ന ഒരു ബില്ലാണിതു്. കൃഷിക്കാരൻെറ സർവ്വ സ്വത്തുക്കളേയും നിഹനിക്കുവാനുള്ള ഒരു ബില്ലാണിതു്. ഈ രാജ്യത്തെ കുത്തകമുതലാളിമാരുടേയും ജന്മിമാരുടേയും കൈക്കു ശക്തി കൂട്ടുവാനുള്ള ഒരു ബില്ലാണിതു്. അതുകൊണ്ടാണു് വളരെ കാര്യക്ഷമമായ പല ഭേദഗതികളും ഈ ബില്ലിൽ വരുത്തിയേ തീരുവെന്നു് ഞങ്ങൾ പറയുന്നതു്. പല ഭേദഗതികളും ഞങ്ങൾ അവതരിപ്പിക്കാൻ പോകുന്നുണ്ടു്.

"സർ, ഇന്നു ഈ സഭയിൽ സംസാരിച്ച ബഹുമാനപ്പെട്ട മെമ്പർമാരിൽ ഭൂരിഭാഗവും, പ്രത്യേകിച്ചും കോൺഗ്രസ്സ് കക്ഷിയിൽപ്പെട്ട ശ്രീ ആറുമുഖം, ശ്രീ സാംബശിവം തുടങ്ങിയുള്ളവർ മൂന്നു തവണയായിട്ടു കടമെല്ലാം അടച്ചുതീർക്കണമെന്നുള്ള വ്യവസ്ഥ ഒരു തരത്തിലും ഒരു ആനുകൂല്യമല്ലെന്നും അതു നീട്ടിവയ്ക്കേണ്ടതാണെന്നും, ചുരുങ്ങിയതു എട്ടു തവണയെങ്കിലും ആക്കണമെന്നും അഭിപ്രായപ്പെട്ടിട്ടുണ്ടു്. ഇതെല്ലാം തെളിയിക്കുന്നതെന്താണെന്നുവച്ചാൽ ഈ രാജ്യത്തെ കൃഷിക്കാർക്കു എന്തെങ്കിലും ഗുണം ചെയ്യണമെന്നു ആഗ്രഹമുള്ളവരാരും ഈ ബില്ലുകൊണ്ടു തൃപ്തിപ്പെടുന്നില്ലായെന്നാണു്. ഗവമ്മേണ്ടിന്നു ആ ആഗ്രഹമുള്ളപക്ഷം ഞങ്ങൾ ഹാജരാക്കിയിട്ടുള്ള ഭേദഗതികൾ സ്വീകരിക്കേണ്ടതാണു്. ഈ രാജ്യത്തിലെ കാർഷികക്കുഴപ്പം പരിഹരിക്കാൻ ഗവമ്മേണ്ടിന്നു താല്പര്യമുണ്ടോ, ആഗ്രഹമുണ്ടോ എന്നതിനെ ആശ്രയിച്ചിരിക്കും ഗവമ്മേണ്ടു് ആ ഭേദഗതികൾ സ്വീകരിക്കുന്നതും സ്വീകരിക്കാതിരിക്കുന്നതും. 1 p.m.

"പാട്ടബാക്കികളെ റദ്ദു് ചെയ്യുന്നതിന്നുള്ള യാതൊരു വ്യവസ്ഥയും ഈ ബില്ലിൽ ഉൾക്കൊള്ളിച്ചിട്ടില്ല. അതു് വളരെ വേദനാജനകമായിട്ടുള്ള ഒരു കാര്യമാണു്. വളരെ ആശ്ചര്യകരമായിട്ടുള്ള ഒരു വസ്തുതയുമാണു്. കൃഷിക്കാരന്നു എന്തുകൊണ്ടാണു് ഇങ്ങനെ കടം വർദ്ധിച്ചിട്ടുള്ളതു്? കഴിഞ്ഞ 12 കൊല്ലംകൊണ്ടു് ഒരു കൃഷിക്കാരൻ ആയിരം പറ നെല്ലു് പാട്ടംകൊടുക്കാനുണ്ടായിരുന്നുവെന്നു വക്കുക. അഞ്ഞൂറു് പറ നെല്ലേ അവന്നു കൊടുക്കാൻ കഴിഞ്ഞിട്ടുള്ളു. അഞ്ഞൂറു് പറ ബാക്കിയാണു്. എന്തുകൊണ്ടാണു് ഇങ്ങനെ ബാക്കി വന്നിട്ടുള്ളതു്? കൃഷിക്കാരൻെറ ഉപേക്ഷകൊണ്ടല്ല. കൊടുക്കേണ്ട എന്ന വിചാരം കൃഷിക്കാരനില്ല. സൂക്ഷ്മമായി പരിശോധിച്ചാൽ ആയിരം പറ നെല്ലു് വിളയുന്ന നിലംതന്നെ ഉണ്ടായിരുന്നിരിക്കയില്ല. വിചാരിച്ചപോലുള്ള വിള ഉണ്ടായിട്ടില്ലായിരിക്കാം. കൂടുതൽ പാട്ടം സമ്മതിച്ചാലും യഥാർത്ഥസ്ഥിതി മനസ്സിലാക്കുമ്പോൾ ജന്മി കുറെയെങ്കിലും ഇളച്ചുകൊടുക്കുമെന്ന പ്രതീക്ഷ കൃഷിക്കാരന്നു ഉണ്ടായിരുന്നിരിക്കാം. അങ്ങനെ അമിതമായ ഒരു പാട്ടം കൃഷിക്കാരൻ സമ്മതിച്ചു കഴിഞ്ഞുവെന്നിരിക്കട്ടെ. പിന്നെ എന്താണു് സംഭവിക്കുന്നതു്? ബാക്കിയുള്ള പാട്ടമെല്ലാം കടമായി കണക്കാക്കി എഴുതിവയ്ക്കും. അക്രമമായ പാട്ടം നിശ്ചയിച്ചിട്ടുള്ളതിൻെറ ഫലമാണു് ഈ പാട്ടബാക്കിക്കടങ്ങളെന്നു ഇതിനകം സ്പഷ്ടമായി തെളിഞ്ഞിട്ടുണ്ടു്. വളരെ പ്രധാനപ്പെട്ട ഒരു കാര്യം ഈയവസരത്തിൽ എടുത്തുപറയണമെന്നുദ്ദേശിക്കുന്നു. ഈ സംസ്ഥാനത്തു് ഇന്നു നിലവിലുള്ള പാട്ടവ്യവസ്ഥകളെ സംബന്ധിച്ചു നമ്മുടെ മന്ത്രിമാരെ ചിലതു് മനസ്സിലാക്കിക്കേണ്ടതുണ്ടു്. ഈ സംസ്ഥാനത്തു് ഒരേ ഒരു ജില്ലയിൽ, അതായതു് മലബാർ ജില്ലയിൽ മാത്രമാണു് പാട്ടവ്യവസ്ഥയെ സംബന്ധിച്ചു ഒരു നിയമമുള്ളതു്. മലബാറിൽ മാത്രമാണു് മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിക്കുന്നതിന്നുള്ള പാട്ടക്കോടതികൾ ഏർപ്പെടുത്തിയിട്ടുള്ളതു്. ഈ പാട്ടക്കോടതികളിൽ ധാരാളം ഹരജികൾ ഫയൽചെയ്തിട്ടുണ്ടു്. ഇതിനകം ധാരാളം തീർപ്പുകളും ഉണ്ടായിട്ടുണ്ടു്. തലശ്ശേരിയിലും, ഹോസ്ദുർഗ്ഗിലും കൊയിലാണ്ടിയിലും മാടായിയിലും കണ്ണൂരിലുമെന്നുവേണ്ട, മലബാറിലെങ്ങുമുള്ള പാട്ട

[Sri T. C. Narayanan Nambiar] [22nd February 1955

കോടതികൾ നല്കിയിട്ടുള്ള വിധികൾ പരിശോധിച്ചുനോക്കിയാൽ ഇതുവരെ പിരിച്ചുപോന്നിട്ടുള്ള പാട്ടം വളരെ അക്രമപരവും അനീതിപരവുമായിരുന്നുവെന്നു തെളിയുന്നതാണ്. ഞാൻ നല്കിയിട്ടുള്ള dissenting minutes-ൽ ചില ഉദാഹരണങ്ങൾ എടുത്തു കാട്ടിയിട്ടുണ്ട്. നാല്പത്തിയഞ്ചു പറ നെല്ല് പാട്ടം നിശ്ചയിച്ചിരുന്ന ഒരു കേസ്സിൽ വെറും 15 പറ മാത്രമേ കൊടുക്കേണ്ടു എന്നാണ് തലശ്ശേരി പാട്ടക്കോടതി വിധിച്ചതു്. പന്ത്രണ്ടു കൊല്ലംമുമ്പേ 45 പറ പാട്ടം നിശ്ചയിച്ചിരുന്ന കേസിലാണ് 1954-ൽ വെറും 15 പറ മാത്രം കൊടുത്താൽ മതിയെന്നു പാട്ടക്കോടതി വിധിക്കുന്നതു്. അതിൻെറ അർത്ഥമെന്താണ്? അധികം നിശ്ചയിച്ചിട്ടുള്ള 30 പറയും അന്യായമാണ്, അക്രമമാണ്, കൃഷിക്കാരനു കൊടുക്കാൻ സാധിക്കാത്തതാണ് എന്നല്ലേ ഇതിൻെറ അർത്ഥം? ഇങ്ങനെ 12 കൊല്ലംകൊണ്ടു് കൃഷിക്കാരനു കൊടുക്കാൻ സാധിക്കാത്ത പാട്ടം നിശ്ചയിച്ചിട്ടു കൊടുക്കാത്തതെല്ലാം കടമായി കണക്കാക്കിവച്ചിരിക്കയാണ്. അക്രമമായ പാട്ടത്തിൻെറ ഫലമാണ് ഈ പാട്ടബാക്കി മുഴുവൻ എന്നു വളരെ വ്യക്തമാണ്. ആ അടിസ്ഥാനത്തിലാണ് പാട്ടബാക്കികളെല്ലാം വെട്ടിച്ചുരുക്കണമെന്നു ഞാൻ ആവശ്യപ്പെടുന്നതു്. പക്ഷെ അതു് ഗവമ്മേണ്ടു് സ്വീകരിക്കാൻ ഭാവമില്ല.

"ഇനിയൊരു കാര്യം—കടം മടക്കിക്കൊടുക്കാൻ ഗവമ്മേണ്ടു് ഇപ്പോൾ ഒരു തിയ്യതി നിശ്ചയിച്ചിരിക്കയാണ്—അതായതു്, ജൂലായ് മാസം 1-ാം തിയ്യതി. ഈ നാട്ടിലെ കാലാവസ്ഥയെ സംബന്ധിച്ചു, ഈ രാജ്യത്തു കൊയ്ത്തു നടക്കുന്ന സമയത്തെ സംബന്ധിച്ചു പ്രാഥമികമായ പരിജ്ഞാനമെങ്കിലും ഈ മന്ത്രിമാർക്കുണ്ടായിരുന്നെങ്കിൽ ഈ ജൂലായി മാസത്തിൽ കടം വീട്ടണമെന്നു പറയുകയില്ലായിരുന്നു. ജൂലായിമാസം കൊയ്ത്തുകാലമല്ല. മലബാറിൽ ജൂലായിമാസം വെള്ളപ്പൊക്കത്തിൻെറ കാലമാണ്. അതുകൊണ്ടു് നെല്ല് കൊടുക്കാൻ സാദ്ധ്യമല്ല, വേണമെങ്കിൽ വെള്ളം മുക്കിക്കൊടുക്കാം. തങ്ങൾ ഇങ്ങനെ കൃഷിക്കാരെ രക്ഷിക്കാൻ ഒരു നിയമമുണ്ടാക്കിയിരിക്കയാണെന്നു ആളുകളെ വിശ്വസിപ്പിക്കാനും അതിൻെറ പേരിൽ പ്രചാരവേല നടത്താനും മാത്രമാണ് ഈ ബില്ലുകൊണ്ടുദ്ദേശിച്ചിട്ടുള്ളതെന്നു ഇതുകൊണ്ടുതന്നെ സ്പഷ്ടമാണ്. ഒക്ടോബർ മാസം, അതായതു് കന്നിക്കൊയ്ത്തിൻെറ കാലം നിശ്ചയിക്കണമെന്നാണ് ഞാൻ ആവശ്യപ്പെടുന്നതു്. ഒക്ടോബറോ ഡിസെമ്പറോ ആയാൽ എന്താണ് തരക്കേടു്? പക്ഷെ ആ സൌജന്യംപോലും കാണിക്കാൻ മന്ത്രിമാർ തയ്യാറായിട്ടില്ല.

"വളരെ ആപല്ക്കരമായ മറെറാന്നുണ്ടു്. കർഷകത്തൊഴിലാളികളേയും ഉൾക്കുടിക്കാരേയുംകൂടി ഇതിൽ ഉൾപ്പെടുത്തണമെന്നു ഞാൻ ആവശ്യപ്പെട്ടു. അതും മന്ത്രിമാർ സ്വീകരിച്ചിട്ടില്ല. മലബാറിൽ ഉൾക്കുടിക്കാർ എന്നൊരു പ്രത്യേക തരക്കാരുണ്ടു്. 1930-ലെ മലബാർ കുടിയായ്മ നിയമത്തിൽതന്നെ അവരെ ഉൾപ്പെടുത്തിയിട്ടുണ്ടു്. ഈ നിയമത്തിൽ ഉൾക്കുടിക്കാരനെ പാടെ അവഗണിച്ചിരിക്കയാണ്. ഇതിൽ കൃഷിക്കാരനു കൊടുത്തിരിക്കുന്ന നിർവ്വചനം ഇപ്രകാരമാണ്:

'Agriculturist means a person who has an interest other than interest as a simple mortgagee in any agricultural or horticul tural land not being a land appurtenant to a residential building, etc.'

"ഇതിൽ 'not being a land appurtenant to a residential building' എന്നു പ്രത്യേകം പറഞ്ഞിരിക്കുന്നതുകൊണ്ടു് ഉൾക്കുടിക്കാരനെ ബാധിക്കുകയില്ല എന്നാണ് മനസ്സിലാക്കേണ്ടതു്. ഈ വ്യവസ്ഥ വളരെ അതൃപ്തികരമാണ്. അവരെ കൂടി ഉൾപ്പെടുത്തണമെന്നു ഞാൻ അപേക്ഷിക്കുന്നു.

"മറെറാരു പ്രധാന സംഗതി ധാന്യമായിട്ടുതന്നെ കൊടുക്കാനുള്ള വ്യവസ്ഥ വേണമെന്നുള്ളതാണ്. നെല്ലിന്നു 25 ക. വിലയാകുമ്പോൾ 50 ക. പണമായിട്ടു കൊടുക്കേണ്ട ഒരു നില പലപ്പോഴും ഉണ്ടാകുന്നുണ്ടു്. അതു് കൃഷിക്കാരനു അനുകൂലമല്ല. ധാന്യമായിട്ടു കൊടുത്താൽ മതിയെന്നുവയ്ക്കാൻ ഗവമ്മേണ്ടിന്നു എന്താണ് ആക്ഷേപം? ഗവമ്മേണ്ടു് ഇനിയെങ്കിലും ആ വ്യവസ്ഥകൂടി ഉൾപ്പെടുത്തണമെന്നു ഞാൻ അഭ്യർത്ഥിക്കുന്നു.

"ഇനി പറയാനുള്ളതു തവണയെ സംബന്ധിച്ചാണ്. നാലു തവണകളായി കൊടുക്കണമെന്നു പറയുന്നതു് അത്ര വലിയ സൌജന്യമൊന്നുമല്ല. പലിശയും മുതലിൻെറ എട്ടിലൊരു ഭാഗവും, അല്ലെങ്കിൽ ആകെയുള്ളതിൻെറ നാലിലൊന്ന്, ഏതു് കുറവോ അതു് ആദ്യതവണയായിട്ടു കൊടുക്കണമെന്ന് പറയുന്നുണ്ടു്. അഞ്ചുറുറുപ്പിക

22nd February 1955] [Sri T. C. Narayanan Nambiar]

മുതലായിട്ടും 90 ക. പലിശയായിട്ടും 590 ക. ഒരു കൃഷിക്കാരൻ കൊടുക്കാനുണ്ടെന്നു വെയ്ക്കുക. ഈ വ്യവസ്ഥയനുസരിച്ചു 145–160 ക. വരെ അയാൾ ആദ്യത്തവണയായി ജൂലായി മാസത്തിന്നുമുമ്പു കൊടുക്കണം. ഇതു് എങ്ങനെ ഉണ്ടാക്കാനാണു്. അതു കൊണ്ടാണു് ഞാൻ പറയുന്നതു് അടിസ്ഥാനപരമായ യാതൊരു രക്ഷയും ഈ നിയമം കൊണ്ടു കൃഷിക്കാരന്നു കിട്ടുന്നില്ലെന്നു്. സെലക്ട് കമ്മിററിയിൽവെച്ചു ഇതെല്ലാം ഞങ്ങൾ പറഞ്ഞിട്ടുള്ളതാണു്. പക്ഷെ അതൊന്നും മന്ത്രിമാർ സ്വീകരിച്ചില്ല. ഇപ്പോഴെങ്കിലും ഈ സഭയിലെ ബഹുമാനപ്പെട്ട മെമ്പർമാർ പറയുന്നതിനെ വിശ്വസിച്ചുകൊണ്ടും അവരുടെ നിർദ്ദേശങ്ങളെ സ്വീകരിച്ചുകൊണ്ടും, കൃഷിക്കാരുടെ ബുദ്ധിമുട്ടുകൾ തീർക്കണമെന്ന ആഗ്രഹം വാസ്തവത്തിൽ ഗവൺമെണ്ടിന്നുണ്ടെന്നു തെളിയിക്കണമെന്നാണു് ഞാൻ പറയുന്നതു്. അതിന്നുവേണ്ടി ഈ രണ്ടു മൂന്നു പ്രധാന കാര്യങ്ങളെങ്കിലും ഗവൺമെണ്ടു് ചെയ്യേ തീരൂ. ഈ അവസരത്തിൽ എനിക്കു ഇത്രമാത്രമേ പറയാനുള്ളൂ."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Mr. Deputy Speaker, Sir, I am the thirtieth speaker on this subject to-day and I am afraid I shall be standing in the way of the hon. Members discharging one of their important functions in the course of their daily routine, namely, lunch. So I shall try to be as brief as possible. This subject has been discussed over and over again—at least two or three times—during the course of two months. There has been much repetition of ideas and therefore in my reply also I have to repeat what I have already said. The discussion ranged over a very very wide field and also on matters not actually pertaining to the Bill. Hon. Members dealt very elaborately with rural indebtedness, how it must be tackled and so on. Some wanted that debts should be wiped out, some wanted that debts should be scaled down and some wanted provision for the repayment of debts in many more instalments. 1-10 p.m.

" The question of rural indebtedness and scaling down of debts cannot be discussed on this occasion. The Moratorium Act came in as a sort of emergency measure and with no intention of scaling down of debts. That has been made very clear even at the time of the introduction of the Moratorium Bill. The very term ' moratorium ' implies that it is an emergency measure, that it will cease to have force at the end of the stipulated period and that it may not be continued. A statement also was made that the Act was only temporary and that people should not expect that it would be extended. In spite of this, Government thought it fit to give some more facilities to debtors on account of the circumstances created by the working of that Act.

" I will explain the nature and function of this Bill by an illustration. An illustration always brings out the meaning of any provision clearly. That is why in Bills illustrations are given when a matter is not very clear. Some hon. Member referred to rich people, people owning motor cars and so on. I will take the illustration of a motor car. A sudden brake was applied when the Moratorium Act was passed. To meet an emergency, we apply the four-wheel brake. A brake was applied for the duration of one year. After that one year, the brake must be released and the car must be allowed to proceed. But we have not done that. Because of the applying of the sudden brake, the radiator of the car was damaged and certain complications took place. That is why we are

releasing the brake and driving the car slowly. We have to stop the car every ten or twelve miles, put in water in the radiator and then drive the car. That corresponds to the provision made in allowing a period of three years and four months. The emergency measure so dislocated the normal credit system that any sudden withdrawal of it will create more difficulties and more hardships. Only to mitigate the hardships of the people, the Government have provided for the repayment of the debt in equal annual instalments over a period of not more than three years. One other thing also has to be considered in this connection. The poor condition of the debtors is not peculiar to the Madras State alone. It is so in all the States of the Indian Union including the neighbouring States of Mysore, Hyderabad, Travancore-Cochin and Andhra. There is no such measure there. In this State only, we are having this measure and the people must therefore be thankful to the Government. Even though the moratorium period is over, the Government have taken this step of giving some concession by enabling the repayment of debt in instalments. Thus the people in the Madras State are having an advantage which the people in the other States are not at all having.

